www.tamilarangam.net

இதழ் : 24 நவம்பர் : '95

# கனவு

பக்கத்து அறைகள் :

ராஜேஸ்வரி பாலசுப்ரமணியம் ● மு. புஷ்பராஜன் ● பொ. கருணாகரமூர்த்தி
முத்தையாபிள்ளை நித்தியானந்தன் ● சி. சிவசேகரம் ● நா. கண்ணன்

♦ இசையும் அரசியலும் ♦ காலனிய எதிர்ப்பு


யமுனா ராஜேந்திரன்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# இன்னும் நினைவாக



முதலில் நான்
நீர்க்குடமும் கோலமும் தாங்கிய
வாசல்
பூம்பாதம்பட சிலிர்த்துக்
குனிந்தெழுந்த புற்கள்
சிகையுலர்த்துகையில் தெறித்து
காற்றில் மறைந்த நீர்த்துளிகள்

இப்போதுன் அக்காளுக்கு சொந்தமான
கருப்புஜாக்கட் டாலர் சங்கிலி
ஓரங்குலம் வளர்ந்திருந்த உன் இடக்கை
கட்டைவிரல் நகத்தால் நீ
என்வலக்கையில் கீறியதின் தழும்பு

ஊரெல்லாம்
நெல்லறுத்த கருக்கரிவாள்

தலையிலிடி விழுந்தும் கருகாத
முகம்
பாடையை சுற்றி அசைந்தாடி சென்ற
தென்னையோலைக் கிளிகள்

பிணமேட்டின் மேல் இப்போது
தானே
விளைந்திருக்கும் ஆமணக்குப் பூண்டுகள்

கவிதைகளுடன் பின்பு
கடைசியாகவும் நான்

உ.செ. துளசி

---

இதழ்: 24 ரூ. 8-00

---

தொடர்புக்கு :

சுப்ரபாரதி மணியன்

8 / 707C பாண்டியன் நகர், திருப்பூர் - 641 602.

---

ஓவியங்கள் : கே. கிருஷ்ண ராஜா (லண்டன்)

நிர்வாக ஆசிரியர்: எஸ்.ஏ. பாலகிருஷ்ணன், 12 ராமநாதபுரம் பிரிவு, திருப்பூர்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# இசையும் அரசியலும்

ஜில்லோ பொன்டேட கார்வோ: காலனிய எதிர்ப்பு சினிமா

**யமுனா ராஜேந்திரன்** (லண்டன்)

1992 ஆம் வருடம் ஏப்ரல் மாதத்திலிருந்து Battle of the Algiers படத்தை தேடிக் கொண்டேயிருந்தேன். அம்மாதத்தில் அப்படத்தின் இயக்குனர் இத்தாலியக் கலைஞர் பொன்டெ கார்வோ பற்றிய ஒரு விவரணப் படத்தை தாரிக் அலி வழங்கியிருந்தார். சேனல் நான்கு தந்த அந்த நிகழ்ச்சியில் பாலஸ்தீன அறிஞர் எட்வர்ட் சைத்தும் அரசியல் திரைப்படத் தயாரிப்பாளர் டேவிட் பட்ணமும் (Davidputtnam) இருபதாம் நூற்றாண்டு சினிமாவில் பொன்டே கார்வோவின் முக்கியத்துவம் பற்றி உரையாற்றியிருந்தனர். தொடர்ந்து பொன்டே கார்வோவின் படங்களில் இசையும் அரசியலும் பற்றிய கட்டுரைகள் எட்வர்ட் சைத்தும் Battle of the Algiers இசை அமைப்பாளரான எனியோ மோரிக் கோனும் எழுதிப்படிக்க நேர்ந்தது. அல்ஜீரிய விடுதலைப் போராட்டம் ஒருவருக்கு இரண்டு மாசுபடும் சிந்தனையாளர்களை ஞாபகப்படுத்தக் தகும். ஒருவர் பிரான்ஸ் பெருன் (Franz Feuan) மற்றவர் பவுள் பொர்த்தர். பொர்த்தர் முன்னுரை எழுதிய the wretched of the centre புத்தகம் மூன்றும் உலக அரசியலின் கிளாசிக் என்று போற்றப்படும் நூல். பெருன் இதனது ஆசிரியர் அதிஷ்டவசமாக இந்தப் பிரச்சினைகளின் சமகாலத்தன்மை யுடன் ஒரு விவாதக் கட்டுரையையும் வாசிக்க நேர்ந்தது. காதரி இஸ்மாயில் (Qadri Ismail) எழுதிய Rethinking the post colonial Nation: The usefulness of franz fenon. இலங்கை இனங்களைப் பற்றிய சர்வதேசீய ஆய்வு மையம் வெளியீட்டுக்கும், Introduction to Social Theory புத்தகத்தில் இடம் பெற்றிருக்கும் இக்கட்டுரைக்காக இப்புத்தகத்தை அன்புடன் அனுப்பித் தந்த மதிப்புக்குரிய எஸ்.வி. ஆருக்கு நான் நன்றி சொல்ல வேண்டும். இவை எல்லாவற்றையும் நான் ஒருங்கே குறிப்பிடக் காரணம் 1965 ஆம் ஆண்டு எடுக்கப்பட்ட இப்படம் இன்றைய விவாதங்களுக்கான பிரச்சினைகளை தன் காட்சிகளுக்குள் இசைக்குள் தர்க்கத்துக்குள் கொண்டிருக்கிறது என்று கண்டதின் ஆச்சர்யம்தான். படைப்பு நிரந்தரத்தை இப்படம் கொண்டிருக்கிறது என்று கண்டதின் சந்தோஷம் தான்.

1995 ஜுன் மாதம் இப்படத்தைப் பார்த்தே விட்டேன். எமது நாடுகளில் திரப்படச் சங்கங்களில் இருப்பவர்கள் இப்படத்தைப் பார்த்திருக்கவே கூடும். தமிழில் எதுவும் இப்படம் பற்றி விரிவாக எழுதப்பட்டதாக எனக்கு நிச்சயமில்லை. முக்கியமாக எழுதப்பட வேண்டியதின் அவசியத்தின் பாற்பட்டதே இவ்வறிமுகம். சினிமா நூற்றாண்டையொட்டிய உலக சினிமா வரிசைத் தேர்விலொன்றாக இப்படம் லண்டம் சேனல் நான்கு தொலைக்காட்சியில் திரையிடப் பட்டது. பொன்டெ கார்வோ இதுவரை 7 திரைப்படங்களைக் கொடுத்திருக்கிறார். இவைகளில் அதிகம் பேசப்படும் படங்கள் மூன்று. 1968ல் எடுக்கப்பட்ட காலனிய எதிர்ப்புப் படமான ணன்ங்ண்ங்ம்ஹக்ஹ! மார்லன் பிரான்டோ இதில் நடித்திருந்தார். வரலாற்றில் மாபெரும் சினிமா நடிகர் பிரான்டோ எனக் குறிப்பிடுகிறார். கார்வோ 1979 இல் எடுக்கப்பட்ட ogro படம் போஸ்க் பிரிவினை போராட்டம் (Basque seperatisus) பற்றிய சமரசமற்ற ஒரு திரைப்படம். மூன்றாவதாக மிக அதிகமாக பேசப்படும் படம் The Battle of Algiers அல்ஜிரிய விடுதலைப் போராட்டம் அரசியல் சினிமா காவியம் (The Epic of Political cinema) என்று இதை விமர்சகர்கள் குறிப்பிடுகிறார்கள்.

1966 ஆம் ஆண்டுக்கான வெனிஸ்சர்வதேச திரைப்படவிழா விருதையும் அதே ஆண்டு சினிமா விமர்சகர்கள் விருதையும் (Critics Award) இப்படம் பெற்றது அல்ஜீரியா 1962 ஆம் ஆண்டு ஜுலை மாதம் விடுதலை பெறுகிறது. இப்படம் 1950களின் பிற்பகுதியிலிருந்து 1960களின் முதல் மதங்கள் வரையிலான விடுதலைப்போராட்ட அனுபவங்களை தனது களமாக எடுத்துக் கொள்கிறது. படத்தின் முதல் காட்சி பிரெஞ்சு ராணுவம். அல்ஜீரிய விடுதலைப் போராளிகளின் இருப்பிடத்தை காண்பிக்கச் சொல்லி ஒரு முதியவரை சித்திரவதை செய்வதுடன் துவங்ககிறது. இறுதிக் காட்சி எக்காளப்பறை முழங்க காற்றில் குதித்துக் குதித்துக் களியாடும் ஒரு இளம் பெண்ணின் நடனமும் கோலமும் பரவ முடிகிறது. விடுதலைக்கு முன்பாக இரண்டு வருடங்கள் இருக்கவே படம் முடிகிறது. போராட்டம் தொடர்கிறது.

www.tamilarangam.net

படத்தின் முக்கியமான நபராக வருகிறவன் அலி. படிப்பற்றவன் வேலையற்ற தொழிலாளி. கலகக்காரன் பல்வேறு காரணங்களுக்காக பல்வேறு முறை சிறைசென்று நிறைய ஆண்டுகள் சிறையில் கழித்தவன். சிறையில் ஏற்பட்ட அரசியல் தொடர்பால் விடுதலைப் போராட்டத்துக்குள் இழுத்து வரப்பட்டவன். தலைமைக் குழுவில் ஒருவன் ஒரு சிறுவன். விடுதலைப் போராட்ட முன்னணியின் மத்தியக் குழுவுக்கும் பல்வேறு அடிமட்டத் தோழர்களுக்கும் பாலமாக இருக்கும் பிஞ்சு. 10-12 வயதே இருக்கும் குழந்தை. 1940களில் இந்தியாவில் கம்யூனிஸ்ட்டுக் கட்சி தடைசெய்யப்பட்ட போது, தலைமறைவு இயக்கத் தோழர்களுக்கு செய்தி சொல்பவர்களாகச் செயல்பட்ட கூரியர் (ஈர்ன்ழ்ண்ங்ழ்) போன்றவன். தேசிய விடுதலை அமைப்பைச் சேர்ந்த (எகச) மூன்று மத்தியக்குழுத் தோழர்கள். அவர்களது மனைவிமார்கள் மகள்கள்.

இந்தோசீனாவில் வியட்நாமில் பிரெஞ்சுக் காலனியாதிக்கத்திற் கெதிராகக் கிளர்ந்த வியட்நாம் கொரில்லாக்களை எதிர்கொள்வதில் பயிற்சி பெற்ற பிரெஞ்சு ராணுவ அதிகாரி மத்யூஸ் அல்ஜீரியாவுக்கு (FLN) விடுதலை அமைப்பை ஒடுக்குவதற்காக வந்து சேர்கிறார். அவருக்குத் தரப்பட்ட வேலை (FLN) தலைமையை வேரொடு அறுத்தெறிவது பிரெஞ்சுக் காலனிய அரசாங்கத்திற்கு உதவி செய்கிற உளவாளியாகச் செயல்படுகிற தன் சொந்த மனிதர்களையும் சுட்டுக் கொல்கிறான் அலி. பிரெஞ்சு ராணுவத்துடன் மோதுகிற வலிமை தனக்கில்லையென அவதானிக்கிறது. விடுதலை அமைப்பு விபச்சாரத்தையும் குழப்பத்தையும் போதை மருந்துப் பழக்கத்தையும் அல்ஜீரிய மக்களிடையில் தடைசெய்கிறது; விடுதலை அமைப்பு அங்கங்கே தனித்தனியே ராணுவ அதிகாரிகள் சுட்டுக் கொல்லப் படுகிறார்கள். திடீரென்று காய்கறி வாங்க வரும் பர்தாபோட்ட பெண் தருகிற துப்பாக்கியால் சுட்டுக் கொல்கிறார்கள். நீச்சலுக்குப் போவதாகச் சொல்லும் சிறுவன் அருகிலிருந்த குப்பைத் தொட்டியிலிருந்து துப்பாக்கியை எடுத்து ராணுவதிகாரியைச் சுட்டுவிட்டு சாவகாசமாக தப்பிப் போகிறான். தெருவில் சென்ற கிழவன் பிரெஞ்சுக் குடியேற்றக் காரர்களால் குற்றஞ்சாட்டப்பட்டு கைது செய்யப்படுகிறான். சிறுவர்கள் விபச்சாரத்தை செய்யும் மாமாவை நையப்புடைக்கிறார்கள். அன்றாட வாழ்வும் முழுவாழ்வும் தெருக்கள் கடைவீதிகள் அலுவலகங்கள், வீடுகள் தழுவி பிரெஞ்சுக்காரர்களுக்கும் அல்ஜீரிய மக்களின் விடுதலை வேட்கைக்கும் இடையில் இருக்கும் பதட்டம் படத்தின் Frame to Frame காட்சியாகிறது.

பிரெஞ்சுக் காரர்களுக்கான விடுதியொன்றில் குடித்துவிட்டு திட்டமிட்ட வகையில் வெடிகுண்டுப் பொதியை எடுத்துக் கொண்டு போய் அல்ஜீரிய மக்கள் குடியிருப்புக்குள் மத்தியில் வைத்து விட்டுப் போகிறார்கள் பிரெஞ்சுக் குடியேற்றவாதிகள். காலனியாதிக்க வாதிகள். குடியிருப்பு வெடித்துச் சிதறுகிறது. மழை பெய்து சுவர் கரைந்த கறைநிலைத்த சுவர்கள். செத்துக் கொண்டிருக்கும் முதியவர். பிஞ்சுக் குழந்தையின் உடல் எங்கும் சாவின் சவம் கொந்தளிக்கிறது கூட்டம். ஆர்ப்பரித்து எழுகிறது. நீதி வேண்டி ஊர்வலமாக அணிதிரள்கிறது. அலி தலைமையேற்று நடத்திச் செல்கிறான். ஒருவரும் சிறுவன் தலைமைக்குழு ஊர்வலத்தை நிறுத்தச் சொல்வதாகச் சொல்கிறான். இப்படியொரு முழு மக்கள் கூட்டம் கொல்லப்படும் என்கிறான். அங்கு வரும் தலைமைக்குழு பழிவாங்கும் பொறுப்பை தாம் ஏற்கிறோம் என்கிறது கூட்டம் கலைகிறது. திட்டம் தீட்டப்படுகிறது. அல்ஜீரியப் பெண்களின் நீண்ட கறுத்த தலைமுடி வெட்டப்படுகிறது. பர்தாக்கள் வீசப்படுகிறது. முடிக்கு சாயமேற்றப்படுகிறது. பிரெஞ்சுப் பெண்களாக வடிவமெடுக் கிறார்கள். மூன்று இடங்களில் வெடிகுண்டு வைக்க வேண்டும். பிரெஞ்சு இராணுவம் பெண்களை சோதனை போடுவதில்லை. பிரெஞ்சு பெண்களாயிருந்தால் கொஞ்ச நஞ்ச சந்தேகம் கூட இல்லை. பிரெஞ்சுக் கபே, நடனமண்டபம், விமான நிலையம் போன்றவற்றில் குண்டு வைக்க வேண்டும். சபைகளில் டைம் பாம் கொண்டு போகப்பட்டு பயணிகள் நடனக்காரர்கள், உணவருந்து பவர்கள் கால்களுக்கிடையில் புதைக்கப்படுகிறது.

இந்தக் காட்சிகள் ஒரு தேர்ந்த கலைஞனின் மேதைமையில் உருவான காட்சிகள். சுயமரியாதையும், விடுதலை வேட்கையும் கொண்ட மனிதர்களின் ஆத்ம உத்வேகத்தை ஜீவனுடன் படைப்பு செய்திருக்கிறது. இதுமட்டுமே தான் வாழ்வின் உண்மையா? இல்லை. நிச்சயமாக இல்லை. வெடிகுண்டு வைத்துப்போகும் இடங்களில் இருக்கிற மனிதர்களின்

www.tamilarangam.net


முகங்களில் இருக்கின்ற சந்தோசத்தை, ஐஸ்கீரிம் சாப்பிடும் குழந்தையின் கடவாய் எச்சிலை, நடனமாடும் காதலர்களின் அணைப்பை சாவின் பயமற்று சுவடுகளே தெரியாமல் தம் தமது உணர்வுகளில் மூழ்கியிருக்கும் மனிதர்களை அவர்கள் பிரெஞ்சுக்காரர்களே ஆயினும் மிகமிக மெதுவாக காமரா, பதிவு செய்கிறது. அடக்கு முறைக்கு எதிரான மனித னின் எதிர்ப்புணர்வை பதிவு செய்யும் கலைஞன் அதனோடேயிருந்த வரலாற்றின் துக்கத்தையும் அற்புதமாகப் பதிவு செய்திருக்கிறான்.

வெடிகுண்டுகள் வெடித்துச் சிதறுகிறது. குழந்தைகள் முதியவர் கள் பெண்கள் உள்பட மனித உடல்கள் சிதறுகின்றன. பிரெஞ்சு அரசாங்கம் நடுங்குகிறது. மக்கள் எழுச்சியை அடக்க விடுதலை அமைப்பை வேரோடு அழித்தொழிக்க இந்தோசீனாவில் ஒடுக்குமுறை அனுபவம் பெற்ற மாத்யூஸ் வருகிறார். மாத்யூஸின் பாத்திரம் மிக உறுதியான செதுக்கியெடுக்கப்பட்ட ஒரு பாத்திரம். அவருக்கு தனக்கு கொடுக்கப்பட்ட பொறுப்பு என்ன என்று தெரிகிறது. அரசியல் அவருக்கு இரண்டாம் பட்சம். ராணுவத்தின் நோக்கம் வெற்றிதான் என்கிறார். முடிவுகளை நிதானமாக திட்டமிட்டு எடுக்கிறார். பிரெஞ்சுக் காலனியாதிக்கம் தேவையா இல்லையா என்ற கேள்விகளுக்கு அவர் போவதில்லை. பிரெஞ்சு காலனியாதிக்கம் நிலைபெற வேண்டியதை பாதுகாப்பதே தன் வேலை என்று உணர்ந்திருக்கிறார்.

கொரில்லா அமைப்பு அமைப்பின் செயல் முறைபற்றிய திட்ட வட்டமான அபிப்ராயம் அவருக்கு இருக்கிறது. கொரில்லா அமைப்பை முறியடிப்பது ராணுவரீதியில் இயலாது என்கிறார். Investigation Infiltration தான் முக்கியம் என்கிறார். இச்சந்தர்ப்பத்தில் வெடிகுண்டு வைப்பு தந்திரோபாயத்திலிருந்து அரசியல் ரீதியான மக்கள் இயக்கங்களைப் பற்றிச் சிந்திக்கிறது எகச அல்ஜீரியா தழுவிய முழு வேலை நிறுத்தத்துக்கு அழைப்பு விடுக்கிறது. ஏழுநாள் தொடர்ந்து வேலை நிறுத்தம் அல்ஜீரியா ஸ்தம்பிக்கிறது. மக்கள் முழு ஒத்துழைப்பு கொடுக்கிறார்கள். வாகனங்கள் ஓடாது நிற்க தெருக்கள் வெறிச்சோடிக்கிடக்கிறது.

மாத்யீஸின் ராணுவம் வீடுகளை உடைத்துக் கொண்டு குடி யிருப்புக்களுக்குள் நுழைகிறது. ஒன்றிரண்டு அடிமட்டத் தொண்டர்கள் பிடிபடுகிறார்கள். அவர்களின் தகவலின்படி அடுத்த மட்டத் தோழர்கள் பிடிபடுகிறார்கள். கால்கள் உடைக்கப்படுகிறது. கட்டப்பட்டு தலைகீழாகத் தொங்கவிடப்பட்டு இரத்தம் சொட்டச் சொட்ட அடிக்கப்படுகிறார்கள். காது நரம்பில் எலக்டிரிக் சாக் வைக்கப்படுகிறது. சித்திரவதைக் கூடத்தில் ஓலம் நிறைகிறது. சுவரோடு சேர்த்து தோழர்கள் சுட்டுக் கொல்லப்படுகிறார்கள்.

இக்காட்சிகளின் Narration மிகத் தெளிவாக விரிவாக சித்தரிக்கப்படுகிறது. சித்திரவதை, சித்திரவதைகளைத் தொடர்ந்து தோழர்களின் Whereabouts கண்டுபிடிக்கப்படுகிறது. சிறையில் மாத்யூஸின் அலுவலகச் சுவற்றில் ஒரு Diagram இருக்கிறது.




123 எண்கள் தலைமையைச் சார்ந்தவர். 213 நபர்களுக்கு ஒன்று மட்டுமே தெரியும். 2-3 இருவர்க்கிடையில் தொடர்பிருக்காது. அதைப் போலவே கீழ்மட்டத்தவர்களுக்குள் தமக்குள்

www.tamilarangam.net

தொடர்பு இருக்காது. மேல் மட்டத்தவரில் தன் மட்டத்தவர்கள் சிலரைப் பிடித்து Interrogate செய்வதன் மூலம் ஒவ்வொருவராகப் பிடித்து இறுதியில் எல்லோரையும் பிடித்து அழிக்கலாம்.

தலைமைக் குழுவில், நான்கு பேரில் ஒருவர் பிடிப்படுகிறார். பத்திரிக்கையாளர் கூட்டம் "நீங்கள் வெடிகுண்டுகள் வைக்கும் பயங்கரவாதச் செயல் மூலம் அப்பாவி மக்களைக் கொள்கிறீர்களே. இது எந்த வகையில் விடுதலைக்கு உதவக்கூடியது?"

அவர் சொல்கிறார் "நப்பாம் குண்டுகளை வீசுகிற விமானங்களை எங்களுக்குக் கொடுங்கள். நாங்கள் வேண்டுமானால் வெடிகுண்டுகளை உங்களுக்குத் தருகிறோம். அப்போது தெரியும் யார் பயங்கரவாதிகளென்று." அந்தத் தோழர் சிறையில் தற்கொலை செய்து கொண்டதாக அறிவிக்கப் படுகிறது. தனது சட்டையைக் கிழித்து முறுக்கி அதன் மூலம் தூக்கு மாட்டிக் கொண்டு தற்கொலை செய்து கொண்டதாக அறிவிக்கப்படுகிறது. மாத்யூஸ் விசாரணையில் சித்தரவதை நியாயம் என்று பத்திரிக்கையாளர்களுக்கு உரை நிகழ்த்துகிறான்.

படத்தின் இறுதிக் காட்சிக்கு வருகிறோம். படத்தின் ஆரம்பத்தில் சித்திரவதைக்கு உள்ளான பெரியவரால் அழைத்துவரப்படும் ராணுவம் மிஞ்சியிருக்கும் தோழர்களின் இருப்பிடத்தைக் கண்டுபிடிக்கிறது. சரணடையும்போது வேண்டுகோள் விடுக்கப்படுகிறது. அலியும் சிறுவனும் பெண் தோழர்கள் சிலரும் மறைந்து கொண்டிருக்கும் அறை சூழப்படுகிறது. கால அவகாசம் தரப்படுகிறது. எவரும் சரணடைய விரும்பவில்லை. கொடுக்கப்பட்ட நேரத்தில் அந்தக் கட்டிடம் வெடித்துச் சிதறுகிறது. வானம் அண்டை குடியிருப்புகளில் வாழும் மக்களின் கூக்குரலில் நிறைகிறது. மற்றொரு மத்யக்குழுத் தோழர் எம்மாதிரியான செய்தியும் வெளியே சொல்லப்படாமல் வெடித்துச் சிதறும் சாவு அர்த்தமற்றது என கைது செய்யப்படுகிறார். மாத்யூஸின் திட்டப்படி விடுதலை அமைப்பின் பெரும்பாலான உறுப்பினர்கள் கொல்லப்படுகிறார்கள். அல்லது கைது செய்யப்படு கிறார்கள். பாரீஸிலிருந்து வந்த மேலதிகாரி விடைபெறுகிறார். மாத்யூஸ் பின்பொருநாள் தான் பாரீஸில் அவரைச் சந்திப்பதாகச் சொல்கிறார்.

படத்தின் இடையில் மாத்யூஸிடம் பத்திரிக்கையாளர் ஒருவர் கேட்கிறார். அல்ஜீரியா மக்களின் போராட்டம் பற்றியும் இங்கு நிகழும் கொலைகள் பற்றியும் பாரீஸில் ஏதேனும் எதிர்வினை உண்டா? அவர் சொல்கிறார். வழக்கம் போல சார்த்தார் கட்டுரை எழுதியிருக்கிறார். அல்ஜீரியரைப் போல சார்த்தரையும் நான் வெறுக்கிறேன்.

அல்ஜீரியா விடுதலைப் போராட்டத்துக்காக ஸார்த்தர் மட்டுமல்ல பெகுன் மட்டுமல்ல முழு அல்ஜீரியா மக்களும் கடல் அலை போல் மறுபடிதிரண்டெழுந்தார்கள். அழிந்து விட்டதாக நினைத்த அல்ஜீரிய விடுதலை இயக்கம் (FLN) மறுபடி உயிர் கொண்டெழுந்தது. இரண்டு வருடங்கள் தொடர்ந்து மக்கள் எழுச்சிகள் அலையடித்தன. விடுதலை வேட்கை வெல்ல முடியாதது என்பதை வரலாறு உணர்த்தியது. விடுதலைப் பதாகை எங்கும் வீசியடித்தது. காற்றில் விசிறி விசிறி நடனமாடியபடி எக்காள முழக்கமிட்டபடி ஆடிவந்தாள் ஒரு இளம் பெண். 1966 ஜூலை அல்ஜீரியா விடுதலை பெற்றது. பொன்டே கார்வோ சினிமாத்திரையில் ஒரு போராட்ட காவியத்தை உயிர்பெற்றெழச் செய்தான்.

காலனித்வ ஆதிக்கம் மக்கள் எழுச்சிகளைத் தூண்டியது. பின் காலனித்வ சமூகம் அந்த மக்கள் எழுச்சிகளின் ஊற்றுக்கண்ணாக ஆதர்ஸமாக இருந்த நிகழ்கால சமூகத்தை தட்டியெழுப்புவதில் எழும் பிரச்சினைகளைச் சந்தித்துக் கொண்டு இருக்கிறது. அல்ஜீரியாவில் இடது சாரிகள் இன்று வேட்டையாடப்பட்டுக் கொண்டு இருக்கிறார்கள். அல்ஜீரியா விடுதலைக்காகப் பாடுபட்ட சேகுவேராவின் ஆதர்ஸத்தில் எழுந்த இயக்கவாதிகள் மார்க்ஸியவாதிகள். இன்று இஸ்லாமிய மத அடிப்படை வாதிகளால் கொல்லப்படுகிறார்கள். இதைப் பற்றின படங்களும் இப்போது அல்ஜீரியாவிலிருந்து வருகிறது. அம்மாதிரியான படங்களில் ஒன்றுதான் இந்திய திரைப்பட விழாவில் திரையிடப்பட்ட படமான Babilqued City சுப்ரபாரதி மணியனின் அறிமுகமொன்று புதிய பார்வையில் வந்திருக்கிறது. அவர் பார்வை அல்ஜீரியாவின் சமகால அரசியல் யதார்த்தத்தை முழுமையாக விளக்கவில்லை என்பதே என் எண்ணம். அப்படம் அடிப்படையில் மத அடிப்படை வாதம் தொடர்பானது. மணியன் இன்றைய இளைஞர்களின் நிலை என்று குறிப்பிட்டிருப்பது அல்ஜீரியாவின் Specific ஆன நிலைக்கு அருகிலானது இல்லைஎன்றே கருதுகிறேன்.

www.tamilarangam.net

பொன்டே கோர்வோவின் ரசிகர்களில் (Admirer) ஒருவர் பாலஸ்தீனிய அறிஞர் எட்வர்ட் ஸைத். அவர் காணும் காரணங்கள் இரண்டு. ஒன்று இசை இவர் படங்களில் பெறும் அழுத்தம் தொடர்பானது. அடுத்தது ஸைத் முரண்படும் விஷயம் காலனிய எதிர்ப்புப் படத்தில் உஷ்ணத்தைக் காண்பிக்கிறார். கார்வோவின் படங்களில் முரண்பாடான நீரோட்டத்தையும் சிதைக்கப்பட்ட இலட்சியத்தையும், பிரதான கருவிக்கு எதிரான விரிவான விவரணங்களையும் காண முடியும் என்பதுதான். ஸைத் இரண்டாவதாகச் சொல்கிற இந்தப் பிரச்சினைதான் அவர் படத்தை வலுவாக்குகிறது என்று என்னளவில் நான் படத்தைப் பார்க்கும் போது உணர்ந்தேன்.

பிரெஞ்சு ராணுவ அதிகாரியின் ஆளுமையும், நேர்மையும், நம்பிக்கையும் சித்தரிக்கப்பட்ட விதம் எந்த வகையிலும் அல்ஜீரிய மக்களின் விடுதலைப் போராட்டத்தின் தார்மீகத் தன்மையை அவர்கள் வன்முறையின் வரலாற்றுத் தேவையைக் குறைத்து மதிப்பிடவில்லை. அழுத்தத்தையும் குறைத்துவிட வில்லை. மேலும் இத்தகைய சித்தரிப்புத்தான் படத்தின் ஜீவ ஓட்டத்துக்கு காரணமாகிறது.

ஒரு சம்பவத்தை ஸைத் குறிப்பிடுகிறார். Queimada படப் பிடிப்பில் நடைபெற்ற ஒரு காட்சி (ஆங்கிலத்தில் இப்படத்தின் பெயர் Buru!) மார்லன் பிராண்டோவுக்கு ஐந்து பக்க வசனம் உள்ள காட்சி அது. கார்வோ முற்றிலும் வசனங்களை விலக்கிவிட்டு வசன நிமிடங்கள் முழுக்கவும் இசையையே பிரதியாக வைத்து பிராண்டோவின் மௌன இயக்கத்தின் (Silent gestural performance) மூலம் அக்காட்சியைப் படமாக்கினார். அந்த செட்டிலிருந்த எலக்ட்ரீஷியன்கள் தச்சுத் தொழிலாளர்கள் வரை அக்காட்சியைக் கண்டு உற்சாகத்தில் வெடித்தார்கள்.

பொன்டே கார்வோவின் படங்களுக்கான இசை எப்போதுமே அவர்தான். பாக். ஸ்ட்ராவின்ஸ்க்கி, பிராம் போன்றோரின் இசையில் ஆழ்ந்த ஞானமுள்ளவர். Battle of the Algiers படத்தின் இசைக்கான ஒப்பந்தத்தில் கார்வோதான் முதலில் கையொப்பமிட்டிருந்தார். For A Few Dollers more படத்தைப் பார்த்தபின் அவ்விசையில் ஆசிர்வதிக்கப்பட்டு மோரிக்கோன் இசையமைக்கக் கேட்டுக் கொண்டார். படத்தின் இசை பற்றி இருவருக்கும் எப்போதும் நீண்ட சண்டை நடந்து கொண்டேயிருந்திருக்கிறது. இருவரது கற்பனைகளும் ஒரு புள்ளியில் இணைகிற நட்பை இவர்கள் கொண்டிருந்ததை மோரிக்கோன் நினைவு கூறுகிறார். ஸைத் சொல்கிறபடி கார்வோவின் அரசியல் என்பது இசை, இலக்கியம், சினிமா, கருத்துக்கள், கற்பனைகள் எல்லாம் உள்ளிட்டதுதான்.

ஸைத்தின் கருத்துக்களை The Battle of Algiers படத்தைப் பார்ப்பவர்கள் அனுபவிக்க முடியும். மூன்று இசை மாதிரிகளை (types) என்னால் உணரமுடிந்தது. 1. முஸ்லீம் பெண்களின் கூட்டு ஓலம். 2. பறை முழக்கம் போன்றதொரு எக்காளம் 3. அணி நடைப் பாட்டின் லயம். துயரத்தில் சாவில் இரங்கலில் எதிர்ப்புணர்வைக் காண்பிப்பதாகத் தொடங்கும். முஸ்லீம் பெண்களின் கூட்டு ஓலம். ஆண்களின் கலக உணர்வு சேரும்போது பறையொலியாக வீறு கொண்டேழுந்து, ராணுவ அணி நடையதுக்கு எதிர்த்திசையில் எழுகிறது. படத்தின் காட்சிகளின் மீது இசை படிந்து விடுகிறது. இசையே உணர்ச்சிகளைத் தருகிறது. இசையும் மனித நடவடிக்கையும் ஒன்றாக இணைகிறது. வசனங்கள் மிகமிகக் குறைவு. இசை கார்வோவுக்கு அனைத்துக் கலைக்கூறுகளையும் கொண்டிருக்கிறது. படத்தின் ஒழுமைக்குள் அரசியல் கருத்து இசை ஒளி எல்லாமுமே கரைந்து விடுகிறது. அரசியல் பற்றியும் முழு வாழ்வு பற்றியும் புரிந்துள்ள கலைஞனே இத்தகையதொரு நிலையை சினிமாவில் சாதிக்க முடியும்.

காத்ரி இஸ்மாயிலின் பிரான்ஸ் பெருனின் அல்ஜீரியா விடுதலைப் போராட்ட எழுத்துக்கள் பற்றிய மறுபடிப்பு, விடுதலைக்குப் பின் குணசமூகங்களில் எழுந்திருக்கும் பல்வேறு பிரச்சினைகளை 1980 களுக்குப் பின்னே ரஷ்ய கிழக்கு ஐரோப்பிய அனுபவங்களின் பின்னணியில் ஆய்வு செய்கிறது. The Battle of Algiers படத்தில் வெடிகுண்டு வைப்பதிலிருந்து போராட்டத்தை மக்கள் மயப்படுத்துவதான அரசியல் பற்றிய விவாதங்கள் படத்தில் வருகிறது. பெருன் சொல்கிற புரட்சிகர அறிவு ஜீவிகளின் பிரக்ஞையுள்ள அதிகாரம். ஒற்றைக் கட்சியாட்சி போன்றவை இன்று தீவிரமாக விவாதிக்கப்படும் விஷயங்கள்.

www.tamilarangam.net

இப்படியான விவாதங்கள் வியட்நாம், சீனா, டுனீஷியா அல்ஜீரியா போன்ற நாடுகளிலிருந்து வரும் திரைப்பட உலகத்திலும் நிகழ்கிறது. The Battle of Algiers, Bab il qued city, The Golden Horse போன்ற படங்கள் அத்தகையவை. டுனீசியப் படமான The Golden Horse சமூகமாற்றத்துக்கான போராட்டத்தில் ஈடுபட்ட ஒரு மார்க்ஸிஸ்ட் பேராசிரியர் தனது கருத்துக்களின் மேல் கொண்ட நம்பிக்கைகளை இழந்துவிட முடியாமல் தற்கொலை செய்து கொள்வதைச் சித்தரிக்கிறது.

குளியலறையில் செவரில் தண்ணீர் கொட்ட பிளேடினால் கபத்தை அறுத்துக் கொண்டு மரணமுறுகிறார் அவர். அடுத்த காட்சியில் பரந்த கடற்கரை சிமெண்டுச் சாலையில் ஒரு பக்கம் புதர் களும் மறுபக்கம் ஆர்ப்பரித்து எழும் கடலலைகளின் இடையிலும் திமிர்கொண்டெழுந்து இடையறாது ஓடிவரும் குதிரையின் காலடிக் குளம்போசை. அந்த ஓசை கேட்டுக் கொண்டேயிருக்கும்.

---

## புதிய நூல்கள்

- ♣ காலச்சாளரம் : ராஜஸ்ரீகாந்தன் : சிறுகதைகள் - (எழுத்தாளர் கூட்டுறவு பதிப்பகம், இலங்கை)
- ♣ சொல்லப்படாத நிஜம் - சா.கந்தசாமி; சிறுகதைகள்
- ♣ நாட்டுப்புற பாடல்கள் - தொகுப்பு டாக்டர் சண்முகசுந்தரம் ரூ.50.
- ♣ பெண்ணியமும் கலை இலக்கியப் பிரதிகளும்: - தொகுப்பு: சண்முகசுந்தரம் (வி.சரோஜா, சத்தியம், மணவாளன், விண்டா கிறிஸ்டி, மங்கை, சு.வேங்கடராமன், சூரியதீபன், செண்பகம் ராமசாமி, நாகநந்தினி கட்டுரைகள்) ரூ.30 - இவற்றின் வெளியிட்டாளர்: காவ்யா, பெங்களூர்,
- ♣ காத்திருப்பு : ரவிசுப்ரமணியன் : கவிதைகள் - (அன்னம், சிவகங்கை : ரூ.20)
- ♣ புதுச் சிற்பவியல் : பியத்மோந்தியாவன் நியோபிளாஸ்டிச்சம் தேனுகா (அன்னம் ரூ.30)
- ♣ யாருடனும் இல்லை. அழகியசிங்கர் கவிதைகள் - (விருட்சம், சென்னை-33; ரூ.20)
- ♣ நவீனத் தமிழும், பின் நவீனத்துவமும் :கட்டுரைகள் - தொகுப்பு தமிழவன்: வெளியீடு : காவ்யா ரூ.50 (அ.மாரியப்பன், பா.வெங்கடேசன், ஞானி, பஞ்சு, இந்திரன், இ.ராமசாமி ப.கிருஷ்ணசாமி, நாகநந்தினி, ஜி.கே.ராமசாமி, நாகார்ஜுன், எஸ்.சண்முகம், சண்முகசுந்தரம் கட்டுரைகள்)
- ♣ ஒரு காதலின் ரகசியம் இ.எஸ்.தேவசிகாமணி சிறுகதைகள் (நர்மதா பதிப்பகம், சென்னை-17 ரூ.30)
- ♣ புலம் பெயர்ந்த தமிழர் நலமாநாடு: மலர்: ரூ.40 - (விடியல் 3 மாரியம்மன் கோவில் வீதி, உப்பிலிபாளையம் கோவை-15.)
- ♣ மறுபக்கம் எஸ்.ஸார்சி. சிறுகதைகள் - (பானுச் சந்திரம் பதிப்பகம், அக்ரகாரம், தர்மநல்லூர் அஞ்சல் 60.6103
- ♣ ஐம்பது கவிதைகளும் 500 கமாண்டோக்களும்: தொகுப்பும் மொழிபெயர்ப்பும் யமுனா ராஜேந்திரன் - (ஸ்னேகா, சென்னை 600 014.)
- ♣ விருதுகள் : கோவை கஸ்தூரி சினீவாசன் அறக்கட்டளையின் 1993-94 ஆண்டுகளுக்கான சிறந்த நாவல்கள் பரிசு 1. நாஞ்சில் நாடனின் 'சதுங்கக் குதிரை' 2. வே. சபாநாயகம் 'ஒரு நதி ஒடிக் கொண்டிருக்கிறது'.
- ♣ பிர்லா பவுண்டேசனின் சமஸ்கிருதி சம்மான் விருது ஜெயமோனுக்கு. தமிழுக்கு இவ்விருது முதல்தடவையாக கிடைத்துள்ளது.

www.tamilarangam.net

# அந்நியர்கள்

***ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம்*** (லண்டன்)

சந்திரசேகரம் ஆத்திரத்துடன் கதவையிழுத்துப் பூட்டினான். வழக்கமாக வாசல்வரும் மனைவியோ "பை பைப்பா" என்று கைகாட்டி விடை கொடுக்கும் சின்ன மகன் மோகனோ இன்று மௌனமாக இருந்தார்கள்.

சந்திரசேகரம் தெருவில் இறங்கினான். நவம்பர் மாதக் குளிர்காதில் உறைத்தது. காற்று பயங்கரமாக இருந்தது. இலையுதிர்காலத் தாண்டவம் தெருவை மறைத்திருந்தது. பழுத்த இலைகள் பாதையில் பாய்விரித்துக் கிடக்க இரவு பெய்த மழை இலைகளில் படிந்து இவன் காலைவைக்கும் போது சதக் சதக் என்று சத்தத்தையுண்டாக்கியது.

அவன் மனமும் இப்படித்தான் இருக்கிறது. சூத்திரம் படிந்த மனத்தில் எரிச்சல் இரத்தம் கொட்டுகிறது. யாரை நொந்து கொள்வது?

மனைவி தேவகியை அடித்திருக்கக்கூடாதுதான். பெரிய மகன் குமரனையும் கட்டாயம் அடித்திருக்கக் கூடாது தான். ஆத்திரத்தில் அடித்து விட்டான். நவம்பர் மாதக்குளிர் உடம்பில் உறைக்க உறைக்க் உள்ளார்ந்த கோபக் கனல் குறைந்து மனைவியும் மகனிலும் பரிதாபம் வருகிறது.

வேலைக்குப் போகாமல் வீட்டுக்குப் போய் அவர்களிடம் மன்னிப்புக் கேட்க வேண்டும் போலிருக்கிறது. தெருவில் போன கார் இவனுக்கு நீரடித்து விட்டுப் போகிறது. கவனமாக நடக்க வேணும். சந்திரசேகரம் தெருவில் ஓரத்தில் நடக்காமல் தூர விலகிப் போகிறான். காலை ஏழு மணியாகிவிட்டது. லண்டன் இன்னும் இருளில் மூழ்கிக் கிடக்கிறது.

லண்டன் இரவின் இருட்டில் மட்டும்தானா மூழ்கிக்கிடக்கிறது?

என்னைப்போல் எத்தனையோ பேர் மனங்கள் எத்தனையோ பேர் எத்தனை துயரங்களில் மூழ்கிக் கிடக்கிறார்கள்? வாய் விட்டுச் சொல்லிக் கொள்கிறான்.

தேவகி கடந்த இரண்டு மாதமாக அழுத கண்ணும் சிந்திய மூக்குமாக இருக்கிறாள். மூன்று தமயன்கள். இரண்டு தம்பிகள் ஒரு தமக்கை இரண்டு தங்கைகள் என்ற பெரிய குடும்பத்தின் ஒன்பது பிள்ளைகளில் ஒருத்தியாகப் பிறந்தவள் தேவகி.

"நவக்கிரகங்கள் மாதிரி ஒன்பது நல்ல குழந்தைகளைப் பெத்திருக்கிறாள்" என்று சொன்னாராம் ஊர்க்குருக்கள். தேவகியின் அம்மாவும் அப்பாவும் உள்ள நிலத்தில் உழைத்து, சின்னக்கடை வைத்து ஒன்பது குழந்தைகளை வளர்க்க ஓடாய் உழைத்தவர்கள்.

இன்றைக்கு?

சந்திரசேகரம் அண்டர் கிரவுண்ட் ரெயிலை அடைந்து விட்டான். பிக்கடெலி லைன் எடுத்து சென்ட்ரல் லண்டனுக்கு வேலைக்குப் போக வேண்டும். இந்த 'மனிதம் இழந்த' மனிதர்களுக்குள் வேலை செய்ய ஓடாமல் ஊருக்குப் போய் மாமியின் மரவள்ளித் தோட்டத்தில் கையில் வீரகேசறிப் பேப்பருடன், ஒரு பின்னேரத்தைக் கழிக்கும் காலம் எப்போது வரும்?

ரெயின் இருளைப் பிளந்து கொண்டு குகைக்குள் விரைகிறது. இந்த ரெயின் அடுத்த ஸ்டேசனில் நிற்கும். சந்திரசேகரம் போன்ற தமிழ் அகதிகளின் வாழ்க்கை எங்கே போய் நிற்கும்?

சுவிட்சர்லாந்தில் தமிழ் அகதிகளைத் திருப்பி அனுப்ப ஏற்பாடு செய்கிறார்கள். அவர்கள் தமிழ் அகதிகளைத் திருப்பி யனுப்பினால் இங்கிலாந்து அரசாங்கமும் திருப்பியனுப்பும் எங்கே போவது?

நவக்கிரகங்களில் நான்கு உயிர்களை இலங்கைச்சிங்களப் பயங்கரவாதம் பலிவாங்கிக் கொண்டது. ஒரு தமக்கையையும் குடும்பத்தையும் முஸ்லீம் துவேசம் துண்டு துண்டாக வெட்டிவிட்டது.

'உயிர்போனாலும் நான் இலங்கைக்குப் போக மாட்டேன்'. தேவகி இப்படித்தான் விம்மியழுதாள். அவளின் கடைசித் தம்பியை துரோகி என்று சொல்லி ஒரு தமிழ் இயக்கம்

www.tamilarangam.net

கொலை செய்து விட்டது. அந்தத்துயரில் கடந்த இரண்டு மாதங்களாக அழுது வடிந்து கொண்டிருக்கிறாள்.

அவளை அடித்திருக்ககூடாது. பெண்மையைப் புண்படுத்தும் ஆணாகிய அவனுக்குப் பிடிக்காது. தேவகியைக் காதலித்துக் கல்யாணம் செய்து கொண்டவன் அவள் இவனின் சொல்லை மீறாதவள்.

இரவு நடந்த வாக்கு வாதம் முற்றி அவளை இவன் அடித்து விட்டான்.

யாரையோ அடிக்க வேண்டிய ஆத்திரம் அலறிப் படிந்திருக்க வேண்டாமே?

ரெயின் ஒரு ஸ்ரோப்பில் நிற்கிறது. இரவு வேலை செய்த தூங்கு மூஞ்சு முகங்கள், காலை வேலைக்கு ஓடிக் கொண்டிருக்கும் அவசரமான முகங்கள். ஏனோ தானோ என்று இந்த உலகத்தில் ஊசலாடத் தங்களை இந்த ரெயினில் ஏற்றிக் கொள்ளும் உணர்ச்சியற்ற முகங்கள். இப்படி எத்தனை முகங்களை ஒவ்வொரு நாளும் சந்திக்கிறான்?

இவர்களில் எத்தனைபேர் என்னைப்போல் தமிழ் அகதியாய் இருப்பார்கள்? இவர்களுக்கு என்று ஒரு நாடு, ஒரு மொழி, ஒரு கலாச்சாரம் ஒரு வாழ்க்கை முறையிருக்கும் தானே?

சந்திரசேகரம் நினைவுகளுடன் முகத்தைத் திருப்பிக் கொள்கிறான். வேலைக்குப் போக இன்று அரைமணித் தியாலம் பிந்தும். ஒரு இந்திய குஜராத்தி பட்டேலின் கடையில் வேலைசெய்கிறான். கஷியர் வேலை. காலையில் போய்ப் பின்னேரம் எட்டுமணித் தியாலம் வரைக்கும் ரில் அடிக்கவேண்டிய வேலை. கத்திரிக்காய், முருங்கைக்காய், புடலங்காய்களைப் பார்த்தலுத்து விட்டது. வேலை முடிந்து வீட்டுக்கு வந்து அயர்ந்து நித்திரை செய்தால் கனவில் புடலங்காய் பாம்புகளாகவும், பூசணிக்காய் பூதங்களாகவும் வந்து தொலைக்கின்றன.

என்ன வாழ்க்கை இது? பகலைக் காணாத வாழ்க்கை. காலை எட்டு மணிக்குத் தொடங்கி இரவு எட்டு மணி வரைக்கும் ரஞ்சித் பட்டேலுடன் மாரடித்துவிட்டு வீட்டுக்கு இரவில் போய்ச் சேர்ந்தால் தேவகியின் சோர்ந்த முகம் எரிச்சலையுண்டாக்குகிறது. என்ன வாழ்க்கையிது?

கிழமையில் ஆறு நாட்கள் வேலை. அந்தச் சம்பளத்தில் வாடகை கட்டி குடும்பம் பார்த்து, ஊரிலுள்ள ஒன்றிரண்டு உறவினர்களைப் பார்த்து எவ்வளவு செய்ய வேண்டிக்கிடக்கிறது?

தேவகி கட்டிக் கொடுத்த சாப்பாட்டுப் பார்சல் இன்னும் கையிலிருக்கிறது. புட்டும் பொரியலும் செய்து வைத்திருப்பாள். காலையில் எழும்பி இவனுக்கு ஏதும் செய்து கொடுப்பாள். பின்னேரம் அவன் சோர்ந்த முகத்துடன் போகும்போது குழந்தைகள் இவனுக்குத் துன்பம் கொடுக்காமற் பார்த்துக் கொள்வாள்.

இரவும் அப்படித்தான். ஆனால் குமரன்தான் சந்திர சேகரத்தின் கோபத்தைத் தூண்டிவிட்டான்.

குமரனுக்கு ஒன்பது வயதாகிறது. நான்கு வருடம் தகப்பனைப் பிரிந்திருந்தவன். குமரனுக்கு நான்கு வருடங்களாக இருக்கும்போது சந்திர சேகரம் லண்டனுக்கு வந்தான். அப்போது தேவகி இரண்டு மாதக் கர்ப்பவதி. அந்தக் குழந்தையை நான்கு வருடங்களுக்குப் பின்தான் லண்டனில் கண்டான். இவன் சொல்லியபடி இரண்டாவது மகளுக்கு 'கார்த்திகா' என்று பெயர் வைத்தாள் தேவகி. கடைசி மகன் இப்போதுதான் ஆறுமாதம். மழலையில் 'பை பைப்பா' என்று சொல்லத் தொடங்கிவிட்டான். அன்பான மனைவி. அருமையான மூன்று குழந்தைகள். ஏதோ ஒரு உழைப்பு இத்தனையும் இருந்தும் நிம்மதிதானில்லை. எத்தனை தமிழ் அகதிகள் இத்தனையும் இருந்தும்நிம்மதிதானில்லை. எத்தனை தமிழ் அகதிகள் நிம்மதியாக இருக்கிறார்கள்? உலகமெல்லாம் நாடோடிகளாகத் திரிகிறார்களே? அறிமுக அட்டைகள் பேப்பர்கள்தானே? தொடர்ச்சியான வாழ்க்கைத் தொடரிலிருந்து துண்டாக்கப்பட்டவர்கள் தானே தமிழ் அகதிகள்.

மகன் குமரனுக்கும் அவனுக்கும் நான்கு வருடங்கள் நெருக்கமான தொடர்பு என்று என்ன இருந்தது? லண்டனிலிருந்து அனுப்பும் பிறந்த தின வாழ்த்துக்களும் பரிசுகளும் ஒரு தகப்பனின் பாசத்தை ஈடுசெய்து விட முடியுமா?

போன வருடம் தேவகி இரண்டு குழந்தைகளுடனும் வந்து இறங்கிய போது மூத்த மகன் தகப்பனை அந்நியனாகப் பார்த்தான். இரண்டாவது மகள் 'இவர் யாரம்மா' என்று தாயைக்

www.tamilarangam.net

கேட்டாள். இவனுக்குக் கண்கள் கலங்கி விட்டன. நான்கு வருடங்கள் இந்தக் குழந்தைகளுடன் பட்ட கஷ்டம். இவர்களை உயிருக்கு உயிராகப் பார்த்த தமயனையிழந்த சோகம் அவள் முகத்தில் ஒட்டிக்கிடந்தது.

மூத்தமகன் குமரன் இன்னும் ஒதுங்கியே நடந்த கொள்கிறான். மகள் கொஞ்சம் பரவாயில்லை. இவன் கதைப்புத்தகம் வாசித்துக் காட்டுவதில் மெய் மறந்து போகிறாள். மாமாக் களையிழந்த சோகம் அந்தப் பிஞ்சு மனத்தில் படர்ந்திருக்கலாம். ஆனால் இவன் தன்னால் முடிந்த வரையில் மிகவும் கஷ்டப்பட்டு அந்தக் கறைகளைத் துடைக்க நினைக்கிறான்.

இனவாதம் வெடிக்கும் லண்டன் வாழ்க்கையில் நிம்மதியை அவன் தன் குடும்பத்திடம் எதிர்பார்க்கிறான். இழந்து விட்ட தம்பிக்காகத் தேவகி இன்னும் கண்ணீர் விட்டுக் கொண்டிருக்கிறாள்.

தமிழராகப் பிறந்த கொடுமையை அவனாற் சில வேளை சகிக்க முடியாமலிருக்கிறது. இந்தியாவில் எத்தனை குடிகள்? அவர்கள் ஒருத்தரையொருத்தர் இனக்கொலை கொலை செய்கிறார்கள்தான். ஆனாலும் இலங்கைத் தமிழனுக்கு நடக்கும் கொடுமை உலகில் எந்தப் பகுதியில் நடக்கும்?

இன்னொரு ஸ்ரேசன் வந்துவிட்டது. தூரத்துக்குப் போகும் கல்லூரிகளுக்கும், பாடசாலைகளுக்கும் போகும் மாணவ-மாணவியர் கூட்டம் திமுதிமுவென்று ஏறிக் கொள்கிறார்கள். உலகை உதாசீனம் செய்யும் இளமைத் துடிப்பில் கலகலவென்று பேசிக் கொள்கிறார்கள்.

இவனுக்குப் பக்கத்தில் ஒரு பையன் உட்காருகிறான். ஆசியப் பையனாக இருக்கிறான். இவனுக்கு அந்தப் பையனைக் கண்டதும் இறந்துவிட்ட தன் இளம் மைத்துனனின் ஞாபகம் வருகிறது.

மாமியாரின் அருமையான செல்ல மகன். செந்தில் என்ற பெயர். ஏழு எட்டு வயதிலேயே தன் திறமையைக் காட்டிக் கொண்டவன். தேவகியின் தமயன் ஒருத்தன் திறமையாகக் கவிதை எழுதுவான். பாம்புபோல் நெளிந்து போகும் ஊர்த் தெருக்களின் உறவாடலுக்கு உயிர் கொடுத்து அவன் கவிதை எழுதுவான். ஆச்சியின் பரட்டைத்தலை, அப்புவின் பல்லில்லாச் சிரிப்பு என்பன அவன் கவிதையில் அமரத்துவம் பெற்றவை. கடைசிப் பையன் செந்தில் அந்தக் கவிதைகளுக்கு இசை கொடுத்துப் பாடுவான்.

தேவகி தம்பியின் பாட்டில் சிலிர்த்துப் போவாள். சந்திரசேகரம் தேவகியை விரும்பிய நாளில் அவர்கள்தெருவில் அடிக்கடி சைக்கிளிற் போவான். அப்போது செந்திலின் கீச்சுக் குரற்பாட்டும் தேவகியின் கலகலவென்ற சிரிப்பும் நெஞ்சில் நிறையும் நினைவுகளாயின.

செந்திலையும் கொலை செய்து விட்டார்கள். இவன் பெருமூச்சு விட்டான். செந்தில் இறந்த துக்கம் தேவகியாற் தாங்க முடியாதுதான் அதற்காகக் குடும்பக் கடமைகளை, குழந்தை பார்க்கும் பொறுப்பை மறக்கலாமா?

இது தான் நேற்றைய சண்டைக்கும் கடைசியில் சந்திர சேகரம் மனைவியையும் மகனையும் அடிக்குமளவுக்கு வந்து தொலைந்தது. இலங்கையின் கொடிய இனத் துவேசமும், கொலைகளும் சாதாரண மனிதர்களின் வாழ்க்கையில் எத்தனை மாற்றங்களையுண்டாக்கி விட்டன.

கடைக்குள் நுழைகிறான். ரஞ்சித் பட்டேல் நேரத்தைப் பார்த்துக் கொள்கிறான். இவனுக்குத் தெரியும்தானே தான் கொஞ்சம் பிந்தி வந்திருக்கிறேன் என்று. ஏன் அவர் அதைச் சாடை மாடையாகச் சொல்லிக் காட்ட வேண்டும்? இவன் காலை வணக்கம் சொன்னான். ரஞ்சித் பட்டேல் தனக்குத் தெரியாத மாதிரி ஏதோ அடுக்கிக் கொண்டிருந்தார். காலையிற் பால் வாங்கும் பெண்கள், இனிப்பு வாங்கும் பாடசாலைச் சிறார்கள், பத்திரிகைகள் வாங்கும் ஆண்கள், என்று கடை நிரம்பத் தொடங்கிவிட்டது. சந்திர சேகரம் வேலையில் மூழ்கிவிட்டான்.

'டாடி' தன் ஒய்யாரமான குரலில் பட்டேலின் மகள் மீனா தகப்பனைக் கூப்பிடுகிறாள். ரஞ்சித் பட்டேலின் குடும்பம் கடைக்கு மேல் மாடியிற் குடியிருக்கிறார்கள். இரண்டு பெண்களும்,

www.tamilarangam.net

இரண்டு பையன்களும், நெல் மூட்டை மாதிரி ஊதிப்போன திருமதி பட்டேலுமாக அவர்கள் குடும்பம் மேலே வாழுகிறது.

பட்டேல் மகள் மீனா பட்டேல், சந்திரசேகரத்தைத் திரும்பியும் பார்க்காமல் தகப்பனிடம் போய் ஏதோ தன் குஜராத்திப் பாஷையிற் சொல்கிறாள். மீனா பட்டேலுக்கு இருபது வயது. யூனிவர்சிட்டியில் படிக்கிறாள். ரஞ்சித் பட்டேலுக்குத் தன் பெரிய மகளில் பெரிய பெருமை. இந்திய பண்பாட்டுடன் வளர்கிறாளாம். குஜராத்தி பாஷை பேசுகிறாளாம்.

மீனா பட்டேல் 'குட்பை டாடி' சொல்லி விட்டுப் போகிறாள். இங்கு வந்திருக்கும் இந்திய பாகிஸ்தானிக் குழந்தைகள் தங்கள் மொழிகளைப் பேசிக் கொள்கிறார்கள். தமிழ்க் குழந்தைகளில் எத்தனைபேர் தமிழ்ப் பேசுகிறார்கள்? எத்தனை பேரைக் கோயிலில் காணலாம்? ஏன் தமிழ்க் குழந்தைகள் தங்கள் கலாச்சாரத்தை அன்னியமாக்கி விட்டார்கள். சந்திர சேகரத்துக்குக் கோபம் வருகிறது. ஏன் கோபம் வந்தது. யாரிற் கோபம் வந்தது என்று தெரியாது.

பட்டேல் மனைவி மிகவும் கண்டிப்பானவள். அவள் தலைமையில் குழந்தைகள் மிகவும் கண்டிப்பாக வளர்க்கப் படுகிறார்கள். தாய் நன்றாக இருந்தால் குழந்தைகளும் நன்றாக இருக்கும்தானே?

தாயைப் போல பிள்ளை, நூலைப்போல சேலையில்லையா? சந்திரசேகரத்துக்குத் தேவகியில் கோபம் வருகிறது. மகனில் உள்ள கோபத்துக்குக் காரணம் தேவகிதானே? அவன் கோபத்தில் சாமான்களை ஏனோ தானே என்று போடுவதைப் பட்டேல் கோபத்துடன் பார்க்கிறார்.

சமுதாயம், அரசியல் போராட்டங்கள், தனிமனித துயர்கள், குடும்பப் பிரச்சினைகள் சந்திர சேகரம் சாதாரணமனிதன். சாதாரணமாக வாழ்ந்து முடிக்கப் பார்க்கிறான். ஆனால் மகன் இப்போதே முரண்டு பிடிக்கிறானே.

அவனுக்கு-மகனுக்கு இப்போது தான் ஒன்று வயதாகப் போகிறது. அதற்கிடையிலேயே தகப்பனுடன் தூரமாக நின்று கொள்கிறானே ஏன்!

நான்கு வருடம் நான் பிரிந்திருந்தது தப்புத்தான். ஆனால் வேண்டுமென்றா ஓடி வந்தேன். தமிழனாகப் பிறந்த ஒவ்வொரு ஆண்மகனும் மிருகமாக வேட்டையாடப்படும் போது உயிர்த்தப்பித்தானே ஓடி வந்தேன். அப்படி வராமலிருந்திருந்தால், இப்போது குமரனுக்குத் தகப்பனே இருந்திருக்காதே.

சந்திரசேகரம் யோசனையுடன் வேலை செய்கிறான். இவன் மகன் எங்கேயெல்லாமோ போய்வருகிறது. மன நிபுண வைத்தியர்கள் சொல்வது போல் இவன் மகனும் இவனுடன் ஏதோ ஒரு காரணத்துக்காகப் பிணக்கு செய்கிறானா?

'காமவெறியும் கொலை வெறியும் பிடித்த சிங்களராணுவம் சுற்றியிருக்கும் ஊரில் தனது தாயைத் தனிமையாக விட்டுவிட்டு நான் வெளிநாடு ஓடிவிட்டதாக நினைக்கிறானா?'

'தன் தாய் இரவும் பகலும் குழந்தைகளுக்காகக் கஷ்டப்பட்டபோது, தகப்பன் சுகமாக லண்டனிலிருந்ததாக நினைக்கிறானா? ஏன் இந்த அந்நியம்?'

சந்திர சேகரம் அன்றெல்லாம் சரியாகச் சிந்திக்க முடியவில்லை.

வீட்டுக்கு வருவதற்கு அண்டர்கிரவுண்ட் ரெயின் எடுத்தபோது உடலும் மனமும் ஒரேயடியாகச் சோர்ந்துவிட்டது.

நேற்று நடந்தது ஞாபகம் வருகிறது. சந்திர சேகரம் மகனிடம் பாடசாலைப் படிப்புப் பற்றிக் கேள்வி கேட்டான் மகன் ஆங்கிலத்தில் மறுமொழி சொன்னான். லண்டனுக்கு வந்து ஒரு வருடம் தான் ஆகிறது. அதற்கிடையில் தமிழ் மறப்பதா? சந்திரசேகரம் தமிழில் மறுமொழி சொல்லும்படி சொன்னான். "சும்மா போங்கோ. இங்கிலீசில் கதைச் சாத்தான் செரியாகப் பாஷை பிடிக்கலாம். இங்கிலீஸ் தெரியாட்டா பிள்ளை எப்படிப் படிக்கிற" தேவகி முணுமுணுப்பு இவனுக்கு எரிச்சலையுண்டாக்கியது.

தமிழுக்கு அவள் முதலிடம் கொடுக்காதது இவனுக்குக் கோபத்தையுண்டாக்கியது.

www.tamilarangam.net

"லண்டனில் வாழும் குழந்தை எப்படியும் ஆங்கிலம் படித்துக் கொள்ளும். தமிழைத்தான் நாங்கள் ஞாபகப்படுத்தப் பார்க்க வேணும்." இவன் சத்தம் போட்டான் இருவரும் தர்க்கித்துக் கொண்டார்கள். கடைசியாக தேவகியின் கன்னத்தில் அடி குமரனுக்கு நல்ல உதை. சந்திரசேகரம் மிகவும் கோபத்திலிருந்தான்.

அந்த நிகழ்ச்சியை நினைக்க இப்போதும் ஆத்திரம் வருகிறது. ஆனாலும் அதே நேரம் வெட்கமும் வருகிறது. அடைக்கலமாக வந்த பெண்ணிடமும், ஆசை காட்டவேண்டிய குழந்தையிடமும் தன் ஆண்மையின் முரட்டுத்தனத்தைக் காட்டியதில் மிகமிக வெட்கப்பட்டான்.

'பேசித் தீர்த்திருக்கலாம். அதை விட்டுவிட்டுக் கண்டபாட்டுக்கு அடித்திருக்கக்கூடாது.'

சந்திரசேகரம் வீட்டைத் திறந்த போது சின்னமகனின் அழுகை கேட்டது. தேவகி அவனைக் கோபத்தில் அதட்டிக் கொண்டிருந்தாள். மகள் கார்த்திகா இவனைப் பயத்துடன் பார்த்துவிட்டு சோபாவில் சுருண்டு கிடந்தாள். மகன் குமரனைக் காணவில்லை. இவன் கோட்டைக் கழட்டி ஹாங்கரில் மாட்டி விட்டுத் தொப்பென்று விழுந்தான். தேவகி தேனீரைக் கொண்டு வந்து இவனிடம் மௌனமாய்க் கொடுத்தாள். அவள் கன்னம் வீங்கியிருந்தது.

'குமரன் எங்க?' இவன் கேட்டான்.அவளின் உப்பிய கன்னம் இவனைத் துடிக்கப்பண்ணியது. தேனீரை வைத்துவிட்டு மனைவியை அணைத்துக் கொண்டான்.

"சொரி தேவகி...... குமரன் தமிழ் கதைக்காதது எரிச்சலையுண்டாக்கிப் போட்டுது அவன் அவளின் உப்பிய கன்னத்தில் முத்தமிட்டான்."

அவள் அழத் தொடங்கி விட்டாள்.

மகள் கார்த்திகா தகப்பனையும் தாயையும் மாறி மாறிப்பார்த்தாள். முகத்தில் குழப்பம். அப்பா அடித்தாலும் அம்மா அழுகிறாள். அணைத்திருக்கும் போதும் அழுகிறாளே என்று குழப்பமாக இருக்கலாம்.

"குழந்தையோட கதைச்சுப் பிரச்சினைகளைத் தீர்க்கிறத்துக்குப் பதிலாக அடிக்கிறதா? சிங்களவன் தனக்குப் பிடிக்காத தமிழனை அடிக்கிற மாதிரித்தானே இதுவும்."

என்ன பெரிய தத்துவம் இது. அவனுக்குக் கண்ணில் நீர் நிறைந்துவிட்டது. மகனிடம் மன்னிப்புக் கேட்காவிட்டால் நிம்மதியில்லாதது போலிருந்தது

மேல் மாடிக்குப் போனான். ஒன்பது வயது மகன் தகப்பனின் உருவத்தைக் கண்டு ஒதுங்கிப் போய்த் தன் கட்டிலில் உட்கார்ந்தான். அந்தத் தோற்றம் இவனின் உணர்வைப் பிழிந்தது. இடைவெளியில் தெரிந்த அந்நியத்தை மறந்து ஓடிப்போய் மகனை அணைக்கிறான்.

மகன் பாசத்துடன் அணைத்துக் கொண்டான். மகன் விம்மிவிம்மியழுதான். இருவரும் ஒருத்தர் அணைப்பில் மற்றொருத்தராய்ப் பிணைந்து போயிருந்தார்கள்.

நான்கு வருடம் பிரிந்திருந்த சோகம் மகனை இவனிடமிருந்து தன்னை அந்நியமாக்கி விட்டதா?

"மகன் என்னை மன்னித்துவிடு......" வளர்ந்த தகப்பன் வளராத மகனிடம் மன்னிப்புக் கேட்டான். உண்மையான பாசம் உருக்கத்துடன் மன்றாடியது. மகனின் கண்களில் நீர்வெள்ளம் மகன் கேவிக் கேவியழுதான். தகப்பன் சொன்னான். "நாங்க தமிழர்கள் நீ தமிழ் கதைக்காதது. எரிச்சலைத் தந்தது." தகப்பன் தன் முரட்டுத் தனத்துக்குக் காரணம் காட்ட யோசிக்கிறான். மகன் தகப்பனைப் பயத்துடன் பார்த்தான்."

"அப்பா......" மகன் கேவலுக்கிடையில் ஏதோ சொல்ல நினைக்கிறான். "என்ன மகன்?"
"இலங்கையில் தமிழ் கதைச்ச படியாற்தானே மாமாக்கள் எல்லாரும் கொலை செய்யப்பட்டினம்."

தகப்பன் சிலையாக நிற்கிறான்.

"லண்டனில் தமிழ் கதைச்சா ஆரும் எங்களக் கொலை செய்ய மாட்டினமா"

www.tamilarangam.net

# முகம் தேடும் மனிதன்

***குமார் மூர்த்தி சிறுகதைகள்***

அரசியலின் அகரப்பிடியில் சிக்குண்டு அல்லலுறும் ஈழத்தமிழர் வாழ்வின் அவலங்களையும், கோரங்களையும் தனிமனித குடும்ப சமூகப் பின்புலங்களினூடாகவும் அவற்றில் உள்ளும் புறமும் ஆன ஊடுபாவலின் மூலமாகவும் குமார் மூர்த்தி தன் படைப்புகளில் வெளிப்படுத்துகிறார். அவர் படைப்புகள் ஒரு காலத்தின் வரலாறன்றி வேறில்லை.

படைப்பின் களன்களிலாகட்டும் படைப்பாளியின் தனித்துவ மிக்க பார்வைகளிலாகட்டும் படைப்பு மனோபாவங்களிலாகட்டும் படைப்பாக்க நெறிகளிலாகட்டும் குமார் மூர்த்தியின் எழுத்துக்கள் விசேச அடையாளங்கள் கொண்டிருக்கின்றன. அண்மை காலத்தில் எழுதத் தொடங்கி மிகக்குறுகிய காலத்துள் ஈழத்து புனைகதை உலகின் மிக முக்கியமானப் படைப்பாளியாகக் குமார் மூர்த்தி தெரிய வந்துள்ளார்.

*வெளியீடு : காலம், பெரம்பூர்: சென்னை−11 : ரூ.20*

*கிடைக்குமிடம் : திலீப்குமார், சென்னை & கனவு : திருப்பூர்*

# பனியும், பனையும்

*புலம் பெயர்ந்த 39 கதைஞரின் புதுக்கதைகள் ரூ.75.*

*தொகுப்பு: இந்திராபார்த்தசாரதி, எஸ்.பொ*

## ஐரோப்பியக் கதைகள்:

- இங்கிலாந்து : அருட்குமரன், ராஜேஸ்வரி பாலசுப்ரமணியம்
- ஒல்லாந்து : சார்ல்ஸ், லோகா
- சுவீஸ் : செல்வ மதீந்திரன்
- டென்மார்க் : ஆதவன், கரவை தாசன், முல்லையூரான்
- நோர்வே : சந்திராதேவி, தேவகி ராமநாதன்
- பிரான்ஸ் : கலாமோகன், கலைச்செல்வன், சுகன், புவனன்
- ஜெர்மனி : கருணாகரமூர்த்தி, சீறீரங்கன், சுசிந்திரன், தேவா ஜீவமுரளி.

*மித்ர வெளியீடு*

*375−10: ஆற்காடு காலை, சென்னை−600 024.*



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# விலகல்

மு. புஷ்பராஜன் (லண்டன்)

யன்னல் திரையை நீக்கினான்

பத்து மணிக்கு மேலாகிவிட்டது. இருள் முற்றாகக் கவியவில்லை. கீழே, வீதியின் இரு கரைகளிலும் கார்கள். எதிரிலுள்ள இத்தாலிய 'பப்'பில் மெழுகுவர்த்திகள் ஏற்றப்பட்டு விட்டன. தெரு விளக்கின் மெல்லிய செம்மை ஒளி, அருகிலுள்ள இலைகளுடன் சோபை கொண்டன. நல்ல திரைப்படங்களில் வரும் அழகியல் காட்சி போல்

'பப்'பின் சிரிப்பொலிகள் 'போதை ஏறிவிட்டன போலும், போதையில் தான் புறச்சூழலை மறக்க முடியுது.ற சுயமாய் இயங்க முடியுது. இனியென்ன? ஒருவரைஒருவர் அணைச்சுக் கொண்டு வெளியேறுவாங்க ... அவன் இல்லாட்டி அவள் அறயில இந்த இரவு...'

திரும்பிக் கட்டிலைப் பார்த்தான்

"குயில்ற்"ரால் அறைகுறையாக மறைத்தபடி ஒருக்களித்துத் தூங்கிய நிலையில் அவள். கூந்தல் வழிதவறிய கருநதிகளாய் முகத்தில் வழிந்து கிடந்தன. விரல் அளவில் பல சிக்காகியும் கிடந்தன

"தூக்கமா...? மயக்கமா...? ரெண்டும்தான்
எல்லாம் துறந்த நில......"

யன்னல் கண்ணாடியைத் தூக்கிவிட்டான். காற்று வெம்மை உடலில் இதமாக வீசியது. கோடையில்தான் இவ்வாறு முடிகிறது. யன்னலைத் தூக்கிவிட, காற்றின் சுகத்தை அனுபவிக்க, சேட்டு இல்லாமல் அறையில் இருக்க குளிர்காலம் எல்லாவற்றையும் இழுத்துப் போர்த்தி குறங்கிக் கொண்டு

"வின்ரரில் இவளால் இப்படி படுக்க ஏலுமா"

கட்டிலை மீண்டும் நோக்கினான். அவள் அதே நிலையில்தான்.

"முன்பக்கம் போய் குயில்ற்ர விலத்தினா
கோயாவின்ர ஓவியம் போல...!"

சிரித்துக் கொண்டான். அவள் முன்பக்கம் போக முடியாமல் அறைச்சுவர் இருந்தது.

"பப்"பில் இருந்து பலத்த சிரிப்பொலிகள்

"அப்பிடி என்னதான் ஜோக்ஸ். தனி மனித சுதந்திரம் எண்ட பெயரில் இந்த வெள்ளகள் என்னென்ன வெல்லாம் செய்யுறாங்க. அது மற்றவர் சுதந்திரத்தில குறுக்கிடுகிறது பற்றி கவலபடமாட்டாங்க யன்னலில் நிண்டு பார்க்கிறத அவங்களில் ஒருவன் கவனிச்சா வெளியில வந்து கத்தி கூக்குரலிடுவான். பிறகு எல்லாம் அலங்கோலமாயிடும்."

திரும்பி வந்து கட்டிலில் அமர்ந்து கொண்டான். அவன் இருப்பை உணர்ந்தவள். அவள் ஒரு கையை எடுத்துத்தன் மார்புகளிடையே இறுக வைத்துக் கொண்டாள்.

வழிதவறியோடிய கரு நதிகளை விரல்களால் ஒதுக்கி கன்னத்தில் முத்தமிட்டான்

'ஏய் நீ போடட்டா'
'வேண்டாம படுங்க'

அவள் தன்னை அரக்கி, அவன் படுப்பதற்குரிய போதிய இடத்தை ஏற்படுத்தினாள். படுத்தவன் கட்டில் அருகேயுள்ள மேசையில் இருந்த புத்தகத்தை எடுத்துப்பிரித்தான்.

*When your face*
*appearded over my crumpled life*
*at first I understood*
*only the poverty of what I have.*

எதிர்பார்த்த ஒன்று கிடைக்காத உணர்வில் கண் திறந்தவள்.

'சதா புத்தகம்தானா?'

www.tamilarangam.net

சிணுங்கியபடி புத்தகத்தைப் பிடுங்கி வீசினான். ஜெவ்ருசெங்கோ பரிதாபமாக மூலையில் கிடந்தான். அவள் பாதி அவனில் படர அணைத்துக் கொண்டாள்.

'இந்த உரிமை இந்த உறவின் நம்பிக்கயிலா? இந்த உறவுக்கு அர்த்தமென்ன..? இங்க வர்ரத்துக்கு முதல் நீண்ட நீண்ட இடங்களில் எத்தின புதிய புதிய முகங்கள் வேரோடி போக உறவுகள் உறவுகள் அடிக்கடி சந்திக்கிறதிலதான் வேர் கொள்ளுதா? அம்மா, தங்கச்சி தம்பி உறவுகளெல்லாம் வேரறுந்தா போயிற்று.'

ஜெவ்ருசெங்கோவைப் பார்த்தான் சிவந்த முட்செடிகளுடன் அது அப்படியே கிடந்தது.

காலை 08-40 க்கு சின்போர்ட்டுக்குப் போகும் 444 இலக்க பஸ்ஸிற்கு நின்ற பொழுதுதான் கண்டு கொண்டான். பரவலாகத் தென்படும் வெள்ளை, கறுப்பு முகங்களிடையே ஆசிய முகமாக, குறிப்பாக இந்திய முகமாக அவள் தென்பட்டாள்.

அவளுக்கும் அது தான் பஸ். தொடர்ந்து வந்த நாட்கள் பலதின்பின் பரஸ்பர புன்னகை துளிர் கொண்டன. துளிர் கொண்ட புன்னகையின் துணிவில் ஒரு நாள் அவள் இருந்த சீட்டில் அவன் அமர்ந்த பொழுது

'நீங்கள் சிறீ லங்கனா' அவள் ஆங்கிலத்தில் கேட்டாள்.

குஜராத்தி அல்லது வங்காளி என்ற அவன் கற்பிதங்கள் சிதற, ஆச்சரியத்துடன் தலையை ஆட்டினான்.

'நீங்கள்......?'

'சிறீலங்கன்தான்'

'தமிழா' அவசரமாகக் கேட்டான்.

வலமும் இடமுமாகத் தலையை ஆட்டினாள். நறுக்கென்றது அவனுக்கு. தொடர்ந்து என்ன பேசுவதென்றே தெரியவில்லை. நீண்ட மௌனம் அந்த மௌனம்அவனுக்குச் சங்கடமாக இருந்தது.

'ஊர்'

'கண்டி'

'ஓ! மிகவும் அழகான இடம்'. இப்போது அவன் குரல் உற்சாகம் இழந்திருந்தது.

'போயிருக்கிறீர்களா'

தலையை ஆட்டினான். அவள் தணிந்த குரலில் மிகவும் தயக்கத்துடன்

சிங்களம் தெரியுமா?

இப்போ இவன் வலமும் இடமுமாகத் தலையை ஆட்டினான்.

ஆரம்பத்தில் இருந்த ஆர்வம் வடிந்து ஏனோதானோ என்றி ருந்தது. தொடர்ந்த மௌனத்தினூடே அவன் இறங்குமிடம் வந்தது.

மீண்டும் சந்திப்போம் மரபிற்காக கூறிச் சென்றான்.

மறுநாள் காலை பஸ்நிலையத்தில் அதே புன்னகையுடன் அவள். முதல் நாள் இறுக்கத்தை அப்புன்னகைக் கரைத்தது. அந்த நெருக்கம் பார்க்,பப் மக்டொனால்ட் என்று ஆரம்பித்து. இப்போ ஒவ்வொரு ஞாயிறும் அவன் அறையில் அவளாக, அவனது லேடி சட்டர்லியாக தொடர்கிறது.

சில சமயங்களில் அவளைச் சந்தோசப்படுத்த தனக்குத் தெரிந்த சில சிங்களச் சொற்களைக் கூறுவான். அவள் குதூகலித்தாள். அவன் உச்சரிப்பைத் திருத்த முயன்றாள். இந்த ஆசிரிய, மாணவத்தனம் இருவருக்குமே பிடித்திருந்தது. இருவருக்கும் தெரியும். இதில் எவ்வித பலனும் இல்லையென்று. ஆயினும் அவர்கள் அதை தொடர்ந்தார்கள். அவள் ஒரு தடவை கூட தமிழ் சொல்லை சொன்னதில்லை சொல்ல முயன்றதுமில்லை.

திரைப்படங்கள் பற்றிப் பேச நேர்ந்த பொழுதெல்லாம் லெஸ்ரா ஜேம்ஸ் பீரிஸ், யூ.டி.எல்.பெரரா கொலுகதவத்த. கந்தான் கதாவ என்றெல்லாம் கூறி அவளை வியப்பில் ஆழ்த்தினான்.

www.tamilarangam.net

ஒரு தடவை அவள் படம் பார்க்க அழைத்திருந்தாள். இரு டிக்கட் வாங்கிவிட்டதாகவும் சொன்னாள். "பாலம ஜட்ட" கீதா குமாரசிங்க நேரில் வருவதாகவும் கூறினாள். அப்படம் பற்றி ஊரில் கேள்விப்பட்டிருந்தான். ஆனால் பார்த்ததில்லை.,

தியேட்டர் முன் சிங்களக்குரல்கள். இடையிடையே ஆங்கிலம். கொழும்பில் நிற்பது போன்ற பிரமை அவனுக்கு சூழலுக்கும் தனக்கும் இடையில் ஒரு அன்னியத் தன்மை உலவுவதை உணர்ந்தான்.

அவள் உற்சாகமாகவும் மகிழ்ச்சியாகவும் இருந்தாள். சில வேளைகளில் அவனைவிட்டுவிட்டுச் சென்று சிலருடன் கதைத்தாள். பின் மீண்டும் வந்து அவனுடன் சேர்ந்து கொண்டான்.

"ஹலோ சுகர்னா"

திரும்பினாள். இரண்டு சோடிகள் ஆங்கில நாகரீகம். முகங்கள், அவர்களைத் தெரியாதவர்களுக்கு ஆசியர்கள்.

இவன் கையைப் பிடித்து இழுத்துச் சென்று அவர்களுடன் சிங்களத்தில் கதைத்தாள். இடையில் தெமுழு என்ற சொல்மட்டும் புரிந்த போது திக்கென்றது அவனுக்கு

ஒரு நூதனசாலைப் பார்வையுடன் "ஹலோ" என்றபடி கையை நீட்டினார்கள். சடம் போல் கையைக் குலுக்கிக் கொண்டபோது இவனது ஹலோ என்ற வார்த்தை உலர்ந்த நாவுடன் ஒட்டிக் கொண்டு இறந்தது. அவர்கள் மீண்டும் சிங்களத்தில்.

இடைக்கிடை அவர்கள் பார்க்கும் பார்வையில் வேண்டாத உணர்வும் வெறுப்பும் புரிந்தது. வந்திருக்க வேண்டியதில்லை என நினைந்தான். உரையாடலில் பங்கு கொள்ளாமல் தனித்து நிற்பது சங்கடமாக இருந்தது. வெளியேறிவிட விரும்பினான். முடியவில்லை. வீதியில் விரையும் கார்களைப் பார்த்துக் கொண்டு நின்றான்.

அவர்கள் சென்றபின் தியேட்டர் வாசல் கதவை நெருங்குகையில்

"எனக்கு புரியாத பாஷையில் நீ என்னைப்
பற்றி பேசுவது நாகரீகம் இல்ல"

அவன் குரலில் தெறித்த சினம். பதட்டம் அவளை வியப்பில் ஆழ்த்தின. அவனை உற்றுப் பார்த்தாள்.

"நான் ஒன்டும் தப்பா சொல்லயில்ல எப்படியோ
நான் இங்கிலீசில்தான் பேசியிருக்க வேணும்
மன்னித்துவிடு."

வேறு இடமாக இருந்தால் இந்த மன்னிப்புடன் அவளை அணைத்து முத்தமிட்டிருப்பான். சூழ்நிலையின் சங்கடம் அவன் இயல்பை மறுத்தன.

படம் முடிந்து வெளியில் வந்தவுடன் மிகுந்த ஆவலுடன் கேட்டாள்.

"படம் எப்படி? கீதா நல்ல வடிவுதானே"
"ம் கீதா நல்ல நடிகை"

"ரியூப்பில்" வரும் பொழுது ஏற்பட்ட நீண்ட மௌனத்தை குலைத்தாள்.

"என்ன பேசாமல் வாறீங்க உங்களுக்கு என்ன நடந்தது."

இடைவேளையின் போது கவனித்தாயா சிலர் என்னை பார்த்த பார்வைய வேண் டாதவன் போல. நீ அறிமுகப்படுத்தினவங்க வேறு சிலரிடம் நான் யாரென சொல்லி யிருக்கலாம். அவர்களாகவும்

இருக்கலாம்.

அவள் எரிச்சலடைந்தாள்.

"அப்படி ஒன்டுமில்ல நீங்கதான்
அப்படி நினைக்கிறிய. தாழ்வுச்சிக்கல்"

www.tamilarangam.net

பிறகு மெல்லச் சிரித்தபடி அவன் தோள் மீது தலையை சாய்த்துக் கொண்டு அவன் காதுக்குள்

"நான் தான் உங்களோட இருக்கிறனே."

அவன் முன் சீற்றிலிருந்த வெள்ளையைப் பார்த்தான். மூலை சீற்றிலிருந்த ஒரு கறுப்பன் ரெனன்ஸ் குடிப்பதும் இவர்களைப் பார்ப்பதுமாக இருந்தான். இதை கவனித்த அவள் தன் கைகளை அவன் கைகளுடன் கோர்த்துக் கொண்டாள். நெருக்கமாக அணைந்து கொண்டாள்.

பாதிபடர்ந்து கிடந்த அவள் உச்சியில் முத்தமிட்டபடி அணைத்துக் கொண்டான். அடர்ந்த அவள் கூந்தலின் குளிர்ச்சி அவனுக்கு இதமாக இருந்தது.

வேண்டியது அதுதான் என்பது போல் முனகியபடி அவள் அவனை இறுக அணைத்துக் கொண்டாள்.

இந்த இரவுகளின் போது அவனுள் ஒரு குறை. உள்ளம் நெகிழ்ந்துவரும் அன்பு வார்த்தைகளை தன் மொழியில் சொல்ல முடியாமல் இருக்கிறதே என்பது தான். ஆங்கிலம் எப்படியும் அன்னிய மொழிதானே. உணர்வின் ஜீவனை சுயமொழி மூலம் தான் உணரமுடியும் அவளுக்கும் அக்குறை இருக்கலாம் என எண்ணினான்.

அவனை உள்வாங்கும் போதெல்லாம் தன் மொழியில் அவள் முனகுவதுண்டு. பின்னர் அதன் அர்த்தம் பற்றி வினவியபோது அப்படி எதுவும் சொல்லவில்லை என்று கொடுப்புக்குள் சிரித்துக் கொண்டாள்.

டெலிபோன் மணி அழைத்தது. வலதுகையை விடுவிக்க மனமில்லாது. இடது கையால் ரீசிவரை எடுத்தான்

"ஹலோ,"
"ராஜாதானே"
"ம்........................"
குரல் யாருக்குரியது எனப் புரிந்தது.
"ரெலிரெக்ஸ் பாத்தியா"
"இல்ல"
"அடிச்சுப்பார் முக்கியமான விசயம்"
"நீதான் சொல்லன்"
"அடிச்சுப்பார்"

மறுபுறம் ரிசீவரை வைக்கும் ஒலி கேட்டது. சலித்துக் கொண்டான். அவளை விலக்கி ரிமோட் கொண்றோலர் மூலம் பேக்ஸின் உலகச் செய்தியை எடுத்துக் கொண்டான்.

"......................இராணுவமுகாம் நிர்மூலமாக்கப்
பட்டது. எழுபத்து ஐந்து பாதுகாப்புப் படை
யினரும் ஐம்பது போராளிகளும் கொல்
லப்பட்டனர்."

சுகமான இருப்பு குலைக்கப்பட்டதால் சினத்துடன் எழுந்த அவள் ப.யஐ பார்த்தாள் "ஐயோ கடவுளே" சிங்களத்தில் கூறினாள்.

அதிர்ச்சி அடைந்த அவன் அவளைப் பார்த்தான். அவள் பேக்ஸ்ஸையே பார்த்துக் கொண்டிருந்தாள். அவள் பேக்ஸ்ஸை 'ஓவ்' பண்ணினான் ரிமோட் கொன்றோலரை அவனிடமிருந்து பறித்து திரும்பவும் அதை அடித்தாள்.

"எழுவத்திஐந்துபேர்"

பெருமூச் செறிந்தபடி தலையைக் குனிந்து கொண்டாள். அவன் எதுவும் பேசவில்லை.மனம் அரற்றியது.

"ஐம்பது பேர்"
"ஏன் இப்படியெல்லாம்"

www.tamilarangam.net

என்ன பதில் கூறுவதென்றே தெரியவில்லை. மௌனமாக இருந்தான்.

'இவளுக்கு பிரச்சனையை ஆரம்பத்திலிருந்தா விளக்க முடியும். விளக்கினாலும் புரிஞ்சு கொள்வாளா.'

"என்ன பேசாமல் இருக்கிறியள்" "என்ன சொல்ல வேணுமென எதிர்பார்க்கிறாய்"

"ஒண்டும் சொல்ல வேணாம்"

எழுந்து சென்று அவன் சாரத்தை எடுத்து குறுக்குக் கட்டாக கட்டியபடி கண்ணாடி முன் நின்றாள். கண்ணாடி அருகிலிருந்த புத்தகங்களிடையே உற்றுப்பார்த்தவள் அதனுள் செருகப்பட்டிருந்த ஒரு மஞ்சள் துண்டு காகிதத்தை எடுத்துப் பிரித்தாள். சற்று நேரம் உற்றுப் பார்த்தவள் சினைந்த முகத்துடன் திரும்பினாள்.

"இது என்ன?"

தேசிய பாதுகாப்பு நிதிக்கான ரசீது அது. அதை விளங்கப்படுத்தி சொல்ல வேண்டிய அவசியமே இல்லை. ரசீதின் இடதுபக்க மூலையிலுள்ள சிவத்த வட்டத்தினுள் பொறிக்கப்பட்டிருந்த சின்னமும் செலுத்தப்பட்ட தொகையும் அவளுக்கு எல்லாவற்றையும் புரியவைத்தது.

"என்ன இருந்தாலும் இந்த யுதத்தில் நாங்க
வெல்ல வேணும்."

அவனுக்கே ஆச்சரியமாக இருந்தது. எப்படி இதைக் கூறியதென்று. ஒரு வேகத்தில் வெளிவந்தது.

"அப்ப நாங்க சாகவேணுமா"

அவள் வெடுக்கென வெறித்தாள். இப்போது அவள் கண்கள் தான் மோகத்தில் முத்தமிடும் கண்களாகத் தெரியவில்லை. தியேட்டரில் பார்த்த அவர்கள் கண்கள் போல் இருந்தது. மீண்டும் உற்றுப்பார்த்தான். சந்தேகமில்லை. தியேட்டரில் பரவிய அன்னியம் தன் அறையில் உலவுவதான உணர்வு.

கதிரையில் கிடந்த தன் உடைகளை அணிந்துகொள்ள ஆரம்பித்தாள் பிளவுசினுள் சிக்கிய தன் கூந்தலை இரு கைகளாலும் கோதி முதுகில் படரவிட்டாள். அவள் ஒவ்வொரு செயல்களிலும் வேகம் படபடப்பு திரும்பி அவனைப் பார்த்தாள்.

"நான் போகப்போறன்"

"ஏன்"

"இல்ல நான் போகபோறன்"

அவளையே பார்த்துக் கொண்டு இருந்தான். தன்னை சரிசெய்த பின்னர் கான்பாக்கைத் தோளில் போட்டுக் கொண்டு தயங்கி நின்றாள். பின் தீர்மானமாய்

"நான் போறன்"

அறையைவிட்டு மெல்ல வெளியேறினான். படிக்கட்டுகளில் இறங்கும் சத்தம் அவனுக்குக் கேட்டது இப்போது வெளிக் கதவின் சத்தம்.

கட்டிலை விட்டு எழுந்து யன்னல் வழியே நோக்கினான்.

அவன் மோகத்தைக் கிளறும் அடர்ந்த கூந்தல் முதுகில் படர இத்தாலிய பப்பைத் தாண்டிச் சென்று கொண்டிருந்தாள்.

---

## சில இதழ்கள்

மீட்சி : TAMIL INFORMATION CENTRE, THAMIL HOUSE, 720 ROMFORD ROAD, LONDON E12 6BT

மௌனம் : 6, Square du Roule, 92200 Neuilly S / SEINE - FRANCE

நாழிகை : Newsmedia International Limited, Park Royal House, 23, Park Royal Road, London NW10 7JH UK.

சுவடுகள் : Herslebs GT 43, 0578 OSLO-Norway.

www.tamilarangam.net

**திருப்பூர் தமிழ்ச்சங்கம்**

**34,கே.பி.என்.காலனி**
**3வது வீதி,**
**திருப்பூர்–641 601.**

**95'ம் ஆண்டின் எல்லா பிரிவு களுக்கும் சிறந்த நூல்களுக்கான பரிசிற்காய் (ரூ. 3000, ரூ.2000, ரூ.1000) புத்தகங் கள் அனுப்ப கடைசி தேதி: 30–4–96.**

**1994ம் ஆண்டில் வெளிவந்த சிறந்த நூல்களுக்கான பரிசு பெற்றோர்:**

**நாவல்:**

விசாரணைக் கமிஷன் (சா.கந்தசாமி)
மஞ்சுவெளி (சி.ஆர்.ரவீந்திரன்)

**குறுநாவல்:**

குற்றவாளி (ம.ராஜேந்திரன்)

**சிறுகதை**

அரேபியக்குதிரை (ஆ.மாதவன்)
உயிர்த்தெழுதல் (விமலாதித்த மாமல்லன்)

**கவிதை:**

மீண்டும் அவர்கள் (ஞானக் கூத்தன்,
கலாப்ரியா கவிதைகள் (கலாப்ரியா)
பனையோசை (வித்யாஷங்கள்)

**மொழிபெயர்ப்பு:**

யுகாந்தா (அழகிய சிங்கர்)
ஏழு கார்டூன்களும், வண்ண ஓவியமும் (தமிழ்நாடன்)

**நாடகம்:**

எப்போ வருவாரோ? (எஸ்.எம்.ஏ.ராம்)

**கட்டுரை:**

கவிதையின் உயிர், உள்ளம், உடல் (க.ப. அறவாணன்)

உலக நாகரீகங்களும் தமிழர் பெருமையும் (அ. ஜெய்குமார்)

**சிறுவர் இலக்கியம்**

நச்சுமலைக்காடு (டாக்டர் பூவண்ணன்)
காற்று சிரித்தது ( சாமக் கோடாங்கி சங்கரலிங்கம்)

www.tamilarangam.net

# ஒரு தனித்த வனத்தில்

பொ கருணகர மூர்த்தி (ஜெர்மனி)

எல்லோருக்குமே ஆச்சர்யமாயிருந்தது! நாயகம் வாத்தி மிதித்த புல்லுரோகாமல் நடக்கிறவன். அதிர்ந்து ஒரு வார்த்தை பேசாதபிள்ளை, வேணியை விலா எலும்பு முறிய அடித்தான் என்றால்?......... சிலருக்கு இதில் ஏதும் சுவாரஸ்யமான மர்மம் இருப்பதாகவும் பட்டது. அதை அறியும் முஸ்தீபுகளுடனோ, சம்பிரதாயத்திற்காகவோ போக்குவரத்து வசதிகள் குறைந்த வன்னிப்பகுதியாக இருந்தும் ஈறப்பெரிய குளம் முறிவு-தறிவு வைத்தியரின் மருத்துவமனையில், கொண்டு வந்து விடப்பட்டிருந்த வேணியை 'அறிந்தவர் தெரிந்தவர்' எனப் பலர் வந்து பார்த்தனர்.

ஏழெட்டு நோயாளிகள் மாத்திரமே தங்கக்கூடிய அந்தச் சிறிய மருத்துவமனையின் எண்ணெய்ப் பிசுக்கு நிறைந்த படுக்கை. மார்கழிப்பனியின் காட்டுக்குளிர், நுளம்புக்கடி, மற்ற நோயாளிகளின் அவஸ்த்தை தோய்ந்த முனகல்கள், தனது வலி எல்லாவற்றையும் மீறி........................ ஊரிலிருந்து வருபவர்கள் கீழ் தொனியில் என்ன பிள்ளை.................. நாயகம் நல்ல பிள்ளையாச்சே...................... இப்பிடி அடிக்க அப்பிடி என்ன பிணக்கு உங்களுக்குள்ள? என்று ஆயிரத்து முன்னூற்றி நாற்பத்து மூன்றாவது தடவையாகக் கேட்டபோது வேணிக்கு சிரிப்புத்தான் வந்தது!

இது நிஜவாழ்வில் கிடைத்தேயிராத ஒரு 'வாய்முத்தம்' கனவில் கிடைத்ததால் விளைந்தவினை என்றால் நம்பவா போகிறார்கள்? டிராக்டர் டிரெயிலரினுள் குட்டடிப்புப் படங்குகளைப் பரவி அடுக்கி வவுனிக்குளம் மண்பாதையில் குலுக்கிக் கொண்டு வந்தது வேறு உடம்பெல்லாம் மிதித்தது போல நொந்தது.

வைத்தியர் உடனே சோதித்து விட்டுச் சொன்னார். "விலா எமும்பு இரண்டு உடைஞ்சுபோச்சு ஒரு மாசத்திற்கென்றாலும் அசைப்பில்லாமல் படுக்க வேணும்" உடனே 'பத்தும்' போட்டார்கள் வான முகட்டில் நட்சத்திரங்கள் தொங்குவது போல் விதவிதமாய கலர் கலராக ஐஸ் பழங்கள் பல பல கோலங்களில் தொங்குகின்றன. உடல் எங்கும் குளிர் பூசும் இளம் தென்றல் பட்டு ஐஸ்பழங்கள் மெதுவாய் உருகிக் துளிவழி விழுகின்றன. உதட்டிலும், நாவிலும் விழும் அவை சுவை அரும்புகளை மாத்திரமா அருட்டுகின்றன? ஜீவனை அல்லவோ உசுப்பி உணர்வூட்டுகின்றன........! இது ஒரு புதிய சுவை! ஜீவிதத்தில் அனுபவித்திராத புதிய சுவை!

வேணி சிறுமியாக இருந்தபோது பல தினிசுகளில் ஐஸ் பழங்கள் சுவைத்திருக்கிறாள் தான்... ஆனால் இதன் சுவை தனித்துவமான புதுரகம்.

சிறுமிகள் ஐஸ்பழம் சாப்பிடுவது வெட்கமென்று அவளுக்குச் சொல்லப்பட்டதில்லை. வேணி இப்போது சிறுமியல்ல. ஆனால் ஐஸ் பழமீதான மோகம் சற்றும் தீரவில்லை. இப்போது சாப்பிடுவது வெட்கமென்று சொல்லப்படலாம். ஏன்? சூப்ப வேண்டும் என்பதாலா? அதனாலென்ன? சுவையை உய்க்க வேண்டுமென்றால் என்ன செய்தால் தானென்ன ? ருசிக்கும் வயதிற்கும் என்ன சம்பந்தம்?

இருக்கிறது சில ருசிகளை உய்த்துணர வயதும் வேண்டியிருக்கிறது. மதுவைச் சுவையென்று எந்தப் பிள்ளையாவது கூறுமா? அவர்களின் சுவைக்கான நல்ஙூறீற்ழ்ன்ம் மிகவும் ஒடுங்கலானது.

நாவை விட அதிகமாக ருசியையும் உணர்ச்சியையும் உணரவல்ல நரம்புகள் உதட்டில்தான் அதிகமாமே? சாந்தகுமார் சொன்னான். உடலில் கூட ஒவ்வொரு இடத்தில் ஒவ்வொரு சுவை இருக்காம் உடலின் நரம்பு மண்டலம் முழுவதையும் அருட்டிவிடவல்ல சுவையுண்டாம் பார்க்குவேண்டுமென்றான். அது புரியாத பெரிசுகளும் உண்டு. நாயகம் வாத்திமாதிரி.

அதோ சாந்தகுமார் ஐஸ்பழத்தோடு வருகிறான். ஒரு ராஜகுமாரன் மாதிரி என்ன மிடுக்கான உடல்வாகு! கண்களில்தான் என்ன சாந்தம்! என்ன குறும்பு....! என்ன காதல் ....! எவ்வளவு ஆசை....! விரிந்த மார்பும் 'ய' போல் ஒடுங்கும் இடையும் உருண்டு திரண்ட புஜத்தின் தசைநார்களும் புடைத்து நிற்க சிவந்த வெற்று மேலுடன் ........ கலர் கலராய் எத்தனை

www.tamilarangam.net

ஐஸ்பழங்கள் வைத்திருக்கிறான்! அவனைக் கண்டவுடன் என் உடலில் தான் ஏன் இப்படி உஷ்ணம் ஏறுகிறது...? என்னை அழைக்கின்றான் ஒரு பரிச்சயமான சிறுமியிடம் போல உரிமை எடுத்துக் கொண்டு அனைத்தையும் என்னிடமே தருகிறானே...!

எதைச் சுவைப்பேன்...? எதை விடுவேன்...? என்ன புதிய சுவை இது! என்ன உணர்வு அது.... அவன் கண்களில் என்றுமே கண்டிராத மோகம்! என்னை மரவள்ளித் தோட்டத்துள் அழைக்கின்றான்.

பாதாதி கேசம் என்னை முத்தமிடுகிறான். என் மூச்சு முட்ட என்னை நெருக்கி அணைக்கின்றான்.... ஐஸ் உருகித் தாரையாய் பாய்கிறது. என்னை மேவுகிறான். முன்பும் இது போல் ஒரு முறை...

"டபார்....!"

ஆ.... ஆ.... ஐயா என்ன 'பமு'வில் மரணவலி....! கையை நகர்த்த முடியாமலுள்ளதே? கண்விழித்தால் ... சொர்க்கம் ஒன்று அறுத்து விழுந்தது. தெரிகிறது. தூங்கிக் கொண்டு இருந்தவளை அல்ல அல்ல. மோன உலகொன்றின் இன்ப சாகரத்துள் திளைத்து இருந்தவளைச் சுடுமணலில் தூக்கி வீச விலா முறிந்து போகும்படி அடிக்க இராட்சதர்களுக்கேயுரிய கொலைமனம் வேணும்.

"யார் அந்தச் சண்டாளப்பயல்?"

"உனக்கென்ன கனவிலும் கள்ளப் புருஷனோடி வாறான்...? அப்போதையிருந்தே பார்க்கிறான்... சளக்கு புழக்கு என்று உதட்டைச் சுப்பிறதும் சிரிக்கிறதுமாய் கிடக்கிறாய் தோறை!" கையில் துருவுபலகையை இன்னும் பிடித்துக் கொண்டு வெறிபிடித்தவன் போல வானத்திற்கும் பூமிக்குமாய் குதிக்கிறான் நாயகம் வாத்தி! கிழக்கு சிவத்து இருக்கிற காலைக்கருக்கலில் முற்றத்தில் அயல் சனம் கூடிவிட்டது அமர்க்களத்தில்.

"என்ன..... என்ன.... என்னவாம்?" மெளனம் யார் பதில் சொல்லுவது? விலாவைப் பொத்திக் கொண்டு வேணி துடிக்கிறாள். பூரணம் மாமிவேணியின் ரவிக்கையைக் கழற்றி வீக்கத்தைக் கவனித்துவிட்டுச் சீறினாள். "ஏனாம்... என்னவாம்... வின்னாணம் கிடக்கட்டும். யாராவது ஓடிப்போய் செல்வத்தின்ரை மிஷினை (டிராக்டர்) கொண்டு வாங்கோ!"

சிவவேணிக்கு இன்று முதலிரவு. மாப்பிள்ளை நாயகம். வவனிக்குளத்தில் பத்தாவது மட்டுமுள்ள ஒரு தமிழ் கலவன் பாடசாலையில் வாத்தியார் வேலையுடன் தந்தைக்கு 20 வருடங்களுக்கு முன் குடியேற்றத்திட்டத்தில் கிடைத்த 5 ஏக்கர் காணியில் விவசாயத்தையும் பார்த்துக் கொண்டு இருக்கிறான்.

வேணியை சாந்தகுமார் கிளப்பிக் கொண்டு போய்விடலாம் என்ற பயத்தில் தட்புட் என்று ஜாதகக் பொருத்தம்-சீதனம் எல்லாம் பேசித் திருமணத்தையே முடித்துவிட்டு ஈஸி சேரில் ஒய்வாகப் படுத்திருக்கிறார் அவள் அப்பா.

திருமணத்தன்றோ முதலிரவையும் வைத்துக் கொள்கிற யாழ்ப்பாணத்து வழக்கப்படி அநேகமானோருக்கு நேர்வது போன்று வீட்டுக்குள்ளே சிவன் பார்வதி லக்குமி. பிள்ளையார் எல்லோரும் சுவரில் சாம்பிராணிப் புகையூடு நின்று அருள்பாவித்துக் கொண்டு இருக்க முதலிரவு அரங்கேற்றம்.

வேணிதான் கிராமத்திலேயே அழகான சுட்டிகையான பெண். அந்த ஊருக்குத் தேவையான கலகலப்பு தனியாக அவளிடம் வடக்கன் மாட்டில் கட்டிய மணி மாதிரி எப்பவும் கிலுங்கிக் கொண்டேயிருப்பாள். பத்தாவது படித்தவள். டீச்சர் வேலைக்கு விண்ணப்பித்திருக்கிறாள்.

அவளது திருமண விடயமாய் அப்பா ஒருமுறை அவளுடன் பேசியதோடு சரி. இத்திருமணத்தை அவள் வன்மையாக எதிர்த்தாளென்றோ, பூரிப்புடன் இசைந்தாளென்றோ இல்லை. இப்போது தாலி ஏறிவிட்டது.

வெறும் மேலுடன் சிவம் என்று சொல்லிக் கொண்டு வந்து படுத்தவன் தன்னைப் பற்றியும், தன் வாழ்க்கை நெறிகள் பற்றியும் யாரிடமோ ஒப்புவிப்பது மாதிரிக் கூறிவிட்டு மெல்ல அவள்

www.tamilarangam.net

அருகில் போய் இடுப்பில் கையை வளைத்துப் போட்டுக் கொண்டு கேட்டான். "உமக்கு காதல் அனுபவங்கள் ஏதுமிருக்கா?"

கல்யாணத்திற்கு வந்திருந்த தோழிகளில் ஒருத்தி கேட்டாள் "உனக்கு முன்ன பின்ன தெரியாத மாப்பிள்ளையாச்சே முதமுதல்ல அவரிடம் என்னடி பேசுவே?" அண்மையில்தான் திருமணமான அனுபவஸ்தி ஒருத்தி கழுத்தை நொடித்துவிட்டு கோவை சரளாமாதிரி நீட்டி முழக்கிச் சொன்னாள். "ம் ம்.. ஒரே முத்திக் கொண்டு இருக்கப் போறாக வாய் பேச எங்ஙென விடுவாக?" அவளது அபிநயத்தைப் பார்த்து எல்லோருமே சிரித்தனர்.

வேணிக்கு எதையுமே ஒளிக்க வேண்டுமென்று தோன்றவில்லை விகற்பமில்லாமற் சொன்னாள். "படிக்கிற காலத்தில் என் கூடபடித்த சைக்கிள் கடைச் செல்லத் துரையர் மகன் சாந்தகுமாரென்று எனக்கு முன்னும் பின்னுமாய்த் திரிஞ்சான்!"

"பிறகு?"

"தன்னையே கல்யாணம் செய்கிறேனென்று சத்தியம் செய்து தரச்சொன்னான்."

"செய்தீரோ?"

சில மௌனமான கணங்கள் கழிய... சொன்னாள். "இல்லை"

"ஏன்?"

"செய்திருந்தால் அவன் அலுப்புத்தாங்க இயலாமல் இருந்திருக்கும்."

"அப்படி என்ன அலுப்பு"

"கவிதைகள் எழுதுவான்... பின் என் அனுமதியும் கிடைத்துவிட்ட துணிவில் என்னையே வால் போலத் தொடரத் தொடங்கிவிடுவானே?"

"சரி இது எப்படி ஆரம்பிச்சுது?"

"ஏங்க..... நீங்களும் ஸ்கூல் டீச்சர்தானே...? வழக்கமான பள்ளிக்காதலுகள் எப்படி ஆரம்பிக்குமென்று உங்களுக்கு நிஜமாலுமே தெரியாதாக்கும்....?" அவனது கன்னத்தைத் திருகியவள் ரொம்பத் தான் அவசரப்பட்டுத் தொட்டுவிட்டோமோ என்று பயந்தாள்.

"எனக்குத்தான் காதல் அனுபவங்கள் ஏதும் கிடையாது என்று சொல்லி விட்டேனே... யார் மீதும் காதலை ஆரம்பித்து எனக்குப் பழக்கமில்லை."

"ஸ்ருடென்ஸ் சகஜமாகப் பேசுவாங்கதானே.... அப்ப அவன் உங்களுக்குப் பிடிச்ச நாவல்கள் எது.... நாவலாசிரியர் யாரென்பான்.... பின் அவ தான் லயித்த கவிதைகள் பற்றிச் சொல்லுவா... அப்புறமாய் தங்கள் தங்கள் ரசனைகள் விருப்புகள் எழுத பரிமாற்றஞ் செய்வார்கள். அவன் எனக்குக் கூடக் கொஞ்சம் கவிதை எழுத வருமென்றான்... எங்கே பார்ப்போமேயென்பாள். அவனும் அவளையே வர்ணித்து எழுதிவந்து கொடுப்பானாம்... அவளும் முகம் சிவந்து நிற்பாளாம்....!"

"இப்படித்தானா உங்க கதை...? என்ன கவிதை எழுதினான்?"

வேணிக்கு வெட்கமாயிருந்தது. பின் சொன்னாள்.

> கன்னக்குழிவில் தன்
> காதல் முழுவதையும் ஆழ மறைத்த கள்ளி!

வீட்டில் எதிர்ப்புக் கிளம்பிய பின்னால் எழுதினான்:

> உன்னைத்தான் அடைய முடியவில்லை - அதனால்
> உன் நினைவுகளை இப்போது,
> காதலித்துக் கொண்டிருக்கிறேன் என்று!

"வீட்டில் ஏன் எதிர்த்தார்கள்?"

"அப்பா சொன்னார்............. மகள்............... நான் தனிப்பட்ட முறையில் காதலுக்கு எதிரியேயில்லை............ சாதி வரை முறைகளில் பிடித்துத் தொங்கிறவனுமல்ல ........... ஆனால் இதுகள் எல்லாம் இன்னும் இருக்கிற ஒரு லௌகீக உலகத்தில் தான் நாம வாழ வேண்டியிருக்கு...... தலைப்பிள்ளை உன்னை நான் 'அம்போடைக்குள்ள' கொடுத்தேனென்றால் உன்னுடைய 3

www.tamilarangam.net

தங்கைகளையும் கட்ட யார் வருவாங்கள்? என் காதலுக்காகத் தங்கைகள் கஷ்டப்படப் போவது சரியாகப்படவில்லை. அப்பாவின் வாதம் ரொம்ப நியாயமாகப்பட்டது.... காதலைத் தூக்கி அப்பால வைத்தேன்."

"அது சரி இந்தக் கவிதைகள் எல்லாம் எப்படிப் பரிமாறுவீங்கள்?"

"வெகு சாதாரணமாக என்னுடைய நோட்ஸ் கொப்பியை இரவல் வாங்கிறமாதிரி வாங்கிட்டு அதில பக்கம் பக்கமாய் எழுதித்தள்ளிவிடுவான்."

"நல்லாத்தான் பயல் எழுதுவான் போல கிடக்கு... ஞாபகத்திலிருந்து இன்னொரு கவிதைசொல்லும் கேட்பம்."

அதிக நேரம் யோசித்தான் பின் சொன்னான். ஒரு சின்ன கவிதைதான் ஞாபகம் வருது.

"சரி சொல்லும்"

"அந்தி மயங்குதென்று
கலங்காத கண்ணே...
வரும் இரவும் நம்முடையதுதான்"

சொல்லிவிட்டு முகம் சிவந்தாள்.

நாயகம் வாத்திக்க உள்ளுக்குப் பொறுமியது. பின் பார் ரேடியேட்டர் மாதிரி கொதிக்கத் தொடங்கியது. அதை மறைத்துக்கொண்டு கேட்டான்.

"எந்த அளவுக்கு உங்கள் காதல் முன்னேறியிருந்தது..?"

"காதல் வந்தால் ரோமியோவுக்கு வந்த மாதிரித் துணிச்சலும் வந்திடும் போல...."

"ஒரு நாள் தோட்டத்து மரவள்ளியுக்கை புகுந்து நான் புழங்கிற அறை சன்னல் கிட்ட வந்து கூப்பிடுறான். கிளுக்கென்று சிரித்தாள்"

"போனியா"

இந்தப் "போனியா?" வேணிக்கு வேறு தினுசாகப்பட்டது.

தன் அந்தரங்க இயக்கங்கள் ஒழுக்கம் பற்றி சரியாக இன்னும் 24 மணிநேரமே பழகியிராத ஒருவன் கேள்விகேட்பது எதிர்பாராததாயும், எரிச்சலூட்டுவதாயுமிருந்தது. அதை அவனிடம்விவரிக்க வேண்டிய கட்டத்தின் அவலம் கண்டு வெகுண்டாள். என்னை அப்படிக்கூற நிர்ப்பந்திக்கக்கூடிய அதிகாரத்தை இவனுக்கு யார் கொடுத்தது? இந்தத் தாலிச்சரடா?

எமது பண்பாட்டின் ஒரு கூறு இதுவும்? மௌனமாக இருந்தாள். சிந்தித்தாள்.

அவன் இடுப்பைச் சுற்றியிருந்த கையைச் சரேலென விலக்கினான். எப்போவோ எழுதிய கவிதைகளைக்கூட ஞாபகம் வைத்திருக்கிறாள் என்றால் அவன் நினைவுகளை...? இது சமசியகேஸ். எக்குத்தப்பாய் வந்து பிழையான இடத்தில் மாட்டிப் பட்டிட்டமோ? பெண் மூலம் பாராமல் இறங்கியது தப்புதான். நாயகத்திற்கு அரையளவு ஆழமுள்ள சாக்கடை ஒன்றினுள் விழுந்துகிடப்பது போலிருந்தது. உடல் மெலிதாய் வியர்க்கவிட்டதைப் பார்த்துக் கொண்டு படுத்திருந்தான்.

எளிய வாழ்விலும், மானிட சம்போக விருப்பும், நாட்டமும் கொண்ட சாதாரண பெண் வேணி. எவ்வளவு கனவுகளைத்தான் சுமந்து வந்தாள். புருஷன் எவ்வளவு ஆசையாய் தன்னிடத்தில் இருப்பான் என எண்ணி வந்தாள்.

எந்த ஆணும் தம் சகியருக்குப் பழைய காதல் விவகாரங்கள் இருப்பதைச் சகித்துக் கொள்ளமாட்டார்கள் என்ற சூக்குமம் அவளுக்குத் தெரிந்திருக்கவில்லை!

அதன் பிறகு என்ன வாழ்ந்தது? ஆசையாய் ஒரு பார்வை. சீண்டல் இருக்க வேணுமே...? ஊகூம்... திருமணமென்ற ஒருவழிப்பாதை வாழ்வின் பெரிய திருப்பு முனையாக அமைவது. இவளுக்கு அது இயல்பான மகிழ்ச்சியை இல்லாமற்பண்ணவே நிகழ்ந்தது. போலப்பட்டது. எண்ண, எண்ண, எண்ண ஒரு மண்ணும் அவளுக்கு விளங்கவேயில்லை. அவள் "சகி" தானே? எல்லாவற்றையும் சகித்தாள்.

www.tamilarangam.net

ஆண்மைக்குறைவான பயல்களக்குத்தான் சந்தேகமும் அதிகமாக இருக்குமாமே? இன்னும் அந்தக் கேஸோ? அவள் அப்படித்தான் நினைத்தாள்.

தனக்கு வேண்டியபோது ஒரு வேசியிடம் வருவது போல் வருவதும் பின் சாப்பிட்ட ஒரு வாழைப்பழத் தோலைத் தூரக் கடாசுவது போல கடாசிவிட்டுக் 'கம்' என்று கிடப்பதுவும் ஒன்றுமே பிடிக்கவில்லை அவளுக்கு.

"உன் நினைவுகளைக் கூடக் காதலிக்கிறேன் என்றவன் எங்கே? நாயகம் வாத்தி எங்கே? புருஷன் என்று இவனுடன் வாழ வேண்டிய விபத்து எனக்கு எப்படி நேரிட்டது?"

ஒரு சந்நியாசினியைப் போலத் துறவு மனங்கொண்டு விரதம். விபூதிப்பட்டை என்று வாழக்கூடிய பெண்களுக்கு நாயகம் போல் ஒரு நாயகன் பொருத்தமாகலாம்.

வேணி சராசரிப் பெண் புருஷனின் அன்புப் பிரவாகத்துள் திளைக்க விழைபவள். மயக்கங்கள் இன்னும் மாறாதவள். வாழ்வின் மீது காதல் கொண்டவள். அது தரும் இன்பரசங்கள் அனைத்தையும் மாந்த நினைப்பவள். ஒரு முழு நேரக் கச்சேரிக் கானசுருதி அவள் கண் இசைந்து கொண்டிருப்பதை உணரவோ அதை முழுநேரக் கச்சேரியாக மலர்ந்து சோபிக்க வைக்கவோ நாயகம் வாத்திக்கு நங்ய்ள்ண்ற்ண்ஸ்ண்ற்ஹ் போதாது.

எப்போதாவது மழைக்குளிர்தரும் கதகதப்பான நாட்களில் மார்கழிப்பனியின் பின்னிரவில் ஜுரம் வந்த கன்றுக்குட்டி மாதிரி ஒண்டிக் கொண்டு முயங்க வருவான்.

எங்கே சும்மா வீச்சுரொட்டி மாவைப் போல அவளைப் பிசைந்து உடும்பாய் சுருட்டிக்கட்டப் போகிறாறென்று பார்த்தால் சரணத்திற்குப் போகமுதலே கஞ்சிரா துரித நடைகாட்டி தாளந்தப்பி லயமின்றிக் கச்சேரி முடிப்பான் முடிந்ததா? ஏதோ ஆறு லொறிக்கு தனியாக மூடை ஏற்றியவனின் களைப்போடு கழுத்து அறுபட்ட வெள்ளாடுமாதிரி பார்வை ஒரு திக்கில் நிலைகொள்ள ஒருக்களித்துப் படுத்திருக்கும். எல்லாப் பெண்களுமே இப்படி அரைகுறையாகத்தான் பெற்றுக் கொள்கிறார்களா? இதற்காக ஒரு தமிழ்ப்பெண் என்ன ஊர் கூட்டியா கூச்சல் போட முடியுமா? சாந்தகுமார் அவளை ஒரு மரவள்ளி இரவில் மூச்சுத் திணற வைத்த அனுபவத்தை இன்னும் அவன் கவிதையைப்போலவே தன் நினைவுப் பொறிகளில் நிறைத்து வைத்திருக்கிறாள். டாக்டரின் மனைவியும். நீதவான் மனைவியும் எதற்காக கார் டிரைவருடனே ஓடிப் போகிறார்கள் என்ற வாழ்வின் யதார்த்தம் உணர்ந்தவள்.

ஒரு முறை வாத்தியின் தலையைக் கோறிவிட்டு லேசாக கடைஇதழோடும் தன் உதடுகளைப் பதித்தபோது துள்ளி எழுந்த வாத்தி வாயைக் கொப்பளித்துவிட்டு வந்து அவளை ஒரு ஜந்தைப்போலப் பார்த்த பார்வை...!

முத்தத்தை அலர்ஜியாகக் கொண்டு பிறந்துவிட்டானோ? இவன் எந்த விதத்தில் சேர்த்தியான மனிதன்?

அழுத்தமான முத்தத்தை ஒரு பெண் விரும்பப்படாதென்றால் இத்தனை காமசாஸ்திரங்களும்தான் எதற்கு?

அறுபதுகளில் நாயகம் வாத்தி படிக்கிற காலத்தில் அபூர்வமாக ஒருநாள் உடன்படிக்கிற பெடியளோட போய்ப் பார்த்த ஹிந்திப் படத்திற்கு இடையில் இங்கிலீஷ் படமொன்றின் டிரெயிலர் காட்சியில் தான் முதன் முதல் முத்தத்தைப் பார்த்தான்.

விஷயம் பிடிபடவில்லை. சைக்கிளில் கூட்டமாகத் திரும்பிவரும் போது பெடியளிடம் பொதுவில் விளக்கம் கேட்டான்.

"அது என்னத்திற்கு வாயைக் கடிக்கிறது?"

எல்லோரும் அதிர்ந்து சிரித்தனர். அவனுக்கு வெட்கமாகிவிட்டது. அசட்டுத் தனமாய்க் கேட்டுவிட்டோமோ என்று பட்டது. சமாளித்தான் இல்லை அதில அப்படி என்னதான் இருக்கென்றன்: கொடுத்துப் பார்த்தால் அதன் மகத்துவம் தெரியும் அதுதானே செக்ஸ் விளையாட்டின் அரிச்சுவடி? ரொம்ப அனுபவப்பட்டவன்போல் ஒருவன் சொன்னான். "நீ யாருக்கும் கொடுத்திருக்கிறியோ?" "சொன்னவனை இன்னொருவன் ஆர்வமாகக் கேட்டான்" "ஓம் பெல்வா டீச்சர் தந்திருக்கிறா"

முப்பதுக்கு மேலாகியும் திருமணமாகாமலிருக்கும் ஒரு பெண்ணின் பெயர் கூசாமல் இழுக்கப்பட்டது. இது சும்மா பேச்சு சுவாரஸ்யத்திற்காகவோ இல்லை அப்பட்டமான

www.tamilarangam.net

பொய்யாகவோ இருக்கலாம். பியோனோ பழகிறனென்று சொன்ன பையன் பெல்வா டீச்சர் வீட்டுக்கு அடிக்கடி போய்வந்து கொண்டிருந்தது. தெரியும். பின்பும் நிறைய நிறையவே இதுபோன்ற சமாச்சாரங்கள் சொல்லியிருக்கிறான். இருந்தும் நாயகம் வாத்திக்கு வாயில் முத்தமிடும் சமாச்சாரம் மட்டும் பிடிக்கவே இல்லை. வயிற்றைக் குமட்டியது. ஒழ்ஹப் எங்ஷ் ...... மண்ணாங்கட்டி! அசிங்கம்!

ஒரு நாள் இரவு சமையல் கட்டு எல்லாம் சுத்தம் பண்ணி முடித்து விட்டுப்படுக்கையில் சாய்ந்து பக்கத்து வீட்டுப் பெண் கொடுத்த புத்தகமொன்றைப் படித்துக் கொண்டிருந்தாள் வேணி. மறுநாள் அறுவடைக்குக் கூட்டிப்போக ஆட்களைச் சேர்க்க ஊருக்குள் சைக்கிளில் போயிருந்த நாயகத்திற்கு சாப்பாடு பரிமாறி அவன் சாப்பிட்டு முடித்த பின்னர் புத்தகத்தை மீண்டும் தொடர்ந்து படித்தாள்.

"தான் போன விஷயம் எப்படி? என்று ஒரு வார்த்தை விசாரியாமல் தொடர்ந்து புத்தகம் படித்துக் கொண்டிருப்பது வாத்தியை எரிச்சலூட்ட கேட்டான்." "அவ்வளவு சுவாரஸ்யமாய் என்னதான் படிக்கிறாய்?"

"கவிதைகள்"

அவனுக்கு மூளையின் கீழ் விதானத்தில் ஜில் என்றது எங்கே கொடு பார்ப்போம். வாங்கிப் படித்தான். புத்தகத்தின் ஒவ்வொரு பக்கத்திலும் நாலைந்து குறுவரிகளாலான ஒரேயொரு கவிதை மாத்திரம் இருந்தது. நாயகத்திற்கு வெறும் ஊதாரித்தனமாகப் பட்டது. ஒரே மூச்சில் அத்தனையையும் படித்துவிட்டுத் திருப்பிக் கொடுத்தான். இதே புத்தகத்தை அவள் நாலைந்து நாளாக வைத்துத் திருப்பித் திருப்பிப் படித்ததை அவனும் கவனித்திருக்கிறான்.

"இன்னும் கவிதை நாட்களல்ல இருந்து விடுபடவில்லைப் போல கிடக்கு?" வேணிக்குச் சுரீரென்றாலும் பொறுமையாக அவன் காதுமடல்களை நீவியபடி பதில் சொன்னாள்.

"நீங்கள் கருதிற காலங்கள் Past. ஆனால் ரசிக்கத் தெரிந்த யாராலும் கவிதைகளிடமிருந்து என்றுமே விடுபட முடியாது."

"கற்பு நெறிங்கிறதே கேலிக்கூத்தென்ற மாதிரிக் கவிதை எழுதிறானே இதெல்லாம் உனக்கும் உடன்பாடா?"

"இல்லை கற்பு நெறியென்ற ஒன்று இல்லாத ஒரு காலமுமிருந்தது... அதைத்தான் சிலாகிக்கிறார் கவிஞர். சரி பிழை என்று பேசேல்லை"

"அது சரியென்கிறாயா?"

"அது எது கற்பு எது ஒழுக்கம் என்று புரிஞ்சு கொள்றதில் இருக்கு..." அர்த்தமற்ற கட்டுக்களை சம்பிரதாயமன்றே. பண்பாடென்றோ தனக்குத்தானே போட்டுக் கொண்டு ஜாலியாக அனுபவிக்க வேண்டிய வாழ்க்கையை ஒரு கடுமையான விரதம் போல அனுஷ்டிப்பதில் எனக்கு உடன்பாடில்லை. ஒரு காலத்தில் கணவன் இறந்தபெண் உடன்கட்டை ஏறிறதோ, தலையை மழித்துக் கொள்றதோ கூட கற்பிலக்கணம் எனப்பட்டது. இப்ப அதுவே கேலிக்கூத்து ஆகலையா. இந்த வரைவிலக்கணங்கள் எல்லாம் மாறும் என்று கவிஞர் கிண்டல் பண்றார்."

கன்னிமாடத்தின் உப்பிரிகையில் நின்று முதன் முதலில் கண்டபோதே இராமனிடம் மனதைப் பறிகொடுத்து விட்டேனே...

சில வேளையில் வேறுயாரும் வில்லை ஒடித்துவிட்டால் நான் கற்பில் குறைந்தவளாகிப் போவேனே என்று சீதை பதறினாளாம் என்கிற அதீத கற்பனைகளைச் சாடுகிறார்?

"இந்தக் கவிதை காதல் என்கிற மாயைகள் நிஜவாழ்க்கைக்குச் சாத்தியப்படாது. இதுகளோட வினைக்கெடிற ஏமானியல்ல நான்."

"இப்பவே ஏதோ 20 வருஷம் வாழ்ந்து சலித்தவர் மாதிரி இருக்கு உங்க நிலமை........"

இதெல்லாம் ஏன் உங்களால் இயலாமல்போன விஷயங்கள் என்று கொள்ளப்படாது?

இயலாமல் என்ற வார்த்தை வாத்திக்கு உஷ்ணம் ஏற்றியது.

"உனது பொன் நிகர் கருத்துக்களுக்கு மிக்க நன்றி" என்று விட்டுத் திரும்பிப்படுத்தான்.

வேணியின் கலகலப்பு வாத்திக்குப் பிடிக்காது. "என்ன சும்மா எல்லாரோடையும் வழவழத்துக் கொண்டு?"

www.tamilarangam.net

வேணி பெரியதாய் கழுத்து வெட்டுள்ள சட்டை ஒன்றும் அணிபவளல்ல. இருந்தும் சட்டை சற்று இறுக்கமாக. வட்டக்கழுத்துச் சட்டை போட்டாலோ, சற்றுச் சேலையைப் பதித்துத் தழைய உடுத்தாலோ நாயகம் வாத்தி சன்னதம் கொள்ளும். சட்டையினூடாக பிறேஸியர் பட்டிகள் ஒன்றுந் தெரியக்கூடாது. அதனால் மிகத் தடித்த லைனிங் வைத்தே சட்டை தைத்துப் போடுவாள்.

பெண்கள் பிக்குணிகள் மாதிரி உடுத்த வேணுமென்பது அதன் விருப்பம் சேலைகள் கூட தான்தான் தேர்ந்தெடுக்க வேணும். தப்பித்தவறி எப்போதாவது அவளே வாங்க நேர்ந்து விட்டாலோ அதுக்கு நிச்சயமாகப் பிடிக்காது. பின்னால் திருப்பி மாற்ற வேண்டி வரும். வேணியும் தனக்கென தனித்தேவைகளும், ரசனைகளும் உள்ள சர்வ சுதந்திரமான ஒரு தனியன் (individual) என்பது வாத்தி சிந்திக்காத விஷயம்!

இப்போதெல்லாம் வேணி இரவு நித்திரையில் நிறைய வாய்புலம்புகிறாள். நிராசைகளா? அதிருப்திகளா? எதிர்பார்ப்புகளா? புலம்பித்தீர்க்கிறாள். ஆனால் ஒரு வார்த்தையும் புரியும்படி தெளிவாயில்லை. கசெட்டை ரிவேஸில் ஓடவிட்டது போல ஒரு மொழி. ஒரு நாள் பார்த்தால் சற்று நேரம் புலம்பினாள். பின் பூனை பால் நக்கிக் குடிப்பது போல சாளக்கு பொளிச் சாளக்கு பொளிச் சென்று மெலிதான சத்தம் ஒன்று கேட்டது. வாத்தி எழுந்திருந்தான். லாம்பு வெளிச்சத்தை சற்றே பெரிது பண்ணிக் கொண்டே அவள் முகத்தருகே கொண்டு போனான். வேணி சிலுக்கு பாணியில் மெல்லிய முனகலுடன் கீழ் உதட்டையும் மேலுதட்டையும் மாறிமாறிக் கடித்து ஈரப்படுத்திக் கொண்டிருந்தாள். வாத்திக்கு நொடியில் விஷயம் விளங்கியது.

"ஓங்கி நெஞ்சில் மிதிக்கலாமா?" என்று நினைத்தான்.

எதுக்கும் விடியட்டும் விவகாரம் வைத்துக் கொள்ளலாம்.

மீண்டும் "பொளிச்பொளிச்!"

திரும்பிப் பார்த்தான். முகத்தில் ஆனந்தப் புன்னகை வேறு! ரௌத்திரம் உள்ளோங்க குசினிக்குள் ஓடினான். துருவு பலகைதான் கையில் அகப்பட்டது. ஓரம் திரும்பி ஒருக்களித்துப் படுத்திருந்த வேணியின் விலாவில் தாட்சண்யமற்ற அடி இறங்கியது!

கனவிலே காதல் பண்ணாத பேர்வழிகள் யார்? கனவும் காதலும் வலியத்தானே வருகின்றன. புலன் அறிவுநிலை கடந்த நிகழ்வு. கனவும் காதலும் வாழ்வின் யதார்த்தக் கூறுகள். ஒரு தர்க்கத்திற்கு வேண்டுமானால் சொல்லலாம். கண்களை மூடிக்கொண்டிருந்து காதலைக்கூடி கருத்தடை பண்ணலாம்.

எனக்குக் கனவுகளே வேண்டாமென்று சதா கண்களைத் திறந்து வைத்துக் கொண்டு விழித்திருத்தல் சாத்தியமா?

பெண்ணின் கனவு காணும் உரிமையும் மறுக்கப்படுவது அவலம்!

"உமக்குக் காதல் அனுபவங்கள் ஏதும் இருக்கா?" அப்படி ஒன்று இருந்திருந்தால் அதை இயல்பாகக் கொள்ளக்கூடிய ஒருத்தனிடமிருந்து இப்படி ஒரு விஷமம் தோய்ந்த கேள்வி எழாது. வாழ்வின் யதார்த்த நிகழ்வுகளை, நெளிவு சுழிவு நுட்பங்களை புரிய முடியாதவர்களிடத்தில் சத்தியம் எடுபடாது.

"நான் அழகாய் துருதுருவென்று வேறு இருப்பேனா?"

"உனது முழுப்பெயர் சிவவேணி தானே? பெயரில் "சிவ" உள்ள எல்லாப் பெண்களுமே அழகாய்த் தானிருப்பார்கள். நான் கண்டவரையில்"

"அதனால என்னைப் பார்த்து யாராவது தமக்குள் ஆசைப்பட்டிருக்கலாம். ஆனா நானாய் யாரையுமே காதலிக்கல்ல... இனிமேல் தான் உங்களைக் காதலிக்கப்போறேன்."

வாத்திக்குள் பலாபிஷேகம்

"அதென்ன தூக்கத்திலேயே உன்பாட்டுக்கு உன் உதட்டையே தடவிக்கிறே...?"

"நம்ம தோட்டத்தில நிற்கிறேனா தேன் கதலிப் பூவிலயிருந்து ஒரு சொட்டுத்தேன் என் உதட்டில் விழுற மாதிரிக் கனவு வந்தது. அதுதான்... ஆமோ...?"

எல்லோரையும் போல பத்தினிப் பெண்ணாக வளைய வந்து கொண்டு காலத்திற்கு அவன் குடிலில் சோறு தின்னலாம்.

உதைபட இன்னும் அனந்தம் வேணிகள் இருக்கிறார்கள்.

www.tamilarangam.net

## எஸ்.சுகந்தி சுப்ரமணியன் கவிதைகள்

(1)

மீண்டும் அலைவதில்
உற்சாகம் கொள்கிறேன்.
எண்ணங்களை ஓடவிட்டு
எனது பணிகளை
உனக்கு அளித்தபடி
தப்பிக்கிறேன்
நீ என்னிடமே திருப்புகிறாய்
ஓடும் ரயில்வண்டியின்
உற்சாகத்துடன்
நான் உன்னை சந்திக்கிறேன்.
நீயோ அமைதியான குளமாய்
நிற்கிறாய்
எனது கல்லில் படர்ந்த அலைகள்
உன் முகத்தில் தெரிகிறது
மீண்டும்
நான் அமைதியுறவே
நீ வேண்டுகிறாய்.
நானும் உன்னைச் சந்திக்கையில்
எல்லாமும் மறக்கிறது அதையும்
சேர்த்து

(2)

அன்றிலிருந்து இன்றுவரை
தேடல் தொடர்கிறது
நாளையும் தொடரும் தேடலுக்கு
காத்திருக்கும்
பெண்களின் மனசு
உணர்ந்ததை சொல்லி
கிடைத்ததை உண்டு.
கேட்டவற்றில் தனக்குதவும் சிலதை
ஏற்று,
தேடலைத் தொடர்வதில்
ஆபத்தை உணர்ந்து
மௌனியாகி
கொஞ்சம் கோபம்
கொஞ்சம் அழுகை
இன்னும்
சாமியாடி தன்னிலையை
உணர்த்திய பின்னும்
ஏற்கவில்லை அவர்கள்

(3)

எப்பொழுதும் நீ
எதற்காகவும் அஞ்சாமல்
இருக்கிறாய் என்பாய்
எனக்குள்ளிருந்து மீண்டுவரும்
நிமிடங்களை வருஷமாக்கியது
என் இயல்பு
மிக வேகத்தோடு
நட்பு கொண்டாயிற்று
எனினும்
எனக்கான பதிலில்லை உனக்குள்
எங்கும் வியாபித்திருக்கிறாய் நீ.
நான் மட்டும்
நிழலின் பிம்பங்களோடு
பேச்சு வார்த்தை நடத்தியபடி
பூமியில் உதறித்தள்ள
எதுவுமில்லை எனது உன்னைத் தவிர
நீ எப்போது நானாவாய்?
மலர்களின் துக்கத்துடனா?

(4)

மரங்களை சூழ்ந்த காலைப்பொழுதும்
சூரியன் தோன்றும் வானமும்
பனிகளடர்ந்த மலைகளும்
பசுமையான நிலப்பரப்பும்
பார்வைக்குக் காணக் கிடைத்தாலும்
அலறுகின்ற குழந்தையைத்தான்
கவனிக்கிறேன் தினமும்
எனக்கென்று இருக்கும்
மௌன இடைவெளிகளை
நிரப்புவது போல் கிடைத்த காட்சிகளை
நிரம்பாமலே நிற்கின்றது.
தினமும் காலையில்
பறவைகள் பறக்கையில்
துப்பாக்கி சத்தம்
சலனமற்றுப் பார்த்துக் கொண்டிருக்கிறேன்
தினமும்
மௌனங்கள் வாழ்க்கையின் லட்சியம்
போல்
மனிதர்களின் இறுகிப்போன முகங்கள்
எதுவும் பேச இல்லையென எதிரே
நகர்ந்தபடி.

www.tamilarangam.net

# நிலம் நந்தவனமானபின்

-காவேரி

விசித்திரமாகத்தான் இருந்தது

வீட்டின் முன்பகுதியில் அப்படியொரு வாயை பிளக்கும் வறட்சி 'தோட்டம்.' 'பூங்கா' போன்ற வார்த்தைகளே மனதைத் தீண்டாமல் போகுமளவு வறட்சி. மரம், செடி, பூ, புல், கொடி என்ற எதுக்குமே இடமில்லாதது போல ஒரு முகப்பு. வெளியிலிருந்தபடியே பறந்து, வீட்டின் பக்கவாட்டை வட்டமிட்டு, பிறகு பின்புறம் போன போது.... அடேயப்பா... முகப்பிற்கு எதிர்மாறாக... பளிச்சென வித்தியாசம் பதிவாகும்படி, எவ்வளவு பச்சை பசேலென ஒர காட்சி என்று வியந்தது. அந்தக் குருவி கண்களை ஈர்க்கும் தழைந்தத்தோட்டம். செழித்த செடி, கொடிகள், சுற்றிலும் நெஞ்சையள்ளும் பசுமை. அப்படியிருக்கும் இடத்தில் குடிக்க தண்ணீர் கிடைக்காமலா போய்விடும் என்று நினைத்தவாரே அங்கு வட்டமிட்ட குருவி. அந்த வீட்டின் பின்கட்டில், இறங்கிக் கொள்ள ஒரு வசதியான, பத்திரமான இடத்தை தேடிற்று.

அட! இங்கே இன்னும் எத்தனை எத்தனை குருவிகள்! இப்போது புரிந்தது. இந்த பக்கம் பறந்து வரும் போதே நிறைய குருவிகளின் பேச்சொலிகள் ஏன் கேட்டன என்று... ஆனாலும், ஒரு கணம் இந்த வீட்டின் வரண்ட முகப்பைப் பார்த்தபோது, சரிதான். இங்கே நமக்கு என்ன கிடைக்கப் போகிறது என்று ஏமாந்துப் போனேன். அடேயப்பா, இங்கே குருவிகளின் ஒரு பட்டாளமே இருக்கே! அதில் சில குருவிகளை நான் ஏற்கனவே ஊரில் பல இடங்களில் பார்த்திருக்கிறேன். அது சரி. குடிக்கத் தண்ணீர்?

அதோ! ஓரத்தில், ஒரு சின்ன தொட்டியில், தண்ணீர் பளபளக்கிறது, ஆனால்அதை சுற்றி மற்ற குருவிகளுடன் இரண்டு காக்கை, ஒரு குயில், ஒரு மஞ்சள் கானரி, இரண்டு மரங்கொத்திகள் மற்றும் இன்னும் ஓரிரண்டு பறவைகள் அலகை முங்கி, முங்கி, தண்ணீர் குடிக்கின்றனவே? சரி, கீழே இறங்கித்தான் பார்ப்போமே...?

விர்-ரென்று பறந்து தண்ணீர் தொட்டியின் விளிம்பில் போய் நின்றது குருவி. அங்கு இருந்த குருவிகள் இடம் கொடுத்து நகர்ந்துக் கொண்டன. ஆனாலும் புதுக்குருவி, காக்கையை பார்த்தவுடன் கொஞ்சம் ஜாக்கிரதையாக ஒதுங்கிக் கொண்டது. அதை கவனித்த காக்கையும் சீக்கிரமாக தண்ணீரை குடித்துவிட்டு பறந்து போயிற்று.

எங்கே இப்படி வந்தே? என்றது ஒரு குருவி. இந்த பக்கம் பறந்துக் கொண்டே வந்தேன். தாகம் இந்த வீட்டின் முதப்பைப் பார்த்து, சட்! பேருக்கும் ஒரு நுனிப்புல் இல்லாத இந்த வீட்டில் என்ன கிடைக்கப் போகதுன்னு நெனச்சுகிட்டுப் பறந்தேன். ஆனா என்ன ஆச்சரியம்! பக்கவாட்டத்துலேந்து தொடர்ந்து பிறகு பின்கட்டு முழுக்க இப்படியொரு அழகான, செழித்த தோட்டம்! என்றது புதுக் குருவி. ஆச்சரியம்தான். என்றது சகக் குருவி, நானும் அப்படித்தான் முதலில் வீட்டின் முகப்பைப் பார்த்து ஏமாந்துப் போனேன். இங்கே இருக்கும் எல்லாப் பறவைகளின் முதலநுபவமும் அப்படித்தான் இருந்திருக்கும். பிறகு எங்களுக்கு இது ரொம்பவும் பிடித்தமான இடமாகப் போய்விட்டது. தினமும் இங்கே தான் தண்ணீர் குடித்து, இரைதேடி, காதலித்து கொம்மாளமிட்டு, விளையாடி களிக்க வருகிறோம். வா. நாம் எல்லோருடனும் சேர்ந்து தானியங்களை கொறிப்போம் என்றது.

அட! எத்தனை, எத்தனை தானியங்கள் இங்கே இறைத்து கிடைக்கின்றன! என்று வியந்தது புதுக்குருவி. தானியங்களை ஆவலுடன் அலகினால் கொத்தி பொறுக்கி எடுத்து விழுங்கியது.

சகக்குருவி சிரித்தது. இதைப் போய் பெரிசாக சொல்கிறாயே. நீ வந்தது ரொம்ப லேட் நாளை அதிகாலையில் வந்துபார். எப்படி அந்த தாத்தா தானியங்களை கை நிறைய அள்ளி நமக்காக இறைப்பார் என்று தெரிந்துக் கொள்வாய் என்றது.

"எந்த தாத்தா?"

அதோ பார். தோட்டத்தில், மரத்தடியில் சாய்வு நாற்காலியில் உட்கார்ந்தபடி அமைதியாக புத்தகம் படித்துக் கொண்டிருக்கிறாரே. அவர் தான் புதுக்குருவி மனித உருவத்தை


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கவனித்தவுடன் சற்றே அச்சமுற்று, தள்ளிபோய் உட்கார்ந்துக் கொண்டது. அங்கிருந்தபடியே கழுத்தை இப்படியும் அப்படியுமாக திருப்பிப் பார்த்து, படிக்கும் தாத்தாவை முன்ஜாக்கிரதையுடன் கவனித்துக் கொண்டது. நண்பன் குருவி, புதுக்குருவியைப் பார்த்து வாய்விட்டு சிரித்தது.

அசடே, ஏன் பயப்படுகிறாய்? என்றது. இந்த தாத்தாவினால்தான் நாம் எல்லோரும் இந்த அழகிய தோட்டத்தில் வருடக்கணக்காய் வந்து வயிறு புடைக்க தானியங்களை சாப்பிட்டு தோட்டத்தின் புழுக்களை விழுங்கி ஜில்லென்ற தண்ணீரை விழுங்கி, மிருதுவான பசும்புல்லை அலகில் அள்ளிக் கொண்டு கூட்டிற்குப் போகிறோம். இந்த மரங்களின், செடிகளின் குளிர்ந்த நிழலில் விளையாடுகிறோம். ஓய்வெடுத்துக் கொள்கிறோம். இந்தத் தோட்டத்தைப் படைத்தவரே தாத்தாதான். எப்போதும் வீட்டின் வெளியேதான் இருப்பார். நடுப்பகலிலும், இரவிலும் மட்டுமே உள்ளே படுத்துக் கொள்ளப் போவார் என்று விளக்கியது நண்பக்குருவி.

புதுக்குருவி தலையை ஒரு பக்கமாக ஒருக்களித்துக் கொண்டு, ஓரக்கண்ணால் தாத்தாவைப் பார்த்தது. பிறகு, கொஞ்சம் கொஞ்சமாக தத்திதத்தி பறந்து அவரை நெருங்கியது. படிக்கும் அவர் உருவத்தை நோட்டம் விட்டது. தலை முழுக்க வெள்ளிப் பட்டுபோல தூயமாக நரைத்த முடி முகத்தில் குளுமையான சாந்தம். அதன் மேல் மெல்லிய பனிபோல படர்ந்திருந்தது சோகம். சுத்தமான வெள்ளை வேட்டி, ஜிப்பாவிற்குள் நலிந்து மெலிந்த ஆனால் உறதியான உடல் இவரா இத்தனை கடும் உழைப்புடன் முனைப்புடன் இந்த அழகான வண்ணத் தோட்டத்தை அமைத்து, அதை பேணி வளர்க்கிறார்? அதிசியமாக இருக்கே? குருவி இப்படியும், அப்படியும் தலையசைத்து தோட்டத்தை திரும்பிப்பார்த்தது. தழைந்த செடிகள், மரம் பூக்களில்தான் எத்தனை வகைகள்! ரோஜா பிடுனியா பான்ஸி, மல்லிகை, பால்ஸம் தேனீக்கள் வட்டமிடும் ஸால்வியா, மனிதமுகம் போல பிரம்மாண்டமான டாலியா, செம்பருத்தி, இன்னும் எத்தனையோ, ஆனால் தோட்டக்கலையை சிறப்பாக செய்யும் தாத்தா பின்னே ஏன் வீட்டின் முன்னால், அந்த முகப்பை மட்டும் அப்படி உதாசீனப்படுத்தி வறட்சியாக விட்டுவிட்டார்?

பட்டென்று பின்கட்டுக் கதவைத் திறந்துக் கொண்டு வெளியே வந்தாள். ஒரு தடித்த பெண்மணி, உடனே விர்றென்ற அந்த இடத்தை விட்டு பயந்துப் பறந்த குருவி, மறுபடியும் மற்றக்குருவிகளுடன் சேர்ந்துக் கொண்டது. வெளியே வந்த தடித்தப்பெண்மணியை அந்தக் குருவிகள் மூச்சுவிடாமல் பார்த்தபடி நின்றன.

"என்ன, உங்களைத்தானே சாப்பிட வாங்கன்னு எத்தினி தடவை கூப்பிடறது? இங்கே வந்து உட்கார்ந்துக்கினு?" என்றாள் தாத்தா அவளை திரும்பிப் பார்த்து

"எனக்கு சாப்பாடு வேண்டாம்" என்றார்.

"இன்னாது! மூணு நாளா சோறு வாண்டாம் டிபன் வாண்டாம், நீர்மோரு வாண்டாம்னு. இதெல்லாம் என்ன வீம்புக்க செய்யறீங்கங்கறேன்? ஒங்க மகனும் ஒங்க காலை புடிச்சு கெஞ்சியாச்சு. தோ நானும் எல்லா வேலையையும் அப்படியே போட்டுட்டு, தெனம் ஒங்களோடு போராடுகிறேன்."

"................................"

"அப்படி என்ன கோபம்? என்ன தப்பு செஞ்சுட்டோம்?"

"................................"

"நா ஒருத்தி மூத்த மருமகளாவந்து இப்படி கெஞ்சி கேக்கறேன் பாரு. எனக்கு நல்லா வேணும் சரி மங்கையை அனுப்பறேன். அவ இனிமையா பேசுவாளில்லே? அவ கூப்பிட்டா வருவீங்கபோல மங்கை! ஏண்டி மங்கை!" என்று கூவியபடி அந்தப் பெண்மணி வீட்டிற்குள் போனாள்.

குருவிகள் தத்தி, தத்தியபடி தாத்தாவை நெருங்கின. அவர் மௌனமாக புத்தகம் படித்துக் கொண்டிருந்தார். ஏன் தாத்தா. இப்படி எத்தனை நாள் பட்டினி கிடப்பீங்க? என்று கிரீச் கிரீச்சென்று பதைப்பதைத்தது ஒரு பெண்குருவி.

அவங்க கிடக்காங்க, வுடுங்க மனித புத்தி, பீபுத்தி என்று சரியாத்தான் சொல்றாங்க அவுங்களுக்கு ஒங்க வூடு வேணும். ஒங்க சொத்து வேணும் ஒங்க நிலத்தின் விளைச்சல் வேணும். ஆனா நீங்க வேண்டாம். அதான் ஒங்க வூட்டுக்குள்ளே ஒங்களுக்கென ஒரு தனி

www.tamilarangam.net

இடமில்லாம பண்ணிட்டாங்க. ஆனா கெடக்க, வுடுங்க ஒங்களையே ஏன் இப்படி வருத்திக்கிறீங்க? கடவுள் கொடுத்த உடம்பை நல்லா பாத்துக்குங்க. நல்லா சாப்பிட்டுத் தூங்குங்க என்று கிரீச்சிட்டது குருவி. அதைப் பார்த்துப் புன்னகைத்த தாத்தா, மறுபடியும், மடியில் இருந்த புத்தகத்தில் கவனம் செலுத்தினார்.

அவள் சொன்னது ரொம்பரைட் என்றது ஒரு ஆண் குருவி. உங்க உடம்பை நீங்க நல்லா பார்த்துக்க வேண்டியதுதானே. இந்த வீடே உங்களுக்குத்தான் உடைமை. இந்தத் தோட்டத்திற்கு நீங்கதான் ராஜா. சும்மா ராஜாவாட்டம் நல்லா சாப்பிட்டு, ஓய்வெடுத்துக்குங்க தாத்தா, ப்ளீஸ்!

ப்ளீஸ், ப்ளீஸ்! எங்களுக்காக சாப்பிடுங்க! என்று எல்லா குருவிகளும் சேர்ந்துக் கொண்டு கிரீச்சிட்டன.

புத்தகத்திலிருந்து தலை நிமிர்ந்த தாத்தா, அவர்களைப் பார்த்து சிரித்தார். ஆள்காட்டி விரலை உதட்டின் மேல் பதித்து, மெல்ல உஷ்! என்று எச்சரித்தார். குருவிகள் அதை கொஞ்சமேனும் பொருட்படுத்தாமல் கீசி கீசி என்று படபடத்தன.

இப்படியே சாப்பாட்டை தண்ணீரை விட்டு விட்டால் அப்புறம் தாத்தாவுக்கு என்ன ஆகும் ஐய்யோ!

உண்மைதான் உங்க மூன்று மகன்களும் இரக்கமில்லாத சந்தர்ப்பவாதிகள். உதவாக்கரை பசங்க. உங்க மூன்று மருமகப்பெண்களும் கொஞ்சமும் பண்பில்லாதவங்க. அதற்காக நீங்க ஏன் உங்க உடம்பை கெடுத்துக்கணும் உம்? என்று கேட்டது இன்னொரு பறவை.

"ஏன் கெடுத்துக்கணும்?"

"ஏன் கெடுத்துக்கணும்?" என்று சேர்ந்து கூச்சல் போட்டன எல்லா பறவைகளும்.

உங்களுக்கு கடவுள் எல்லா ஐச்வரியத்தையும் கொடுத்திருக்கிறார். உங்க பூஜைக்கு மல்லிகையும், அரளியும், செம்பருத்தியும் சொரிந்து பொழியும் செடிகள், சதா தெய்வீகமாக மணக்கும் மருக்கொழுந்து பாத்தி, பட்டு போல பசும்புல், கண்ணைப் பறிக்கும் வண்ண பூங்கா உங்களுக்கு ஏதாவது நேர்ந்துவிட்டால், இந்தத் தோட்டம் மடிந்து போய்விடுமே தாத்தா?

தோட்டம் மட்டுமல்ல, நாங்கள்ளாமும் மடிந்து போய்விடுவோம் என்றது ஒரு குழந்தை மஞ்சள் கானரி. நீங்க அதிகாலையில் தானியங்களை இறைக்கவில்லையென்றால் நான் என்ன பண்ணுவேன்? அப்புறம் எனக்காக இரைதேடி எங்கம்மாவுக்கு ரொம்பவும் தொலைவில் தேடி பறக்க வேண்டுமே? என்றது.

இங்கேதான் நான் தைரியமாக பறக்கக் கற்றுக் கொண்டேன். என் சொந்த அலகினால் தானியம் பொறுக்கப்பயின்றேன், என்றது ஒரு குட்டிக் குருவி.

நாங்கள்ளாம் எங்கே போவோம்?

நாங்கள்ளாம் என்றால்? கொஞ்சம் அதட்டலாக

கேட்டபடி விர்ரென்று அங்கு பறந்து வந்தன இரண்டு மரங்கொத்திகள். எங்களை ஏன் விட்டு விட்டீங்க என்ற குருவிகளைப் பார்த்து கேட்டன.

தாத்தா நம் எல்லோருக்கும் தாத்தா என்றபடி, அக்கம் பக்கத்திலிருந்து பறந்து வந்தன குயில்கள் மற்றும் மார்பு சிவந்த சிறு ராபின்கள், கா, கா என்று ஆமோதித்தன. மரத்திலிருந்து இறங்கி வந்த காக்கைகள், கா, கா, கா ப்ளீஸ் சாப்பிடுங்க தாத்தா, கா, கா, கா....க்கும் இது ஒண்ணுதான் பாக்கியாக்கும்! என்று கையை வீசி காக்கைகளை விரட்டியபடி அங்கே வந்தாள் மங்கை. விருந்தாளிகள் சாப்பிட வராங்க, ஊரிலேந்து வராங்கன்னு வந்தாள் மங்கை. விருந்தாளிகள் சாப்பிட வராங்க. ஊரிலேந்து வராங்கன்னு அறிவிப்பு கொடுக்கிறீங்களா, சன்யன்கள்! போங்க! என்று ஆவேசமாய் விரட்டினாள்.

காக்கைகளுடன் குருவிகள், ராபின்கள், மரங்கொத்திகள், மற்றும் கானரிகளும் படபடத்துக் கொண்டு நான்கு திசைகளில் பறந்து போயின.

"அப்பா, என்றழைத்தாள் மங்கை. மெதுவாக சாப்பிடவாங்கப்பா, ப்ளீஸ், மூணு நாளாச்சு நீங்க சாப்பிட்டு," என்று கெஞ்சினாள்.

www.tamilarangam.net

அடையப்பா, குரலில் என்ன குழைந்த இனிமை, பார். என்றது காம்பவுண்டு சுவரில் உட்கார்ந்த ஒரு குருவி. ஆமாம், அவளுக்கென்ன? அவள் ஒரு கைசிறந்த நடிகை, என்றது மேலே மரக்கிளையில் உட்கார்ந்திருந்த காக்கா.

தாழ்ந்த குரலில் நைஸாக பேசி, ஆளை ஏமாற்றும் கலை இவளுக்கு வாய்த்திருக்கிறது. தாத்தாவின் முதுகுக்குப் பின்னால் கணவனுடன் எத்தனை சூழ்ச்சி செய்கிறாள் என்றது மரங்கொத்தி.

ஆமாம், என்றது காக்கை தன் கணவனுடன், அதான் அந்த இரண்டாம் மகனுடன் இரவில், இந்த ஜன்னலோரமாக அவள் திட்டம் போடுவதை நான் மரக்கிளையிலிருந்து, அரை தூக்கத்தில் விழித்துக் கொண்டு கேட்பேன். பிறகு என்ன தூக்கமே போய்விடும் என்றது.

ஏன், என்றது புதியகுருவி. கேட்டின் மீது உட்கார்ந்தபடி அப்படி என்ன பேசிக் கொள்வார்கள்?

உனக்கு என்னத் தெரியும் அவுங்க பண்ற அக்கிரமம்? நீ புதிசு, என்ற காக்கை, தொடர்ந்து இத்தனை பெரிய வீடு, பெரிய பெரிய அறைகள், கூடம், முற்றம், முன்கட்டு, பின்கட்டு இந்தத் தோட்டம் மற்றும் வெளியே..... பண்ணை எல்லாவற்றையும் சேர்த்து, கணக்கிட்டு, மூன்று சமபங்காகப் போடச் சொல்லுங்கன்னு கணவனிடம் மெல்லிசை குரலில் விவாதித்தாள் என்றது அப்படியா? அப்புறம் என்று கேட்டது குயில், அவள் கணவன் சொன்னான். நான் எத்தனை முயற்சி செய்தாலும், அண்ணா மறுக்கிறான். நான் மூத்தவனாக்கும், எனக்குத் தான் எல்லோரையும் விட பெரிய பங்கு உரித்தாகும் என்று வாதாடுகிறான். அதாவது வீட்டின் முகப்பு, கூடம், ஒரு பக்கத்துப் படுக்கை அறைகள், பிறகு இந்தத் தோட்டம் என்று வரிசையாக.

ஐய்ய, மோரகட்டை! என்று கூர்மையான மூக்கை இடித்துக் கொண்டது மரங்கொத்தி, தோட்டம் வேண்டுமாம். தோட்டம்! ஒரு நாள் இங்கே வந்து கையால் மண்ணைத் தொட்டானா, தண்ணீர் ஊத்தினானா? என்று பொருமியது.

எங்களுக்கு தானியங்கள் போட்டானா? என்றது கணீரென்று. அந்தக் குஞ்சு குட்டிக் குருவி.

அப்படிச் சொல்! என்று பாராட்டியது காக்கை அப்புறம்? என்று பறவைகள் கேட்டன.

அப்புறம் நள்ளிரவில் ஒரே சண்டை, சத்தம் என்றது காக்கை என் கூட்டில் இருக்கும் குஞ்சு காக்காய்களும் விழித்துக் கொண்டன.ற

பிறகு என்ன ஆச்சு? சொல், சொல்! இந்த மங்கையுடனும், அவள் கணவனுடனும், அந்தக் கடைசி பையனும், அவன் மனைவியும் சண்டைபோட்டார்கள். இதென்ன விசித்திர பாகப்பிரிவினை, ஒருத்தனுக்கு முன்கட்டில் ஒரு அறை, இன்னொருத்தனுக்கு பக்கவாட்டத்தில் ஓர் அறை என்று? முட்டாள்தனம்! ஆனா நானும், என் மனைவியும் படித்தவங்க, ஜாக்கிரதை! எங்களை முட்டாளாக்க முடியாது. சும்மா முழுவீட்டையும் விற்கலாம். அப்புறம் மூன்று சமபங்காகப் போட்டுக் கொள்ளலாம் என்றான். "அதற்கு நம்ம அண்ணன் இணங்கமாட்டான் என்றான்." அந்த இரண்டாம் தடியன். எப்படி மாட்டான், நானும் ஒரு கை பார்க்கிறேன் என்று ஆவேசமாகக் கத்தினான். பிறகு அறையில் விளக்கு அணைக்கப்பட்டது. அப்படியும் இருட்டில் என்னமோ கசமுசன்னு கொஞ்ச நேரம்பேசிக் கொண்டாங்க. ஒன்றும் தெளிவாகக் கேட்கவில்லை என்றது காக்கை.

என்ன அக்கிரமம்! என்று ஒரே வாயில் கும்பலாகத் திரட்டிக் கொண்டு, கீச்-கீச் சென்று குருவிகள். தாத்தாவை இப்படி ஒரேயடியாக வீட்டிற்கு வெளியே விரட்டி விட்டார்களே, வெட்கமில்லாதப் பிணந்தின்னிகள்! பிணந்தின்னிகள்!! பிணந்தின்னிகள்!!!

எல்லா பறவைகளும் ஒருங்கே சேர்ந்துக் கொண்டு கூவினாலும், புதியக் குருவியின் குரல் உயர்ந்து கணீரென்று ரீங்காரமிட்டது.

"என்ன இது, சட்! ஏதோ மிருக கண்காட்சி மாதிரி இருக்கு இந்த இடம், விஷ்! விஷ்! கெட் அவுட்!" என்று பறவைகளை விரட்டியபடி அங்கே வந்தாள் மூன்றாம், மற்றும் கடைசி மருமகளான "மாதவி."

www.tamilarangam.net

"டாடி! சாப்பிட வாங்க, நேரமாச்சு, வாங்க டாடி, ப்ளீஸ், என்றாள் தாத்தாவைப் பார்த்து."

"நீ போய் சாப்பிடும்மா, என்றார் தாத்தா, தலை நிமிராமல்."

"அது எப்படி, உங்களை விட்டுட்டு சாப்பிடமாட்டோம் இம்பாசிபிள். பசிக்கறது. டாடி, சீக்கிரம் வாங்க."

"எனக்கு பசிக்கலைமா," என்றார் தாத்தா, அப்படியெல்லாம் சொல்லாதீங்கப்பா, உடம்புக்கு என்னவாகும்? வாங்கப்பா, என்றழைத்தாள் மாதவி, மெதுவாக. ஐய்ய, என்ன குழைவு பார். வாங்கப்பா, வாங்கப்பா... என்று அதே போல அழகுகாட்டியபடி

பாடியது குயில்.

"எனக்கு பசிக்கலைமா, என்றார் தாத்தா"

"மூன்று நாட்களாக சாப்பிடவில்லையே? என்றாள் மங்கை,"

நாங்க ஏதாவது தப்பு செய்திருந்தால் மன்னிச்சுருங்க அப்பா,

மன்னிச்சுருங்க, ஹா, ஹா, கா, கா
மன்னிச்சுருங்க, ஹா, ஹா, கா, கா
மன்னிச்சுருங்க, ஹா, ஹா, கா, கா

"ஏய்! சட்! கெட் அவுட், உஷ்! என்று கைகுட்டையை ஆட்டி காக்கைகளை விரட்டினாள் மாதவி."

"சே, ரொம்ப உபத்திரவமாப் போச்சு, இரண்டு கைகளையும் ஆட்டியபடி விரட்டினாள்."

பக்கம், பக்கமாய் சிதறிப் போன பறவைகள், மீண்டும் விடாமல் காம்பவுண்டு சுவரிலும், பின் கேட்டின் விளிம்பிலும், மரக்கிளைகளிலும், சற்றே தள்ளி புல் தரையிலும், தண்ணீர் தொட்டியின் விளிம்பிலும் உட்கார்ந்துக் கொண்டு, பரஸ்பரம் பேசிக் கொண்டன.

"இத பாருங்க டாடி, இப்படி சின்ன கொளந்தை மொரண்டு பிடிக்கிறமாதிரி இங்கே உக்காந்துகினா நல்லாவேயில்லை, ஆமா, சீக்கிரமா சாப்பிட வாங்க, நாங்க வெளியே போகணும், என்றாள். மாதவி."

நீங்க எல்லோரும் தானே தாத்தாவை வெளியே விரட்டினீங்க. அவருக்கென்று ஒரு தனியறை கொடுக்காமல், ஒதுக்கமா ஒய்வெடுக்க ஒரு ஓரமுமில்லாமல், என்று பெருமூச்சு விட்டது ரோஜா ஆமா, நீங்கதான் விரட்டினீங்க, என்றது ஃப்ளாக்ஸ்

விரட்டினீங்க! விரட்டினீங்க!! விரட்டினீங்க!!!

என்றபடி அசைந்தன. மல்லிகை செம்பருத்தி, ஸால்வியா, லில்லி.

இனிமேல் தாத்தாவுக்கு இந்த தோட்டம் தான் வீடு.

பூமிதான் அவருடைய தரை. வானம் தான் அவருக்கு கூரை. இனி அவர் உள்ளே வரமாட்டார் என்றது டாலியா. உள்ளே வரமாட்டார் உள்ளே வரமாட்டார், என்று ரீங்காரமிட்டன, டாலியாவின் மீது வட்டமிட்ட தேனீக்கள்.

உள்ளே வரமாட்டார் வரமாட்டார் என்று சேர்ந்து கூச்சல் போட்டன பறவைகள்.

மாதவி தாத்தாவை முறைத்து பார்த்துவிட்டு தோளை குலுக்கியபடி வீட்டிற்குள் போய் சேர்ந்தாள். அவளைத் தொடர்ந்து மங்கையும் உள்ளே போனாள்.

தாத்தா புத்தகத்திலிருந்து தலை நிமிர்ந்து, அவர்கள் போவதைப் பார்த்தார். பிறகு பறவைகளை, தேனீக்களை, செடிகளை, மரங்களைப் பார்த்து, இரகசியமாக கண்ணடித்தார். சிரித்தார்.

மறுபடியும், பறவைகள் உட்கார்ந்திருந்த இடத்தை விட்டு, தத்தி, தத்தி, தாத்தாவின் மிக அண்மையில் நெருங்கி வந்தன. கீச் கீச்சென பேசிக் கொண்டன.

பின் கதவு திறந்துக் கொண்டது. இப்போது தாத்தாவின் இரண்டாம் மகன் கார்த்திகேயனும், மூன்றாம் மற்றும் கடைசிமகன் மதிவேலனும் உள்ளேயிருந்து வந்தார்கள்.

www.tamilarangam.net

"என்னப்பா இதெல்லாம்?" என்றான் மதிவேலன் "அந்தக் கேள்வியை நா கேக்கணும்," என்ற தாத்தா, அவர்களைப் பார்த்து புன்னகைத்தபடியே சொன்னார்.

''பசிக்கலை, சாப்பாடு வேண்டாமென்றேன், அதற்கு ஏன் இத்தனை அமர்க்களப்படுத்தறீங்க?" என்றார் தொடர்ந்து.

"பின்னே என்னவாம்? நாங்க எங்கமட்டுலே சாப்பிட்டுத் தூங்குவோம்னு நெனச்சீங்களா?" "என்றான் கார்த்திகேயன்." அப்படி அண்ணாவுக்கு செய்ய முடியும். எங்களால் முடியாது என்றான் மதிவேலன்.

"மாதவியும் மங்கை அண்ணியும், பெரிய அண்ணியும் இங்கே வந்து, வந்து, கெஞ்சி கேட்டுக்கிட்டாங்க. நீங்க என்னமோ இப்படி ஒரேயடியாகப் பிடிவாதம் பிடிக்கிறீங்க. நாள் பூரா வெளியே உட்கார்ந்துக்கின்னா உடம்புக்கு ஒத்துக்குமா? வீட்டுக்குள்ளே வாங்க" என்றான் மதிவேலன்.

இதுதான் வீடு இது தான் நந்தவனம். இங்கே தான் இருப்பார் என்று எல்லா பறவைகளும் சேர்ந்து கூச்சல் போட்டன.

ஏய், உஷ்! இதென்ன பேஜாராப் போச்சு! என்று மேல் துண்டை ஆட்டி பறவைகளை விரட்டினான் கார்த்திகேயன். ஒரு சில பறவைகள் மட்டுமே நகர்ந்துக் கொண்டன. பெரும்பான்மை பறவைகள் அங்கே இருந்தபடியே கத்தின.

"எங்களுடையத் தாத்தா"

"இங்கேயேத்தான் இருப்பார்."

இங்கேயேத்தான் இருப்பார். என்று இரைந்தன "சீ!" நகருகிறதாப் பார்! என்ன தைரியம் இதுகளுக்கு! என்று ஒரு தடியை எடுத்துக்கொண்டு சுழற்றினான் மதிவேலன்.

"எல்லாம் அப்பா கொடுக்கிற செல்லம். உள்ளேயிருந்து சாக்கு சாக்காக தானியங்களை எடுத்து வந்து, இதுகளுக்கு அள்ளி இறைக்கிறாங்க. அதிகாலையில் வேறு வேலையில்லை அப்பாவுக்கு" என்றான் கார்த்திகேயன்.

"அதான் இப்படி பட்டாளமா வந்து சொந்தம் கொண்டாடரதுகள், சனியன்கள்," என்றான் மதிவேலன்.

தாத்தா சாய்வு நாற்காலியைவிட்டு எழுந்தார். தாத்தா, படுத்து ஓய்வெடுத்துக்குங்க, என்று மென்மையாக இழைந்தது குயில்.

நாளை காலையில் பார்ப்போம், என்றது தேனீ

காலையில் பார்ப்போம் காலையில் பார்ப்போம், என்று எல்லாத் தேனீக்களும் சுற்றி, சுற்றி பறந்து வட்டமிட்டது.

"வாங்கப்பா," என்று இரண்டு பையன்களும், அப்பாடா என்று மூச்சுவிட்டபடி கதவை நோக்கி நடந்தார்கள். அவர்களை பின்னால் தொடர்ந்து நடந்த தாத்தா, ஒரு முறை பறவைகளைத் திரும்பி பார்த்து சொன்னார்.

இவா ரெண்டு பேரும் பேசினதை மனசுக்கு எடுத்துக்காதீங்க. இவா கெடக்கட்டும். நாளை காலை நா உங்களுக்கெல்லாம் இன்னும் அதிகமாக தானியங்களைப் போடுவேன். எல்லோரும் வந்து சாப்பிடுங்க, என்றார். பறவைகள் அனைத்தும் குதித்து, கும்மாளமிட்டு ஆரவாரித்தன.

என்ன சொன்னீங்க? என்று, சட்டென்ற திரும்பிப் பார்த்து கேட்டான் மதிவேலன்.

"ஒன்றுமில்லேயே," என்றார் தாத்தா.

"இப்போ ஏதோ பேசினீங்களே?" என்றான்

"யார், நானா?" என்று சிரித்தபடி தலையசைத்த தனது அப்பாவின் கண்களில் மிளிர்ந்த குறும்பைப் பார்த்து ஒரு கணம் குழம்பி நின்றான் மகன்.

மறுகணம் கொல்லென்ற சிரிப்பலைபோல பறவைகளிடமிருந்தது. பரவலாகக் கேட்டது. இன்னும் மருட்சியுடன் அதைப் பார்த்தான் மதிவேலன். கண்ணடித்து, தாத்தா பறவைகளைப் பார்த்து ஒரு முறை சிரித்து, தலையசைத்தபின் உள்ளே போனார்.

www.tamilarangam.net

அந்தப் பத்துக் குருவிகள் வந்து சேருவதற்கு முன்னதாகவே புதுக்குருவி வீட்டின் வறட்சியான முகப்பில், முன் கேட்டின் மேல் பதட்டமாகக் குதித்து, குதித்து கிரீச்சிட்டுக் கொண்டிருந்தது.

அட நீ இன்றைக்கு எங்களுக்கும் முன்னால் வந்து, நிறைய தானியங்களை அள்ளிக் கொண்டு போகலாம்னு சீக்கிரமா வந்துட்டாயா? என்று கேட்டு, தோழமையுடன் சிரித்தது பெண்குருவி. சக குருவிகளும் சேர்ந்து சிரித்தன.

வா, இங்கே வீட்டு முன்னால் உட்கார்ந்தால் என்னபயன்? தாத்தா பின்கட்டில்தான் தானியம் போடுவார், என்றது. இல்லை, இல்லை, என்று அலறியது புதுக்குருவி. தாத்தா இன்றைக்கு வரவில்லை. என்னது? வரவில்லையா? அப்படி ஒரு நாளும் நடக்காதே என்றன குருவிகள்.

என்ன நேர்ந்துவிட்டது? ஏன் வீட்டு முன்னால் இத்தனைப் பெரியகும்பல்?

யார் இவர்கள்? பார்த்தால் உறவினர்கள், நண்பர்கள் மாதிரி இருக்கு. ஆனால் கலகலப்பே இல்லாமல்..

வாங்கடா, பின்கட்டிற்குப் போய் மரத்தில் வசிக்கும் காக்கைகளை கேட்போம். அவர்களுக்குத்தான் வீட்டு சமாசாரம் தெரியும்.

பின்கட்டில் ஏற்கனவே வேறு சில குருவிகளுடன், காக்கைகளும், மற்ற பறவைகளும் கூடி ஆரவாரித்துக் கொண்டிருந்தன. பின் கதவு அழுந்த சாத்தியபடி இருந்தது. எல்லாப் பறவைகளும் திரட்டியடித்துக் கொண்டு மறுபடியும் வீட்டின் முகப்பிற்கு வந்து ஆங்காங்கே உட்கார்ந்துக் கொண்டன. கும்பல் நடுவில் இரண்டு கிழவிகள். அதில் ஒருத்தி, ஐய்யோ, உங்களையெல்லாம் ஏமாத்திட்டு போய்ட்டானே ஓங்கப்பன், என்றழுது, ஒப்பாரி வைத்தாள்.

ஐய்யோ, தாத்தா போய் ...?

பறவைகள் படபடவென இறகுகளை அடித்துக் கொண்டு, நான்கு திசைகளிலும் பறந்து, வட்டமிட்டு, உட்கார்ந்துக் கொண்டன. கும்பலிலிரு;நது இரண்டு பேர் பறவைகளை விஷ் விஷ் என்று விரட்ட முயன்றனர். ஆனால் பறவைகள் மறுபடியும் மேலே பறந்து, வட்டமிட்டு, அதே இடங்களில் பிடிவாதமாக உட்கார்ந்துக் கொண்டன.

திறந்த முன் கதவிலிருந்து நான்கு பேர் தாத்தாவின் சடலத்தை கட்டையின் மீது சுமந்தபடி வெளியே வந்து, அவரை தரையில் வைத்தார்கள். தூங்குவதுபோல படுத்திருந்த தாத்தாவின் கழுத்தைச் சுற்றி மலர் மாலைகள் போடப்பட்டிருந்தன. இன்னும் சிலர் கனமான மாலைகளைப் போட்டார்கள். சுற்றிலும் புஷ்பங்கள் வைத்தார்கள்.ஐய்யோ, நம்மையெல்லாம் அனாதையாக்கிவிட்டு போய்விட்டாரே என்று குயில் கூவியது.

அனாதையாக்கிவிட்டு போய்விட்டாரே, போய்விட்டாரே என்று எல்லாப் பறவைகளும் பதறிபோய் கூவின.

அப்பவே நினைத்தேன். தாத்தா இப்படி ஒரேயடியாக சாப்பாடு, தண்ணீரை விட்டுட்டாங்களேன்னு, என்று அலறியது பெண்குருவி.

வீட்டு முகப்பின் ஒரு இடம் விடாமல் ஆக்கிரமித்துக் கொண்டன பறவைகள். நிம்மதியாகத் தூங்கும் தாத்தாவின் அசையாத உருவத்தை வேதனையுடன் கவனித்தபடி, தலையை இப்படியும், அப்படியும் அசைத்தபடி, செய்வதறியாது, தவிப்புமேலிடநின்றன. கிழவி இன்னும் தேம்பியபடி நின்றாள். இன்னொரு கிழவி, ஏண்டா, என்னையும் கூட்டிகிட்டு போவதுதானே? என்று கதறினாள்.

வீட்டு உள்ளேயிருந்து உரக்க ஓசைகள் வெளிவந்தன. முன்கதவருகில் நின்ற புரோகிதர், “தம்பி, வாங்கறேன் நேரமாச்சு சடங்குகளை ஆரம்பித்து வைக்கணும், வா.சீக்கிரம்” என்றார்.,

“முடியாது!” என்ற உரத்த மறுப்பு உள்ளேயிருந்து கேட்டது.

“சேச்சே, மூத்த பையனான நீ இப்படி பேசலாமா?” என்றார் புரோகிதர்.

“இதற்கு மட்டும் நான் மூத்த பையனாக்கும்! வீட்டுக்கு பெரியவன் என்ற மரியாதையே இல்லாம என் தம்பிகள் சொத்துக்கு சண்டைக்கு வருகிறாங்களே,அது நல்லாயிருக்கா?” என்று கத்தினான்.

www.tamilarangam.net

"நீதானே சண்டை போடுமளவிற்கு விஷயத்தை வளரவிட்டாய்? என்று சீறினான் கார்த்திகேயன்." ஆமாம், நீயாகவே கண்ணியமாக சம பங்கிற்கு ஒத்துக் கொள்வதுதானே? என்று மூத்த அண்ணனைத் தாக்கினான் மதிவேலன்.

"என்னது! உனக்கு அத்தனைத் திமிரா?" என்று கையை ஓங்கிய அண்ணனை இரண்டுபேர் உறுதியாகப் பிடித்துக் கொண்டனர்.

"சேச்சே, இப்போ இதைப்பற்றியெல்லாம் பேசக்கூடாது. அசிங்கம்! சடங்குகளை ஆரம்பித்து, முறையாக பக்தியுடன் ஒங்கப்பாவை அனுப்பிக்கொடுங்க," என்று உறவினர்களும், நண்பர்களும் கெஞ்சினார்கள். ஆனால் சண்டை பலமாக முற்றிக் கொண்டது. பிறகு, கும்பலில் சிலர் மூத்த மகன் சார்பிலும், வேறு சிலர் சின்ன தம்பிகள் சார்பிலும் வக்காலத்து வாங்க ஆரம்பித்தார்கள்.

ஒப்பாரி வைத்தக் கிழவி, கோபமாகப் பாய்ந்தாள்.

"ஐய்ய, என்ன கண்ராவி! உங்களுக்கு வெட்கமாயில்லை? வளர்ந்த பிள்ளைகளான நீங்க, சொந்த அப்பாவை அனுப்பி கொடுக்க துப்பில்லை. கர்மம்! கர்மம்! வாங்கடா சீக்கிரமா, நீங்க கடமைப்பட்டிருக்கீங்க. செய்யுங்க. அவங்க ஆத்மா சாந்தியடையட்டும்," என்றாள். அவளுக்கு மூச்சு இரைத்தது.

"நல்ல வேளை, பெரியவர் இதையெல்லாம் பார்க்காமல் கண்ணை மூடிட்டார்" என்றார் ஒரு நண்பர்.

புரோகிதர் மிகுந்த கோபத்துடன் மூன்று சகோதரர்களைப் பார்த்து கத்தினார்,

"இப்ப வரீங்களா, இல்லை நானாகவே மற்ற புரோகிதர்களுடன் சடங்குகளை செஞ்சு முடிச்சுட்டமா? உம்? இந்த மாதிரி அகம்பாவம் பிடித்த உதவாக்கரை மகன்கள் இருக்க நேர்ந்தால்!" நீங்களில்லாமலேயே காரியத்தை செய்து முடிக்க வேதத்திலும் அனுமதியுண்டு, ஜாக்கிரதை! என்று கர்ஜித்த புரோகிதரைப் பார்த்து இப்போ மூன்று மகன்களும் அவர் மீது பாய்ந்தார்கள் சண்டை இன்னும் பலமாக முற்றிப் போய், வந்த ஐந்து புரோகிதர்களும் வீட்டுக்குள்ளே காரசாரமாய் விவாதித்துக் கொண்டிருந்தனர். உறவினர்களும், நண்பர்களும் நிலைமையை சமாளிக்க போராடினார்கள்.

முன்கட்டு நடுவில், பளிச்சென்ற வெய்யிலில், தாத்தா நிம்மதியாகப் படுத்துக் கிடந்தார். அவரை யாரும் கவனித்ததாகத் தெரியவில்லை. ஒன்றன்பின் ஒன்றாக குருவிகள், காக்கைகள், மரங்கொத்திகள், குயில்கள், கானரிகள் கீழே இறங்கி, தாத்தாவின் சடலத்தைச் சுற்றிக் கொண்டு நின்றன.

நம்மால் முடியுமா? என்றது குயில் ஏன் முடியாது? எல்லோரும் மனசு வைத்தால் முடியும் என்றது காக்கை.

நாம் தூக்கும்போது இந்த மனிதர்கள் பார்த்து விட்டு நடுவில் குறுக்கிட்டால்? என்று கேட்டது குருவி.

சும்மா ரணகாயப்படுத்தி, அவர்களை கொத்தி, குதறியெடுத்துடமாட்டோமா, நாங்க! என்று சவால் விட்டது, தனது அலகை கூர்மையாக்கிய மரங்கொத்தி.

அதெல்லாம் கவலைப்படாதீங்க, என்றது குருவி. நாங்க எல்லோர்மீதும் படபடவென சிறகடித்து, பயமுறுத்தி விரட்டிடுவோம்

சரி வாங்க, பிடியுங்க.

வாங்க தாத்தா, பறக்கலாம், வாங்க.

தாத்தாவின் உருவத்தை சுற்றி பறவைகள்

அ... அ... கொஞ்சம் கனமாகத்தான் இருக்கு. இருக்காதா பின்னே? எல்லோரும் சேர்ந்து பாடிகிட்டு தூக்கினா சக்தி வரும், தைரியம் வரும். வாங்க! பாடுங்க! இது பாரமில்லே, ஐலேசா

தூக்கிடுவோம், ஐலேசா

சீக்கிரம் செய்யுங்க, ஐலேசா

மேலே போவோம், ஐலேசா

www.tamilarangam.net

வாங்க தாத்தா, பறப்போம், ஐலேசா

"சே! நாசமாப் போங்க! வைதீகத்துக்கு இந்த பாழாய்போன வீட்டிலே துளி மதிப்பில்லே. சரி வாங்க, நம்ப கடமையை நாம்ப செய்து முடிப்போம். நமக்கெதுக்கு இந்த பாபம்?" என்று கோபமாக இரைந்தபடி முன் கதவிலிருந்து புரோகிதர், சக புரோகிதர்களுடன் வெளியே வந்தார்.

"ஏய், யார் அங்கே?" என்று கர்ஜித்தார் இரண்டு வேலையாட்கள் ஓடி வந்தார்கள். "சாமி?" இதென்ன கூத்துங்கறேன்? என் அனுமதியைக் கேட்காமல், பெரியவரின் சடலத்தை யாரு நகர்த்தினாங்க? சீ! இந்த வீட்டிலே வேலைக்காரர்களும் படு மோசம் "என்று கத்தினார்." "தெரியாது சாமி."

"என்னது? தெரியாதா? எங்கே பெரியவரின் சடலம்? நீ அப்போலேந்து இங்கேதானே நிக்கறே?"

"தெரியாதுங்க,"

"என்னடா மடத்தனமா பேசறே? மசமசன்னு நிக்காம, போய் பெரியவரின் சடலத்தை மறுபடியும் அதே இடத்தில் தூக்கிட்டு வந்து வெய்யுங்க. உம், சீக்கிரம்!" "இல்லீங்க என்ன இல்லீங்க?"

"பெரியவரின் சடல..."

"பயித்தியமே, என்னடா உளறுகிறாய்? சடலம் எங்கேப் போய்விடும்?"

எல்லாரும் பரபரத்துத் தேடினார்கள். வீட்டின் உள்ளே, வெளியே, பின்கட்டுத் தோட்டத்திலே, சுற்று முற்றும் எல்லா இடங்களிலும் தேடினார்கள் பயந்து, பதைப்பதைத்துத் தேடினார்கள் அனைவரும்.

தாத்தா அங்கு இல்லை.

ஒரு குருவியும், பறவையும் இல்லை!.

---

## மலையேற்றம்

மலையின் சிகரத்தை நோக்கி
மலைதழுவிச் செல்கிறது
மலைப்பாதைப் பாம்பு.
செங்குத்தாய் நீ ஏறுகையில்
மலை தன் ஆடைதுறந்த உன் காதலி.
சிகரத்தை நீ அடையும் போது
அவள் கருவினில் உள்ள ஓர் அணு நீ.

## புல்வெளி

புல்விரிப்புச் சுருங்காமல்
அமர்ந்து சென்றிருக்கிறார்கள் யாரோ.
தூரத்திலிருந்தபடியே முழுசாய்
ஆக்கிரமித்துக் கொண்டிருக்கிறார்கள்
யாரோ.
மலர்தேடும் வண்ணத்துப்பூச்சியின்
இறுகுத் துடிப்போ என் தயக்கம்?
என் கண்முன்னாலொரு காதல்ஜோடி
வந்தமர்ந்து குலாவிவிட்டு
எழுந்து செல்கிறதே எப்படி,
புல்விரிப்பு சுருங்காமல்.

## மஞ்சு

மலையின் சிகரத்தை நோக்கி
மலை தழுவிச் செல்கிறது
ஒரு குழு
அவ்வளவு வெண்மையும்
விநோதமுமான உடலுடன்

## மலை

மலை உருகிப் பெருக்கெடுத்த நதி
மடியுமோ நிரந்தரமாய்
அவ்வளவு பெரிய கனலை
வெளிப்படுத்த வல்லதோ
ஒரு சிறு சொல்?

– தேவதேவன்

www.tamilarangam.net

## மோட்டார் சைக்கிள் டயரி : ஏர்ணஸ்டோ சே குவேரா

- மனிதன் : எல்லாப் பிரச்சினைகளளதும் அளவுகோல் அவனே. எனது உதடுகளின் வழி, நான் கண்டதை என் சொந்த வார்த்தைகளில் பேசுகிறான். இருக்கக்கூடிய பத்துத் தலைகளில் வாலை மட்டுமே நான் பார்த்திருக்கலாம். எந்தவிதமான தப்பித்தலும் இல்லை. என் கண்கள் சொன்னதை வாய் சொல்கிறது. எங்களது பார்வை மிகக் குறுகியதாக, முன்மதிப்பீடுகள் கொண்டதாக, வெறுக்கத்தக்கதாக, எமது முடிவுகள் கெட்டிதட்டிப்போனதாக இருக்கிறதா? அப்படியேயிருக்கலாம். தட்டச்சுயந்திரத்தில் பொத்தான்களைத் தொடுகிறபோது உணர்ச்சிகளை தட்டச்சுயந்திரம் அப்படித்தான் சொல்கிறது. பிற்பாடு அலையும் நினைவுகள் மரணித்தவையாகின்றன. அதுவன்றி, அவைகள் எவருக்கும் பதில் சொல்லவேண்டியிருக்க வில்லை. அர்ஜென்டினா, மண்ணில் திரும்ப காலடி வைத்த அன்றே இந்தக் குறிப்புக்களை எழுதிய மனிதன் செத்துப்போனான். மறுபடியும் மீளமைத்துக்கொண்டிருக்கிற செலுமைப்படுத்திக்கொண்டிருக்கிற நான், நானாக இல்லை. குறைந்தபட்சம் இருந்த நானாக இல்லை இப்போதிருக்கும் நான்.
- கடலின்மீது ஜொலிக்கும் முழுநிலவு அலைகளின்மீது வெள்ளித் தெறிப்புகளைப் பொழிகிறது. தனிமையில் அமர்ந்து, தொடர்ந்த எழுச்சியையும் ஓட்டத்தையும் பார்த்துக்கொண்டு, நாங்கள் எமது வெவ்வேறு சிந்தனையோட்டங்களில் இருந்தோம். எனக்கு கடல் எப்போதுமே நம்பிக்கையுள்ள நண்பன். நீ கேட்கிற எல்லாவற்றையும் உள்வாங்கிக்கொண்டு உனக்கு உனது இரகசியங்களுக்குத் துரோகம் செய்யாத நண்பன். நீ விரும்புகிறபடி வியாக்கியானப்படுத்திக் கொள்கிற சப்தத்தை உனக்குத் தந்து எப்போதுமே மிகச் சிறந்த அறவுரைகளைத்தரும் நண்பன் கடல்....
- பிரச்னை என்னவென்றால் அவர் தொடர்ந்தார்; மக்கள் கல்விமயப்படுத்தப்பட வேண்டும். அவர்கள் அதிகாரத்தை எடுத்துக்கொள்ளும் வரை அதை அவர்கள் செய்ய முடியாது. பிற்பாடுதான் முடியும்...

  ... அவர்கிளின் தவறுகளிலிருந்துதான் அவர்கள் கற்றுக்கொள்வார்கள். இது மிகச் சிக்கலானது, தீவிரமானது. இது அநியாயமாக அப்பாவி மக்களின் உயிர்களைப் பலி கேட்கும்....

  ... புரட்சி தனிநபர் பிரச்னை அல்ல. ஆகவே, அது அவர்களின் உயிரை எடுக்கும். அவர்களின் நினைவு ஓர் உதாரணமாக இருக்கும் அல்லது பின்வரும் இளைய தலைமுறையினரைக் கட்டுப்படுத்துவதில் அது ஒரு சாதனமாக இருக்கும். எனது பாவம் அளப்பரியதுதான். மிக நுட்பமாகவோ மிகுந்த அநுபவத்துடனோ எப்படியும் நீ அதைச் சொல்லலாம். நான் மரணமுறுவேன். எனது தியாகமும் அழுகி உடைந்து நொறுங்கிக்கொண்டிருக்கும் நாகரீகத்தைக் குறிக்கும் தீவிர மனநிலையினினறுதான் வருகிறது....

  ... நான் அவர் பற்களைப் பார்த்தேன். வரலாற்றை தீர்க்கதரிசனத்துடன் உரைத்த கூர்மையைப் பார்த்தேன். அவர் கை குலுக்கியதை உணர்ந்தேன். தூரத்து முணுமுணுப்பைப்போல அவரது மரபுரீதியான விடைபெறுதலை...

  ... என் நாசித் துவாரங்கள் விரிவதை நான் உணர்கிறேன். வெடி மருந்தின் நெடியை, இரத்தத்தின் வாசனையை, எதிரியின் மரணத்தை உணர்கிறேன். எனது உடம்பை திமிறிக்கொள்கிறேன். மோதுவதற்குத் தயாராகிறேன். புதிய சக்தியும், புதிய நம்பிக்கையும் எதிரொலிக்கும் பாட்டாளிகளின் வெற்றி எக்காளத்தின் புனித எல்லைக்குள் போராட நான் தயாராகிறேன்.
- எங்கள் பயணத்தில் கொலம்பியா தொழுநோயாளர் குடியிருப்பில் அந்தக் காட்சி மிகமிக சுவாரசியமானது. விரல்களே இல்லாத தனது வலது மணிக்கட்டோடு குச்சுகளை கட்டிக்கொண்டு ஒருவர் 'எக்கோடியன்' வாசித்தார். ஒரு பாடகர் கண்ணில்லாதவர். மற்றைய அனைவருமே ஏதோ ஒருவகையில் அங்கவீனர்கள். இந்தப் பகுதியில் இருக்கும் நரம்பு தொடர்பான வியாதியால் இங்கு இது பிரசித்தம். நதியில் பிரதிபலித்த விளக்குகளின் வெளிச்சத்தில் இந்தக் காட்சி ஒரு பயங்கரமான திரைப்படம்போல இருந்தது.

வெளியீடு : VERSO, 6, Meard Street, London W!V 3HR

www.tamilarangam.net

# ஐரோப்பிய தமிழ் அரங்கு: சில குறிப்புகள்

- முத்தையாபிள்ளை நித்தியானந்தன் (பாரீஸ்)

கடந்த பத்தாண்டு காலமாக இனஒடுக்கு முறையின் கொடூர பிடியில் இருந்து வெளியேறி உலகெங்கும் குவிந்த தமிழ் மக்களின் ரசனை அப்படியொன்றும் பெருமைப்பட்டுக் கொள்ளக்கூடிய ரசனை அல்ல என்பதில் பெரிய கருத்து வேறுபாடுகள் எதுவுமில்லை. வறுத்த யாழ்ப்பாண மிளகாய்த்தூள், கட்டை சம்பல், தோலகட்டி நெல்லிரசம், ஸ்பெசல் மென்டீஸ், புழுக்கொடியல், முருங்கைக்காய், யாழ்ப்பாண விளமீன் இவற்றோடு பாரீஸ் La Chappell இல், லண்டன் Eastham இல், பெர்லின் Krezberg Bp, ரொறன்ரோ Scarborough இல் 'மல்லுவேட்டி மைனர்' இல் இருந்து ரஜனிகாந்தின் 'பாட்ஷா' வரை வீடியோ கொப்பிகளும் தான் இங்கு வந்து குவிந்தன. 'ஜெமினி சினிமா', பருவ விருந்து, திரைச்சித்திராவும் தான் பரபரப்பாக விற்பனைக்கு உள்ளாகின. உலகை உயர்விப்பதற்காக உத்தாரணம் கொண்டிருப்பதாகப் பிரகடனப்படுத்தும் பத்திரிக்கைகளுக்குப் பத்துப்பேர் கூட வாசகர் இல்லை என்பது ஒன்றும் இயக்க இரகசியமில்ல. காத்திரமான புகலிட சஞ்சிகைகள், உன்னதக் கனவுகளோடு தோற்றம் கொண்டு அந்த வேகத்திலேயே நலிந்து மறைந்து போயின. இலக்கிய ரசிகர்கள், கல்வி வட்டங்கள், வாசகர் வட்டங்கள் எல்லாம் சுற்றிச் சுற்றிப் பத்து விரல்களுக்குள் அடக்கம். இதுவே இன்றைய ஐரோப்பியப் புகலிடச் சமூகத்தின் கலாசார வாழ்வின் ஒரு குறுக்கு முகம்.

தமிழ் அவைக்காற்று கலைக்கழகம் 15 ஆண்டுகளுக்கு முன்னால் இலங்கையில் எத்தகைய வறண்ட நாடக சூழலில் தோற்றங்கொண்டு பேருழைப்புடன் தனது சீரிய நாடகப் பயணத்தைத் தொடங்கியதோ அத்தகைய ஒரு வறட்சிச் சூழலையே ஐரோப்பாவிலும் எதிர்கொள்ள நேர்ந்தது துரதிர்ஷ்ட வசமானதுதான். உன்னதமான சுதந்திர வேட்கைகளை ஒருபுறம் பிரகடனம் செய்துகொண்டு மறுபுறம் மிக மலிந்த தென்னிந்திய சினிமாப் படங்களைத் திரையிட்டும் அண்ணாமலைக்குக் காவடி எடுத்தும் குஷ்புவுக்கு தங்கச் சங்கிலி அணிவித்தும் தங்களின் அதி உன்னத கலாரசனையை வெளிப்படுத்தும் ரசிகர் கூட்டத்தின் மத்தியிலேயே அன்ரன் செக்கோவையும், பெர்ரோல்ட் பிரெஸ்டையும், வஸ்கா ஹாவெலையும், ஹெரோல்ட் பின்ரரையும், பாதல் சர்க்காரையும் இன்னும் இந்திரா பார்த்தசாரதி, மௌனகுரு, மாவை நித்தியானந்தனை மேடையேற்றும் தளராத இவர்களின் முயற்சிகள் எத்துணை விஷப்பரீட்சை என்பதை இன்றைய யதார்த்தச் சூழலின் பின்னணியில் எளிதில் விளங்கிக் கொள்ள முடியும்.

இலங்கையிலேயே குழந்தை சண்முகலிங்கம், நா.சுந்தரலிங்கம், அ.தாசீசியஸ் ஆகியோரின் நாடகங்களை மேடையேற்றிய அரங்காடிகள் குழுவினர் மிகப்பெரும் கஷ்டங்களுக்கு மத்தியிலேயே தமது நாடகங்களை மேடையேற்றுவதாகக் கூறுகிறார்கள். பொருளாதார ரீதியான பலமின்மையால்,

"இசை எம் நாடகங்களில் மிகப் பலவீனமடைந்து காணப்படுகின்றது. நடிகைகள் நமக்குக் கிடைப்பது குதிரைக்கொம்பு. இதனால் ஆண் பாத்திரம் அதிகமுள்ள நாடகங்களை நாம் தெரிவு செய்கின்றோம். அதுமட்டுமல்ல ஆண் நடிகர் கூடக் கிடைப்பதில்லை. ஒவ்வொரு நாடக மேடையேற்றங்களின் போதும் சில ஆயிரங்களை இழக்கின்றோம். விளம்பரங்கள் கிடைப்பதில்லை. நுழைவுச் சீட்டு விற்பதில் இடர்ப்பாடு. ரசிகர் அவைக்கான அங்கத்தவர்களைச் சேர்ப்பதிலும்போதிய உற்சாகம் கிட்டவில்லை." என்று அரங்காடிகளின் 'கோடை' நாடக மேடையேற்ற வெளியீடு குறிப்பிடுகின்றது.

காத்திரமான நாடகமரபு வேரூன்றி, விழுதூன்றி, விருட்ச நிழல்பரப்பி நிற்பதாக விதந்துரைக்கப்படும் நம் சொந்த மண்ணிலேயே இந்த நிலையென்றால் முற்றிலும் மாறுபட்ட அன்னியச் சூழலில் ஓர் அமெச்சூர் நாடகக் குழுவினருக்கு நிலைமை இன்னும் எவ்வளவு சோர்வூட்டுவது என்பதை விளக்கத் தேவையில்லை. அதுவும் அகதிகளாகப் புலம்பெயர்ந்த மண்ணில் ஓர் வேரறுந்த கலைஞனின் கலை வெளிப்பாடு அசாதாரணமாக நெருக்கடிகளை எதிர்கொள்கிறது. "மக்கள் பேசும் மொழியின் ஓசையைக் கேட்க வேண்டிய அவர்களின் உதடுகளின் அசைவைப் பார்க்கவேண்டிய - பேசும் மொழியோடும், இயல் போடும், சூழலோடும் இரண்டறக் கலந்தவர்களான எழுத்தாளர்கள் என்ற கலைஞர்களின் அனுபவங்கள்

www.tamilarangam.net

இன்னும் கசப்பானவை. புலம்பெயர்ந்தபோது அவர்களால் மேற்கொண்டு எழுத முடியவில்லை. எழுத்து வாழ்க்கை, எழுத்தாளன் என்ற வாழ்க்கை முடங்கிப் போனது. எவ்வளவு காலத்துக்குத்தான் மொழியைத் தேக்கிவைக்க முடியும்? எவ்வளவு புத்தகங்களால் நினைவுகளை உள்ளபடி மீட்டு வர முடிகிறது?...," என்று குன்ரர் கிறாஸ் (Gunter Grass) அவர்கள் எழுத்தாளன் பற்றித் தெரிவிக்கும் கருத்துக்கள் ஒரு நாடகக் கலைஞனுக்கும் பொருந்திப் போகிறது.

மக்கள் நாடக அரங்கு, சமூக மாற்றத்திற்கான விடுதலை அரங்கு, தளை நீக்கத்திற் கான மக்கள் அரங்கு, அனைத்தும் உட்கொண்ட அரங்கு (Total Theatre) என்று நாம் பலபடக் கூறிக் கொண்டாலும் நாடகத்தைப் பாரிய சமூகத்தைக் கொண்டு வந்து சேர்ப்பதற்கான பேராயுதமாக அல்லது போராயுதமாகக் கருதுகின்ற அதீத உணர்வு எத்துணை விரும்பத்தக்கதாக இருந்தபோதிலும் இலங்கையின் யதார்த்த நாடகச் சூழல் இந்த முனைப்புக்கு இயைபுடையதாக இருக்கவில்லை என்பதையே மேற்கூறிய நாடகக் கஷ்டங்கள் தெளிவுபடுத்துகின்றன. கலை இயக்கியத்தின் சமூகத் தாக்கம் ஓர் எல்லைவரைதான் செயற்படி முடியும்.

ஐரோப்பிய வாழ்வின் நெருக்கடிகள், அவசர வாழ்க்கைப் பயணங்கள், நேர அவலங்கள், பொருளாதார ரீதியில் எப்பொழுதுமே கையைச் சுட்டுக்கொள்ளும் எத்தனங்களுக்கூடாக லண்டன் தமிழ் அவைக்காற்று கலைக்கழகத்தினர் மேற்கொள்ளும் இந்த தீவிர நாடக முயற்சிகள் Lotus auf Steinen (பாறையில் பூத்த தாமரைகள்) தான்.

இந்த தீவிர நிலைமைக் கூடாகவும் இங்கிலாந்து, சுவீஸ், நெதர்லாந்து, கனடா, பிரான்ஸ் ஆகிய நாடுகளில் லண்டன் தமிழ் அவைக்காற்று கலைக்கழகத்தினர் ஒரு பரந்த ரசிகர்கள் மட்டத்தின் காத்திரமான அங்கீகாரத்துடன் தம் நாடகங்களை மேடையேற்றியே வருகின்றார்கள். இந்த நாடகங்கள் சமூகத்தின் சிக்கலான பிரச்சினைகளை மிக நுட்பமாக - கலாபூர்வமாக வெளிக்கொணர் கின்றன. சமூக பொருளாதார அரசியல் போன்ற வெவ்வேறு தளங்களில் சன்னல் பின்னலாக, சிக்கல் மலிந்ததாகத் தென்படும் பிரச்சனைகளை அதன் சகல சூட்சுமங்களோடும் வெளிப்படுத்தும் ரசவாதத்தை இந்த நாடகங்கள் நேர்த்தியாகவே நிறைவேற்றியிருக்கின்றன.

Harald Pinter இன் "போகிற வழிக்கு ஒன்று" என்ற நாடகத்தில் சித்தரிக்கப்படும் ஒரு ஒடுக்குமுறை இராணுவ முகாமிற்குள் நிகழும் சித்திரவதை இன்றைய உலகெங்கும் காணப்படுகின்ற குரூர அவ லத்தின் அப்பட்ட மான வெளிப் பாடு. பாதல் சர்க் காரின் "முகமில் லாத மனிதர்கள்" நாடகத்தில், வேரிழந்து போன நாங்கள் எங்கள் சொந்த முகங்களையே தரிசிக்கிறோம். ஐஹஸ்ங்ப் அவர்களின் மன்னிக்கவும் புகலிடத்துத் தமிழர் சமூக வாழ்வில் நாம் அடிக்கடி காண நேரும் தரிசனமேயாகும். இங்ழ்ற்ப் இழ்ங்ஙீட்ற் இன் யுகதர்மம் சுரண்டும் ஒருவனதும் சுரண்டப்படும் ஒருவனதும் கதையைச் சொல்லும் ஒரு அரசியல் நாடகமேயாகும்.

பாகிஸ்தான், பங்களாதேஷ், வங்காளம் ஆகிய இடங்களில் விடுதலை நாடக அரங்கு Bertold Brecht, Garcia Lorca ஆகிய நாடகாசிரியர்களை மிகச் செறிவாகவே உள்வாங்கியிருக்கிறது. பாகிஸ்தானின் பெண்கள் நாடக அரங்கு Garcia Lorca வின் 'The House of Bernarda Alba" என்ற நாடகத்தையே தளமாகக் கொண்டு எழுந்திருக்கின்றது. பதினைந்து ஆண்டுகளுக்கு முன்னால் யாழ்ப்பாணத்தில் இதே நாடகத்தை ஒரு 'பாலைவீடு' என்ற பெயரிலும் Bertold Brecht இன் 'யுகதர்மம்' நாடகத்தையும் தமிழ் அவைக்காற்று கலைக்கழகம் மேடையேற்றியமை விடுதலை அரங்க முயற்சிகளாகவே கொள்ளத்தக்கன.

சமூகப் பிரச்சினைகளும் நாடகமும் பற்றிக் கதைக்க முற்படும்போது நாடகக் கலைஞன் முற்றாகவே சமூகப் பொறுப்பில் இருந்து ஒதுங்கி விடுவதில்லை. அது போன்றே ஒரு நாடக நிகழ்வினால் மட்டுமே ஒரு சமுதாயத்தையே புரட்டிவிட முடியும் என்ற உட்டோப்பியன் கனவிலும் திளைத்துப்போக வேண்டிய தில்லை. இது தொடர்பாக அகஸ்தோ போல் (Augusto Boal) போன்ற பிரேஸில் நாடகக் கலைஞனிடம் தீர்வுகளை ஏன் நீங்கள் தருவதில்லை?" அவர் கூறிய பதிலை நோக்குவது பொருந்தும்.

"எதையும் பார்க்கத் தயாராக இல்லாத மக்களிடம் போய் ஒரு நாடகத்தைப் போட்டதும் அது அவர்களது கண்களை அப்படியே திறந்துவிட்டு விடும் என்று நான் நம்பவில்லை. இதுதான் 50கள், 60களில் நாங்கள் அரசியல் நாடகங்களைப் போட்டபோது, செய்த தவறு. என்னையும் சேர்த்துத்தான் சொல்கின்றேன். மக்களின் முன்னணிப்படையினராக இருக்கும்

www.tamilarangam.net

எங்களுக்கு சாதாரண மக்களைவிட எல்லாமே அதிகம் தெரியுமென எண்ணிக் கொண்டிருந்தோம். பிரேசிலில் நிறவெறிகெதிரான நாடகங்களைப் போட்டுக்கொண்டிருந்த நாடகக்குழுவொன்றை வைத்திருந்தோம். ஆனால் நாங்கள் எல்லோருமே வெள்ளையர்கள், கிராமத்து விவசாயிகளைப்பற்றிய நாடகங்களை நாங்கள் போட்டோம். ஆனால் நாங்கள் எல்லாருமே நகரத்தில் வசிப்பவர்கள்.

பெண்கள் தங்கள் மீதான ஒடுக்குமுறையை எதிர்த்துப் போராடுவது என அவர்களுக்குப் பயிற்றுவிக்க முயன்றோம். ஆனால் எங்களில் பெரும்பாலானோர் ஆண்கள்.

நாங்கள் பெண்களிடம் சொன்னோம்; நீங்கள் போராட வேண்டும். போராட்டம் யாரை எதிர்த்தது? எங்களை எதிர்த்தது. ஆண்களை எதிர்த்தது. இது சம்பந்தமில்லாத ஒரு விஷயமாகவிருந்தது. நாங்களோ நகரவாசிகள். கிராமத்து விவசாயிகளுக்குப் போதித்துக் கொண்டிருந்தோம். நாங்களோ வெள்ளையர்கள். கறுப்பர்களுக்குப் போதித்துக் கொண்டிருந்தோம். நாங்களோ ஆண்கள், பெண்களுக்காகப் போதித்துக் கொண்டிருந்தோம். எங்களது நோக்கம் நல்லதாக இருந்தாலும் அது ஈடேறவில்லை.

ஒரு நாள் பிரேசிலின் வடகிழக்குப் பிராந்தியத்தில் விவசாயிகளைப் போராடத் தூண்டுவதற்காக ஒரு நாடகத்தை நடத்தினோம். நாங்கள் எல்லாரும் கைகளில் துப்பாக்கியை ஏந்தியபடி "நாம் எல்லாரும் போராட வேண்டும். நமது மண்ணை விடுவிப்பதற்காக இரத்தம் சிந்த வேண்டும்!" என்று முழங்குவதாக அந்த நாடகம் முடியும். அந்த சமயம் ஒரு விவசாயி எங்களிடம் வந்தார். நாங்களும் நீங்கள் சொன்னது தான் சரியென்று நினைக்கிறோம். இந்தத் துப்பாக்கிகளோடு வந்து எங்களோடு சேர்ந்துகொண்டு ஏன் நீங்களும் போராடக் கூடாது என்று கேட்டார்.

நாங்கள் பொய் சொல்கின்றோம் என்பது அப்போதுதான் எனக்குப் புரிந்தது. நாங்கள் சொன்னோம் இவையெல்லாம் நிஜமான துப்பாக்கிகளல்ல. ஆனால் அவர் அதைப் புரிந்துகொண்டதாகத் தெரியவில்லை. இந்த மாதிரிச் சுடமுடியாத துப்பாக்கிகளைச் செய்து என்ன பிரயோசனம் என்று அவர் கேட்டார். நாங்கள் சொன்னோம்; இந்த நாடகம் முடியும்போது நமது மண்ணை விடுவிக்க இரத்தம் சிந்துவோம் என்று முழங்கும்போது இந்தத் துப்பாக்கிகளை வைத்துக் கொண்டால் நன்றாக இருக்கும் என நாங்கள் நினைத்தோம். அதற்கு அவர்கள் சொன்னார்கள்; நீங்கள் உங்கள் துப்பாக்கிகளைக் கொண்டுவராவிட்டாலும் பரவாயில்லை, எங்களிடம் எங்கள் எல்லோருக்குமே போதுமான அளவிற்குத் துப்பாக்கிகள் இருக்கின்றன. நீங்கள் எங்களோடு வாருங்கள், எங்களோடு இருந்து நீங்களும் சுடுங்கள். நாங்கள் கூறினோம்; நீங்கள் எங்களைத் தவறாகப் புரிந்துகொண்டு விட்டீர்கள்.

நாங்கள் உண்மையிலேயே விவசாயிகள் இல்லை. நாங்கள் நாடகக் கலைஞர்கள். "ஓஹோ, நீங்கள் உண்மையில் நாடகக் கலைஞர்கள், இரத்தம் சிந்துவதைப் பற்றிப் பேசுவீர்கள், ஆனால் உங்கள் இரத்தத்தையல்ல! எங்கள் இரத்தத்தை" என்றார்கள் அவர்கள். எனக்கு அவமானமாகப் போய்விட்டது. அன்றிலிருந்து நான் முடிவு செய்து கொண்டேன், இனிமேல் மக்களைப் பார்த்து அதைச் செய்யுங்கள். இதைச் செய்யுங்கள் என்று சொல்லிவிட்டு நாம் வீட்டிற்குப் போய்விடுகின்ற மாதிரி நாடகங்கள் போடுவதில்லை என்று முடிவு செய்து கொண்டேன். மக்களுக்கு அறிவுரை சொல்ல எனக்கு எந்தவிதமான உரிமையும் கிடையாது. என்ன செய்ய வேண்டும் என்பதை அவர்களுக்கு நாம் சொல்ல முடியாது....." (நிறப்பிரிகை-2)

மக்களோடு தன்னை இறுகப் பிணைத்துக்கொண்ட ஒரு நாடகக் கலைஞனின் கூற்று இது. போராட்டக் களத்தில் நிற்கும் ஒரு விவசாயிக்கும் பூரண சமூக ஈடுபாடுகொண்ட ஒரு நாடகக் கலைஞனுக்கும் இடையில் மட்டுமே இத்தகைய அர்த்தம் பொதிந்த சர்ச்சை இடம்பெற முடியும். நாடகம் முடிந்த மறுகணமே அரங்கைவிட்டு வெளியேறி விடுகிற ஒரு ரசிகனுக்கும் ஒரு அமெசுூர் நாடகக் கலைஞனுக்கும் இது அர்த்தமாகாது. ஐரோப்பியத் தமிழ் கலாச்சார நடப்பியல் சூழலில் ஒரு வரையறுக்கப்பட்ட வகையிலேயே இந்த நாடகக் கருத்துப் பரிமாற்றம் நிகழ முடியும்.

இவற்றைக் கணக்கில் எடுக்காத பொத்தாம் பொதுவான கருத்துதிர்ப்புகள் நம்மை எங்குமிட்டுச் செல்லமாட்டா.

www.tamilarangam.net

# தழுவலும் தமிழ் மேடையும்

சி. சிவசேகரம் (லண்டன்)

*"சென்றிடுவீர் எட்டுத்திக்கும் - கலைச்*
*செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்த்திடுவீர்"*

என்ற பாரதி வாக்கைப் பெருமையுடன் முழக்குகிறவர்கள். பிறர் கொண்டுவருஞ் செல்வங்களைக் கண்டு முகஞ் சுழிப்பதும் உண்டு. இத்தகைய முகஞ்சுழிப்புக்கு ஆளான செல்வங்களுள் தமிழாக்கப்பட்ட நாடகங்களும் அடங்குவன. மொழி பெயர்ப்புகள் தமிழில் மூலமாக அமைந்த படைப்புக்களுக்குத் தடையாக நிற்பதாக எவரும் உண்மையாகவே நம்பினால், அது அறியாமையின் பாற்பட்ட தவறு. தமிழில் தமிழர்களால் தமிழர்க்காக உருவாக்கப்பட்டவற்றை மட்டுமே தமிழர் நுகரலாம் என்ற கருத்துத், தமிழர்களது வரலாற்று அனுபவத்துக்கு முரணானது. தமிழ் மொழியினதும் பண்பாட்டினதும் செழுமையில் அயற் பங்களிப்புகளின் முக்கியத்துவத்தை மறுப்பது பொய்மை சார்ந்தது. ஒரு சமுதாயம் அயலிலிருந்து வரும் எல்லா விடயங்களையும் குருட்டுத் தனமாக உள்வாங்கிக் கொள்ள அவசியமில்லை. ஒவ்வொரு சமுதாயமும் தனது நிலைமையும் தேவையும் சார்ந்தே புறத்திலிருந்து வருவனவற்றை உள்வாங்கித் தனதாக்கிக் கொள்கிறது. வற்புறுத்தித் திணிக்கப்படுவன கூடச், சமுதாயத்தின் தன்மைக்கு ஏற்றவாறு மாறுபாடடைகின்றன. நம் கலை இலக்கியப் பரப்பின் எந்த ஒரு கூறும் நமது தேவைக்கு உகந்ததோ இல்லையோ என்று தீர்மானிக்க நம் மரபை மட்டுமே உரைகல்லாக உபயோகிப்பது தேக்கத்துக்கே உத்தரவாதமளிக்கும். எனவே, தமிழ் நாடகத் துறை மரபுசார்ந்த கூத்து வடிவங்களைச் சார்ந்தே அமைய வேண்டும் என்ற கருத்திற் தவறுள்ளது. நமது மரபில் இருந்து வந்த சிறப்பான கலை வடிவங்களைப் பேணுவதும் அவற்றை அடிப்படையாக வைத்து நவீன வடிவங்களை விருத்தி செய்வதும் மிக அவசியமான பணிகள். ஆயினும், அவையே போதுமான பணிகளாகிவிடா. வேறு கடமைகளும் நமக்கு உள்ளன.

நவீன தமிழ் நாடகத்தின் தோற்றுவாய், தமிழருக்கு அயலானது. இந்தக் கலை வடிவத்தின் செழுமை அயலினின்று வருவனவற்றை நமது சமூகம் எவ்வாறு உள்வாங்கிக் கொள்கிறது என்பதிலேயே தங்கியுள்ளது. இவ்வகையிற் தமிழில் மொழிபெயர்ப்புக்களின் பங்கு எவ்வாறு அமையவேண்டும் என்பதிற் கருத்து வேறுபாடுகட்கு இடமுண்டு. மொழிபெயர்ப்புக்களின் அடிப்படையான நோக்கம் ஒரு அயல் மொழிப் படைப்பை மூலத்துக்கு மிக நெருக்கமான முறையில் மாற்று மொழியில் வழங்குவது எனலாம். அவ்வகையில் சிறுகதை, நாவல் போன்ற எழுத்து வடிவங்களில் இது அதிக சிரமமின்றியே சாத்தியமாகலாம். கவிதையில் இது கொஞ்சம் சிரமமானது. நாடகத்தின் மொழிபெயர்ப்பின் பிரச்சனை வேறு விதமானது.

**நேரடி மொழிபெயர்ப்பின் சாதகமான பண்புகளிற் சில:**

மூலத்துக்கு விசுவாசமான பிரதிகள் நாடகம் சித்தரிக்குஞ் சூழலையும் அதன் மனித உறவுகளையும் நேரடியாகவே நமக்கு உணர்த்துகின்றன; நாடகக் கதைக்குரிய சமுதாயப் பின்னணியும் பண்பாடும் திரிபின்றிச் சித்தரிக்கப்பட இடம் உண்டு; மூலத்தை எழுதியவரது படைப்பாற்றலின் அண்ணளவான வெளிப்பாடாக மொழிபெயர்ப்பு அமைய முடியும். மறுபுறம், அயற்பேர்களும் பரிச்சயமற்ற பழக்க வழக்கங்களும் மரபுகளும் மூல மொழிப் பிரயோகத்தின் சிறப்பம்சங்களும் ஒரு படைப்பு மிகவும் தவறாக விளங்கிக் கொள்ளப்பட வழி கோலக்கூடும். ஒரு சிறுகதையோ நாவலோ, கவிதையோ, வாசகர் ஒருவரது தேவைக்கேற்ப, முழுதாகவோ, பகுதியாகவோ மீண்டும் மீண்டும் வாசிக்கப்பட்டுத் தெளிவாக்கப் படலாம். விளக்கக்குறிப்புகளும் வாசகருக்கு உதவலாம். நாடகத்தில் இது சாத்தியப்படாது. பார்க்கும்போதே நாடகம் பார்வையாளர் மீது பாதிப்பை ஏற்படுத்த வேண்டும். எனவே தெளிவு மிக முக்கியமான ஒரு பண்பாகிறது. அயற்தன்மை யுடைய கூறுகள் பார்வையாளர்கட்கு மிகுந்த சிரமத்தைத் தர இடமுண்டு.

தென்னாசிய மொழியொன்றிலிருந்து தமிழாக்கப்பட்ட நாடகம் ஒன்று, அயற் பேர்களில் மாற்றமின்றி நம் முன் வழங்கப்படும் போது அதிக சிரமமின்றி அதை நம்மால் விளங்கிக் கொள்ள முடிகிறது. ஏனெனில் தென்னாசியப் பண்பாடுகளில் மதம், மொழி, பிரதேசம் என்ற

www.tamilarangam.net

வேறுபாடுகளையும் மீறிய ஒற்றுமையான பல பண்புகள் உள்ளன. ஐரோப்பிய நடுத்தர வர்க்க வாழ்க்கை பற்றிய நாடகங்களை விளங்கிக் கொள்வது எல்லாருக்கும் எளிதல்ல. ஆயினும் மனித இருப்பும் மனித உறவுகளும் உணர்வுகளும் கொண்டுள்ள சில பொதுவான பண்புகள் புரிதலை ஓரளவு இயலுமாக்குகின்றன என்பது மெய். இங்கே தான் நாடக மொழிபெயர்ப்பிற்கும் தழுவலுக்கும் இடையில் ஒரு தெரிவுக்கான தேவை ஏற்படுகின்றது. இந்தத் தெரிவில் மூலத்தின் சமுதாயச் சூழல் பற்றிய நமது அறிவும் பரிச்சயமும் முக்கியமான பங்கு வகிக்கின்றன.

நேரடியான மொழி பெயர்ப்பு பார்வையாளர்களைச் செம்மையாகச் சென்றடையாது என்று உணரப்படும்போது, நம் தெரிவு தழுவலாகிவிடுகிறது. தழுவல் எனும்போது, அது மூலத்தினின்று பல வகைகளில் வேறுபடலாம் என ஏற்கிறோம். இந்த வேறுபாடுகள் மூலப்படைப்பின் முனைப்பையும் நோக்கத்தையும் தகவலையும் திரிபுபடுத்தாதவாறு தழுவுவது விரும்பத்தக்கது. (சில சமயம், வேண்டுமென்றே இவ்வாறான முரண்பாடுகள் புகுத்தப்படலாம். அவ்வாறாயின் பார்வையாளர்கட்கு அது பற்றித் தெரியத் தருவது யோக்கியமானது.)

சில இடங்களில் தழுவல் மிகக் குறைந்த பட்சமான மாற்றங்களுடனான ஒரு மொழிபெயர்ப்பாகலாம். இங்கு, மாற்றங்கள் பாத்திரங்களினதும் இடங்களினதும் பேர்களிலும், சில சமயம், உரையாடலின் சில பகுதிகளிலும் மட்டுமே செய்யப்படுகின்றன. நிகழ்வுகளும் மொழிப் பிரயோகமும் நமது கலாச்சாரச் சூழலுக்குப் புறம்பானதாக மட்டுமன்றிப் பார்வையாளர்களது உணர்வுகளைப் புண்படுத்தவும் கூடும் எனின் அவை மாற்றப்படக்கூடும். ஹரெல்ட் பின்ற்றரின் "போகிற வழிக்கு ஒன்று" நாடகத்தில் இருந்த பல பாலியல் நிந்தனை மொழிகள் கூடுமானளவுக்கு தவிர்க்கப்பட்டமை இங்கு குறிப்பிடத்தக்கது. இவ்வாறே வஸ்லாவ் ஹவெலின் "தரிசனம்" நாடகத்தில் மிகவும் பச்சையான பாலியற்பாங்கான பகுதியும் தவிர்க்கப்பட்டது. இவ்வாறான மாற்றங்கள், மூல நாடகப் பிரதி கூறுமுறையும் செய்திக்கு ஊறில்லாதவாறு இருக்குமளவில், மூலத்தினின்று பிறழாத தழுவல் என்றே கூறலாம். முன் குறிப்பிட்ட தழுவல்களின் அயல் மூலத்தை அறியாத எவரும் அவை தழுவல்கள் என்று ஊகிக்க முடியவில்லை என்பது தழுவலுக்கும் மொழிபெயர்ப்புக்குமுள்ள ஒரு முக்கிய வேறுபாட்டை உணர்த்தும். இவ்வகையிற் "சம்பந்தம்" மிகவும் ஒரு சிறப்பான ஒரு தழுவல் எனலாம். அன்ற்றன் செகவ் எழுதிய இந்த நாடகத்தில், முற்றிலும் யாழ்ப்பாணச்சூழலுக்கு ஏற்ற விதமாகப் பாத்திரங்களும் உரையாடல்களும் செழுமையாக மாற்றப்பட்டன.

பேர்ட்டோல்ற் ப்றெஷ்ற்றின் நாடகத்தின் தமிழாக்கமான "யுகதர்மத்தின்" பேர்களும் கதையில் வரும் இடங்களும் குறிப்பிடப்படும் நிகழ்ச்சிகளும் அண்மையிற் சிறிது மாற்றப்பட்டபோதும், இத்தழுவல் முயற்சி நமது சமூகச் சூழலுக்கு அவ்வளவு நெருக்கமானதாகிவிடவில்லை. ஆயினும், மூலப்பிரதி கூறும் செய்தி. மனிதர் உழைப்பை மனிதர் பறிக்கும் வழமையை நியாயமாகக் கொள்ளும் எந்தவொரு சமுதாயத்துக்குமுரிய சில பொதுமையான பண்புகளை பண்புகளையுடையதால் எளிதாகவே பார்வையாளர்களிடம் ஒட்டிக் கொள்கிறது. மறுபுறம், யாப்பாணச்சாதிய ஆதிக்கச் சூழலுக்கு உடன்பாடான முறையிற் தழுவலுக்கு மிகவும் வசதியான ஒரு படைப்பு "ஒரு பாலை வீடு". கார்சியா லோகாவின் இந்நாடகம் மொழிபெயர்ப்பாகவே மேடையேறியது. தழுவலாக இது மேலும் அதிக வரவேற்பைப் பெற்றிருக்கும். "முகமில்லாத மனிதர்கள்", என்ற பதல் சர்க்காரின் வங்க மொழி நாடகத்தில் சில பேர்களை மட்டுமே மாற்றுவதன் மூலம், அந்த நாடகம் தமிழா அயலா என்று எவரும் அறியாதவாறு அமைக்க முடியும். ஆயினும் இத்தகைய மாற்றம் இல்லாமலே அது பார்வையாளர்களைக் கவர்ந்தமை கவனிக்கத்தக்கது.

தமிழ் மேடையைப் பொறுத்தளவில் தழுவல்களும் மொழிபெயர்ப்புகளும் வெவ்வேறு வகைகளில் அதனைச் செழுமைப்படுத்த வல்லன. ஒரு மொழி பெயர்ப்பு சிக்கலில்லாததாகவும் சிரமமின்றிப் பார்வையாளர்களை எட்டக்கூடு மானதாகவும் அமையுமாயின், அது தழுவலைவிட விரும்பத்தக்கது. மூலத்துக்கு விசுவாசமாக இருக்கும் முயற்சி, நாடக மேடைக்கும் பார்வை யாளர்களுக்குமிடையே அரணாக எழுமாயின் தழுவலுக்கான தேவை ஏற்படுகின்றது. மூலத்தை விகாரப்படுத்தாமற் தமிழுக்கு மொழிபெயர்க்கவும் தழுவவும் ஆற்றலுள்ளோர் நம்மிடையே பலர் உள்ளனர் என்றே நம்புகின்றேன்.

www.tamilarangam.net

# காவு

நா. கண்ணன் (ஜெர்மனி)

கலாச்சார வளர்ச்சியின் உன்னதமான நிலையை மானுடம் அடைந்திருக்கிறது என எண்ணியிருக்கும் இருபதாம் நூற்றாண்டின் இறுதியில் இப்படியொரு செய்தியை வெளியிடுகிறது. அமெரிக்காவின் மாதர் மலரான "மிஸ்" அதுவும் அட்டைப்பட கட்டுரையாக! இதில் அதிர்ச்சி என்னவென்றால் இது வெள்ளையர் உலகில் நடந்திருக்கிறது. பொதுவாக இந்த நூற்றாண்டின் உலக நாகரீகப் போக்கை வழி நடத்திச் செல்வது வெள்ளையர் கலாச்சாரம் என்று நம்பப்படுகிறது. அப்படி இருக்கையில் இந்தச் செய்தி கொஞ்சம் கூட நம்பக்கூடியதாக இல்லை. ஆனால் இக்கட்டுரையை மிஸ் பத்திரிக்கையில் சிசீலியா என்ற புனைப் பெயரில் எழுதிய பெண்மணி, வாசகர்களே, தயவு செய்து நம்புங்கள், இது முழுவதும் உண்மை என்று கதறுகிறார். சரி விஷயத்திற்கு வருவோம்.

நல்லதென்று ஒன்றிருந்தால் எதிர்மறையாக கெட்டது என்று ஒன்றிருக்கிறது. உதாரணத்திற்கு இயேசு என்ற நல்லது இருந்தால் சைத்தான் என்ற கெடுதி. இப்படித் தான் கதை போகிறது.

சைத்தானை கடவுளாக வழிபடும் ரகசிய வழிபாட்டு முறையொன்று பன்னெடுங்காலமாக மேலைக் கலாச்சாரத்தில் இருந்து வந்திருக்கிறதாம். வழிபாட்டு முறைகள் சற்றேறக்குறைய தேவாலயங்களில் நடைபெறும் முறையை ஒத்தேயிருக்குமாம். ஒன்றைத் தவிர. அதாவது இயேசுவிற்கு நல்ல விஷயங்கள் பிடித்தால், அதற்கு எதிர்மறையான விஷயங்கள்தான் சைத்தானுக்குப் பிடிக்குமாம். அதனால் வழிபாடுகளில் பல வன்கொடுமையான செயல்கள் நடைபெறுமாம். அந்தக் கட்டுரையை எழுதிய சிசீலியாவின் தாயார், பாட்டியென சில தலைமுறைகள் இந்த ரகசிய வழிபாடுகளில் ஈடுபட்டு வந்திருக்கிறார்களாம். சிசீலியாவும் குழந்தையிலிருந்து இவ்வழிபாடுகளில் ஈடுபடுத்தப்பட்டு வந்திருக்கிறாளாம்.

கொஞ்சம் மனதை தைர்யமாக வைத்துக் கொள்ளுங்கள். மீதிக் கதையையும் சொல்கிறேன்.

சிசீலியாவின் தந்தை வியட்நாம் போரின் முகாந்திரமாக அமெரிக்காவைவிட்டு வெளியேறிய காலங்களில் இது நடந்திருக்கிறது. ஊரின் ஒதுக்குப்புறமாக அமைந்த ஒரு பழைய வீட்டை இந்த வழிபாடுகளுக்காக சைத்தான் சங்கம் வாங்கி வைத்திருக்கிறது. நடு நிசியை நெருங்கும் வேளைகளில்தான் இச்சடங்குகள் தொடங்குமாம். இச்சங்கத்தின் உறுப்பினர்கள் பல தலைமுறையாக சைத்தானை நம்பும் ஆண்களும், பெண்களும், அவர்களின் பிள்ளை, குட்டிகளும்தான். இந்த ரகசிய குழுவின் அங்கத்தினர்களைத் தவிர மற்றவர்களுக்கு அங்கு அனுமதி இல்லை. அங்கு நடக்கும் விஷயங்கள் வெளிச்சத்திற்கு வரவேண்டுமென்றால் உறுப்பினரில் ஒருவர் மகா தைரியத்துடன் வெளியே சொன்னால் உண்டு. சிசீலியா சொல்லி த் தானே நமக்கே இதுவெல்லாம் தெரிகிறது.

ஆனாலும் அவ்வளவு எளிதாக விஷயம் வெளியேறாதபடி குழந்தையிலிருந்தே பயமுறுத்தி வைக்கிறார்கள். சிறார்கள் பயப்படும் விதமாக பல சடங்குகள் எப்போதும் நடந்தாலும், இதற்கென பிரத்யேகமாக பயன்படுத்தப்படும் சில வன்முறைகளை சொல்கிறேன். பொதுவாக சிறுவர்களையும், சிறுமிகளையும் தண்ணீரில் முகத்தை அமுக்கி மூச்சுமுட்ட வைத்து பயமுறுத்துவது ஒரு முறை. நக இடுக்குகளில் முள்ளை வைத்து குத்துவது வேறொரு முறை (இவையெல்லாம் சைத்தானுக்குப் பிடித்தமான விஷயமாக வேறு அமைந்து விடுகிறது!). சிசீலியா சிறுமியாக இருந்த போது அங்கு வரும் குழுப்பையனின் ரச குண்டுகளில் ஒன்றை பயமுறுத்தும் நோக்கமாக அறுத்து எறிந்திருக்கிறார்கள். பிற பள்ளி மாணவர்களிடமிருந்து கேள்வி வந்தால் பிறவியிலேயே அப்படித்தான் என்று சொல்லு என அதட்டி வைத்திருக்கிறார்கள்.

பயம், பயம் - இதுதான் அக்குழுவை பிணைக்கும்பாலம். சிசீலியா இந்தக் கூட்டத்தை விட்டு வெளியேறி, வேறொரு மாநிலத்தில் குடியேறிய பின்னும், தன் குழந்தைக்கு வயிற்றுப் போக்கு, ஜுரம் என்று வந்தால் அது சைத்தானின் சாபமோ என பல காலம் பயந்து நடுங்கியிருக்கிறாள். நல்லவேளையாக அவளது கணவனும், வைத்தியர்களும் அப்படியெல்லாம் ஒன்றுமில்லையெனச் சொல்லி வைத்தியம் செய்து, குழந்தைக்கு உடம்பு சௌகர்யமாக



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பிறகுதான் சிசீலியாவே இந்தக் கதையை நமக்கு சொல்ல தைரியப்பட்டிருக்கிறாள்.

சைத்தான் குழுவின் இலகுவான குறி, அதிலிருக்கும் பெண் இனத்தவர்தாம். காரணம்? ஈடன் தோட்டத்தில் ஆதாரமும், எவாளும் ஏகாந்தமாக வாழ்ந்து வரும் போதினில் பாம்பு ரூபத்தில் சைத்தான் கொத்த ஆப்பிளை முதலில் தின்று பின் ஆதாமையும் தின்ன வைத்த பாபம்தான். பாபமா? பாபம்தானே சைத்தானுக்கு பிடிக்கும். எனவே சைத்தான் முதலில் கனியை ஏவாளிடம் கொடுத்ததால் அவளே சைத்தானின் பிரியத்திற்கு உரியவளாகிறாள். ஆகவே, சைத்தானை வழிபடும் குழுவில் அதிக கஷ்டமும் (சைத்தானுக்கு அது பிரியமானது என்பதால்...) அவளே படவேண்டிய நிர்ப்பந்தம்!.

சிசீலியாவின் அப்பா ஊரிலில்லாத சமயத்தில் ஒருநாள் இரவு விசேஷ சடங்குகள் ஏற்பாடாகியிருக்கிறது. வழக்கம் போல் ஆண், பெண் சிறுவர் குழுக்கள். அன்றைய வழிபாட்டின் முக்கிய அம்சம் சைத்தானுக்காக ஒரு பெண்ணை கருவுற வைத்தல் (எதற்கு என்று பின்னால் சொல்கிறேன்). சீட்டு விழுந்தது சிசீலியாவின் தாய்க்கு. அவள் குளித்து, நீராட்டப்பட்டு மேடையில் படுக்கவைக்கப்பட்டாள். சைத்தானை குஷிப்படுத்த அவள் கை, கால்கள் கட்டிலின் கால்களுடன் கட்டப்பட்டுவிட்டன. அத்தனை ஆண், பெண், குழந்தைகள் பார்த்துக் கொண்டிருக்க அவள் ஆண்களால் கற்பழிக்கப்பட்டாள் (இல்லை, கருவேற்றப்பட்டாள்). அது முடிய நள்ளிரவிற்கு மேலாகிவிட்டது. பாதி புரிந்து, புரியாத வயதில் அங்கிருந்த சிறார்களுக்கு இந்நிகழ்ச்சி ஏற்படுத்தியிருக்கும் பயம், குற்றம் காமம் போன்ற உணர்வுகளை எழுதி மாளாது. சிசீலியா சொல்கிறாள், கல்யாணமாகி பல ஆண்டுகள் ஆகியும் அவளால் சாதாரணமாக தன் கணவனுடன் உடலுறவு கொள்ள முடியவில்லையென்று. பொதுவாக அந்தக் குழு பையன்களும், பெரியவனாகும்போது கல, கலவென்று எல்லோருடனும் பழக முடியாமலும் குற்ற உணர்வுகளால் தனிமைப்பட்டு போவதாகவும் சிசீலியா எழுதுகிறாள். அந்தக் குழுவைவிட்டால் பழுகுவதற்கு வேறு நாதியில்லை என்றொரு நிலையை உருவாக்குவதுதானே அக்குழுவின் பலம்!

வியட்நாமை உண்டு, இல்லையென அமெரிக்கா பாடுபடுத்திக் கொண்டிருந்தபோது சிசீலியாவின் தாய் கருவுற்றாள். சைத்தான் சங்கத்தில் படித்த வைத்தியர்களும் உண்டு. அவர்கள் அக்கருவின் வளர்ச்சியை கண்காணித்து வந்தனர். ஆண் சிசுவா, பெண் சிசுவா என கண்டறியும் அம்னியோசென்டஸிஸ் முறையில் வளரும் கரு பெண் என்று கண்டு கொண்டனர். சைத்தானுக்கு சந்தோஷம் தரும் விஷயம் என்று ஊகித்துக் கொண்டனர். கரு முழுவளர்ச்சியடையும் முன்னரே குறைப்பிரசவத்திற்கு ஏற்பாடுகள் ஆகின. அதற்கான மருந்து, மாத்திரைகள் சிசீலியாவின் தாய்க்கு கொடுக்கப்பட்டன. குழந்தை எட்டோ, ஒன்பதோ மாதமாக இருக்கும்போது தாயுடலிலிருந்து வெளியேறிவிட்டது. சிசீலியா நினைவு கூர்கிறாள்; அந்தக் குழந்தை சிறிதாக இருந்தது. இன்னும் உயிருடன்தான் இருந்தது என்று. அன்று இரவுதான் சிசீலியாவின் ரத்தத்தை சுண்ட வைக்கும் அந்த நிகழ்ச்சி நடந்தது. அச்சிசு சைத்தானுக்காக காவு கொடுக்கப்பட்டது. எல்லோர் முன்னிலையிலும் தலை துண்டிக்கப்பட்டு சிசுவின் சதை பிரசாதமாக கொடுக்கப்பட்டது. (இதை வாசித்த எனக்கு வாந்தியுடன் தலை சுற்றல் கண்டது).

இதையெல்லாம் கண்ணுறும் அபாக்யவதியான சிசீலியா என்ற சிறு பெண்ணின் உள்ளம் என்ன பாடுபட்டிக்குமென சற்றே எண்ணிப் பாருங்கள்.

வியட்நாமிலிருந்து திரும்பிய தந்தையிடம் விலாவரியாக இதையெல்லாம் அச்சிறுமி சொல்லியிருக்கிறது. அவர் வேவொரு கொலைக் களத்திலிருந்து திரும்பியிருக்கிறார். குழந்தையின் பிதற்றல் என்று ஒதுக்கிவிட்டார். அவள் தந்தைக்கு பொதுவாகவே அவள் அம்மாவின் குடும்பம் கொஞ்சம் கிறுக்கு என்ற எண்ணமுண்டு. எனவே சிசீலியா இம்மாதிரி ஏதாவது கிறுக்குத் தனமான தாயின் முலையைப் பார்த்துவிட்டு பெரிதுபடுத்துகிறாள் என விட்டுவிட்டார். உதாரணமாக சிசீலியா சைத்தான் வழிபாட்டில் மலம், மூத்திரமெல்லாம் சில சமயம் பிரசாதமாக கிடைக்குமென்று சொல்லியிருக்கிறாள். யாரால்தான் இதையெல்லாம் நம்பமுடியும்? அவள் தந்தையைச் சொல்லி குற்றமில்லை.

சில மாதங்களில் அவள் தந்தைக்கு மாற்றலாகி வேறொரு மாநிலத்தில் வேலை கிடைத்தது. சைத்தான் சங்கத்தின் தொடர்பும் அறுந்தது. இச்சடங்குகள் ஏற்படுத்திய மன வடுக்கள் மறைய பல வருடங்கள் ஆகியிருக்கின்றன. பெரிய பெண்ணாகி, கல்லூரி சென்று படித்து, நல்ல

www.tamilarangam.net

கணவனைப் பெற்று குடும்பம் நடத்த ஆரம்பித்த பின்தான் இத்தகைய கொடுமைகளை மூடி, மூடி வைத்திருக்கும் வரை உலகிற்கு தெரியப்போவதில்லை என்ற மன உறுதியுடன் மாதர் மலருக்கு புனைப்பெயரில் ஒரு நீண்ட கட்டுரையை எழுதியிருக்கிறாள்.

இதைப் படித்தபின் பல நாட்களுக்கு எனக்கு தூக்கம் கொள்ளவில்லை. என் கஷ்டம் தாங்காத என் கணவர் - உன் மனதில் ஏதோ பெரும் பாரம் இருப்பது போலிருக்கிறதே, என்னிடம் சொல்லி இறக்கிவையேன் - என்று சொன்னவுடன், உங்களுக்கு சொன்ன மாதிரியே அவருக்கும் சொன்னேன். அவரும் ரொம்ப வருத்தப்பட்டார். கிணறு வெட்ட பூதம் கிளம்பிய கதையாக ஒன்று சொல்லப்போய் தொடர்பான பல விஷயங்கள் எங்கள் பேச்சில் வெளிவந்தன.

முதலாவது ஆண்கள் கையில் பெண்கள் படும்பாடு. ஏதோ பெண்ணாக பிறந்துவிட்டதே ஒரு பாபச் செயல்போல் ஆணாதிக்க சமூகத்தில் ஏற்பட்டிருக்கும் நியதி. சிசு பெண்ணாக பிறந்த பாவத்திற்காகவே கொல்லப்படும் கொடுமை ஆண்டாண்டு காலமாக சைனாவிலும், இந்தியாவிலும் நடைபெற்று வந்திருக்கிறது. இது சைத்தானுக்கு பிடிக்குமோ என்னவோ ஆண்களுக்கு பிடித்திருக்கிறது.

கனகம், இது கதைக் காட்டுகிறது என்றார் என் கணவர். மேம்போக்காக மனிதன் மனத்தளவில் முன்னேற்றம் அடைந்துவிட்டது போல் தோன்றினாலும் அவனது காட்டு மிராண்டித்தனம் முழுவதையும் அடங்கிவிட்டதாக சொல்ல முடியாது என்றேன் நான்.

நீ காட்டு மிராண்டித்தனம் என்று சொன்னவுடன், இனவெறியன் ஹிட்லர் செய்த கொடுமைகள் ஞாபகத்துக்கு வருகின்றன. விஷப்புகையிட்டு கொன்று குவித்த யூத, போலந்து நாட்டவரின் சடலங்களிலிருந்து கொழுப்பு எடுத்து சோப்பு செய்து பார்த்தானாம் ஹிட்லர், என்றார் என் கணவர்.

பேய்கள் அரசாண்டால் பிணம் தின்னும் சாத்திரங்கள்... என்று சரியாகத்தானே சொன்னான் பாரதி என்றேன் நான்.

அஸ்தகா என்று சொல்லப்படும் பண்டைய செவ்விந்திய கலாச்சாரத்தில் போரில் தோற்று கொண்டு வரப்படும் அடிமைகளின் ஈரலை, அவன் உயிரோடு இருக்கும்போதே, தோண்டி எடுத்து தெய்வங்களுக்கு ஆராதிக்கும் பழக்கம் ஒன்று இருந்ததாக படித்திருக்கிறேன் என்றார் என் கணவர்.

மதத்தின் பெயரால், சாதியின் பெயரால் மனிதன், மனிதனுக்கு இழைக்கும் கொடுமைகள் போல் வேறு எங்கும் காணமுடியாது. கடவுளின் பெயரால் நடத்தப்படும் "புனிதப் போர்களில்" மாண்டவர்களின் எண்ணிக்கை இரண்டு உலகப் போர்களிலும் இறந்தவர்களை விடவும் கூடுதலானது.

பேசிக் கொண்டே டி.வியைத் திருப்பினோம். அன்றைய செய்திக்காக முஸ்லீம்-கிறிஸ்தவ மதச்சண்டை பழைய யுகோஸ்லாவியாவில் உச்சத்திலிருந்த சமயம் அது. போஸ்னிய நாட்டு முகமதிய பெண்கள் மானாவாரியாக செர்பியநாட்டு கிறிஸ்தவ போர் வீரர்களால் கற்பழிக்கப்பட்டு செஞ்சிலுவைச் சங்கத்தில் சரண் புகுந்திருந்தனர். ஐம்பதாயிரத்திற்கும் மேல் என்று செய்தி சொன்னது. கருச்சிதைப்பு என்பது முகம்மதிய கோட்பாட்டிற்கு ஒத்து வராததால் இப்பெண்கள் அகதி முகாம்களில் வாயும். வயிறுமாக... எவனோ ஒருவனின் கருவை சுமந்து கொண்டு, பட்ட கொடுமையை மறக்க முடியாமல் அதையே சிலுவைபோல் சுமந்து கொண்டு...

நாங்கள் பேசப் பேச இருபதாம் நூற்றாண்டில் அமெரிக்காவில் நடைபெறும் சைத்தான் வழிபாடு ஆச்சர்யமாகவே படவில்லை. அது வெவ்வேறு பெயர்களில், வெவ்வேறு விதமாக உலகின் பல பாகங்களில் நடைபெற்று வருவது புரிந்தது.

மனிதன் நாகரீகம் அடைந்துவிட்டான் என்று நாம் நினைத்துக் கொண்டிருப்பதுதான் பேதைமை என்றும் புரிந்தது.

ஏதோ பரிணாமம் என்பது கீழ் நிலையிலிருந்து மேல் நோக்கி வளர்வது என்று எண்ணியிருந்தோம்.

ஆனால் சிசீலியாவின் கட்டுரையை வாசித்த பிறகுதான் புரிந்தது. காலம் என்பது முன்னே பாயும் அம்பு அல்ல, அது வெறும் வளையம் என்று!

www.tamilarangam.net



## கரையாத நிழல்கள்

– கே.வி. ராஜேந்திரன்.

நகரும் நிழலை
மிதிக்க முடியாமல் பாதம் தள்ளாடுகிறது
மனசோ நிஜத்தை
நையாண்டி செய்து தாறுமாறாய் சிரிக்கிறது.
நிஜமாகவே
நேசத்துடனான புரிதலை புரிந்து கொள் நிழலே என
பாதம் மேலும் போராடுகிறது.
இப்படியே
இருள் வந்து சேர்ந்தது.
களைத்துப்போன கால்கள்
சம்மணமிட்டு உட்கார்ந்தது.
நிழல் சொன்னது
நான் உன்னிலிருந்து தொடங்கி
உன்னிலேயே முடிகிறேன்
என்னை வேறொன்றாய் நினைத்து
தொட முயன்றால் விடுவேனா?
நேசம் என்பது எப்போதும்
கரையாத நிழல்கள்.

---

## ஜெயமோகனின் சமீப இரு நூல்கள்

1. மண் - சிறுகதைத் தொகுப்பு : ரூ. 50
ஸ்நேகா, 348இ டிடிகேசாலை, ராயப்பேட்டை, சென்னை-14.

2. நாவல் - கட்டுரைத்தொகுப்பு: ரூ.35
வெளியீடு : மடல் (விற்பனை: திலிப்குமார், மந்தைவெளி சென்னை-28.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

KANAVU - TAMIL QUARTERLY - PRIVATE CIRCULATION ONLY - Rs. 8-00

# கண்ணாடி

தேவதேவன்

நலுங்காத நீரில்
நான் உம்மைக் காட்டினேன்;
காலைப் பனித்துளியில்
நான் உம்மைக் காட்டினேன்;
எப்போதும் நான் உம்மைப் பிரதிபலித்தேன்.
நீரோ உம்மை ஒப்பனை செய்து கொள்வதற்கே
என்னை அணுகினீர்.
எல்லாம் அறிந்தவர்போல்
எப்போதும் உமக்கு எண்ணம்.
நீர் கண்டதெல்லாம் உம் மூஞ்சியைத்தானே.
கண்டதின் அடிப்படையில் நீர் கதைத்ததுவும்
உம் மூஞ்சியைத் தவிர வேறென்ன?
என்னை அறிந்தீரா?
கனத்த ஓர் மவுனம்தான் நான் என
உதறினீர்.
உலகை ஒரு கேளிக்கைக் கூடமாகவும்
அஞ்சி ஒளிபவர்களின் புகலிடமாகவும்
மாற்றினீர். சாதனைகள் செய்யத் துடித்து எழுந்து
அப்புறம் சலிக்கிறீர்.
செத்துத் தொலைக்கலாம்; இல்லை
வாழ்ந்தே தொலைக்கலாம் என்று.
இன்று உம் முன்னால் நான் ஒரு
நட்சத்ரம் நிறைந்த ஆகாயம்.
அசக்தனான நீர்தான் இப்போது
உமது அனுபவங்களின் சவ ஊர்வலத்தை
என்மீது நடத்துகிறீர்; நானல்ல.
இன்று உம் உயிராசையும் உம்மைக் கைவிட்டிருக்க
அவளம்பிக்கையின் தளர்ச்சியிலிருந்து
உம்மைப் பற்றி இழுக்கிறது.
கருணை, அழகு எனும் பதற்றல்களுக்கெல்லாம்
அகப்படாத ஓர் அற்புதம்!
அதை நிகழ்த்துவதும் நீர்தான் என்று
முடிவு செய்ய முடியாதபடிக்கு இருக்கிறதா அது?
உடனே நான்தான் அது என்ற
முடிவுக்கு வருகிறீரா? வேண்டாம்.
எந்த ஒரு முடிவுக்கும் நீர் வரவேண்டாம்.
உம் நினைவிலும் கூட எனக்குச் சிலை வைத்துவிடாது
போம் அதைப் பின் தொடர்ந்து.
உமது முடிவுகளிலும் உமது சிலைகளிலும்
தெரியப் போவது உம் மூஞ்சிதான்; நானல்ல.



Laser Park, Coimbatore-641 002. Ph: 448898

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்